# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு2028 ஐப்பசி22 சனிக்கிழமை (08-11-1997) SANJEAVY-Regenerative Tamil Weeklyசிகரம்:23


# அமெரிக்க நீதிமன்றத்தில் புலிகள் வழக்குத் தாக்கல்!

## தடையை ரத்துச்செய்ய கோரி மனு

நியூயோர்க், நவம்பர் 8

தமிழீழ விடுதலைப் புலிகள் இயககத்தை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்து அமெரிக்க அரசு விடுத்திருக்கும் பிரகடனத்தை ஆட்சேபித்து தமிழீழ விடுதலைப் புலிகள் வாஷிங்டனில் உள்ள மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

அமெரிக்காவின் முன்னாள் சட்ட மா அதிபரும், விடுதலைப்புலிகள் அமைப்பின் சட்ட பிரதிநிதிகளில் ஒருவருமான ராம்சேக் கிளார்க், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி விஸ்வநாதன் உருத்திரகுமார் மற்றும் இரு சட்டப் பேராசிரியர்கள் ஆகியோருடன் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

சிங்கள மேலாதிக்கத்தில் நடைபெறுகின்ற இலங்கை அரசாங்கத்தின் பாரிய வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்டு—

அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டு—

திட்டமிடப்பட்ட பாரபட்சங்களுக்கு உள்ளாக்கப்பட்டு—வருகின்ற தமிழ் மக்களின் தார்மீகப் பிரதிநிதியாகப் போராடி வருகின்ற விடுதலைப் புலிகள் இயக்கம் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு எந்த வித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தவில்லை.

அடக்கப்பட்ட ஒரு சமூகத்தின் இறுதி தற்காப்பு ஆயுத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ அலுவலகம் மீது ஷெல் வீச்சு!

மட்டக்களப்பு, நவ. 8

மட்டக்களப்பு ஆரையம்பதியில் உள்ள ரெலோ அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரவு ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

வாவிக்கு அப்பால் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலினால் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-21)

## 2 மினி பஸ்கள் மோதின ஐவர் காயம்

யாழ்ப்பாணம், நவ 8

கட்டைப்பிராயில் இரு மினி பஸ்கள் மோதியதில் ஐவர் காயமடைந்தனர்.

அச்சுவேலி, பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கு ஒன்றின் பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்த மினிபஸ்களே மோதின என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தோரில் யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவரும் அடங்குவார்.

வி. கேசவன் என்ற இம் மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-9)

## தடையை நீக்குவதற்கு புலிகள் அரசியல் ரீதியாகவும் முயற்சி

### புலிகளின் சட்ட ஆலோசகர் நேற்றுத் தெரிவிப்பு

வாஷிங்டன், நவ. 8

அமெரிக்க நீதிமன்றம் நியாயமான நீதியை கடந்த காலங்களில் வழங்கி உள்ளது. இந்த அடிப்படையில் புலிகளும் நீதி கேட்டு மனுச் செய்துள்ளனர். பிரகடனம் செய்யப்பட்ட பட்டியலில் இருந்து விடுதலைப்புலிகள் அமைப்பின் பெயரை நீக்குவதற்கு நீதிமன்றம் மூலம் மட்டும் அல்லாது அரசியல் ரீதியாகவும் முயற்சி எடுத்துள்ளோம்.

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர்களில் ஒருவரான விஸ்வநாதன் உருத்திரகுமாரன் பி. பி. சிக்கு நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமெரிக்கா ஒரு பயங்கரவாத இயக்கமாக பிரகடனம் செய்த சட்டம், அந்தப் பிரகடனத்தை மீளாய்வு செய்வதற்கு நீதிமன்றத்துக்கு அதிகாரம் அளித்துள்ளது.

அந்த அடிப்படையில் இந்த பிரகடனத்தை மீளாய்வு செய்யும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் வாஷிங்டனில் உள்ள நீதிமன்றத்தில் மனுச் செய்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தாங்கள் ஒரு பயங்கரவாத இயக்கம் அல்ல என்றும்—

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்றும்—

தமிழ்மக்களை ஸ்ரீலங்கா அரசின் இனவெறித்தனமான நடவடிக்கையில் இருந்து பாதுகாப்பதற்காகவே தாங்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் அதிகாரியின் ஜீப் மீது பஸ்ஸினால் மோத முயன்றாரா?

### சாரதி பொலீஸாரால் தடுத்து வைப்பு

மட்டக்களப்பு, நவ. 8

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் பயணம் செய்து கொண்டிருந்த உதவிப் பொலீஸ் அதிபரின் வாகனம் மீது மோத முயன்றதாகக் கூறப்படும் தனியார் பஸ் சாரதி ஒருவர் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம் பெற்றது.

கல்முனை உதவிப்பொலீஸ் அதிபராக இடமாற்றம் பெற்று வந்த பி. இந்திரதாசவே பிரஸ்தாப பொலீஸ் அதிகாரி ஆவார்.

சம்பவ தினம் இவர் மருதமுனை பொலீஸ்காவல் நிலையத்தை பார்வையிடச்சென்ற சமயமே பயணிகள் இன்றி முன்னால் வந்து கொண்டிருந்த பஸ் இவரது வாகனம் மீது மோத முயன்றதாகக் கூறப்படுகிறது. (இ-21)

## 10 மின்கம்பங்கள் ஒரே இரவில் தகர்ப்பு!

### 50 கிராமங்களுக்கு மின்சாரம் இல்லை

மட்டக்களப்பு. நவ. 8

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் 10 மின்கம்பங்கள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் குண்டுவீசித் தகர்க்கப்பட்டன.

பாலமுனை, மாங்காடு, களுதாவளை, தேற்றாத்தீவு ஆகிய இடங்களிலுள்ள மின்கம்பங்களே தகர்க்கப்பட்டுள்ளன.

இதனால் காத்தான்குடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள சுமார் 50 கிராமங்களில் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. (இ-21)

## வடபகுதிக்கு புதிதாக 1,355 ஆசிரியர்கள்

### விரைவில் நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 8

வடக்கில் உள்ள பாடசாலைகளுக்குப் புதிதாக ஆயிரத்து 355 ஆசிரியர்களை நியமிக்க கல்விச் சேவைகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா மேற்கண்ட தகவலை சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் இந்த ஆசிரிய நியமனங்களை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சதீஸ்கரனின் பல்கலைக்கழக அனுமதியை ரத்துச்செய்ய முடிவு

கொழும்பு, நவ. 8

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவன் எஸ். வரப்பிரகாஷின் மரணம் தொடர்பாகப் பொலீஸாரால் தேடப்பட்டு வரும் சிரேஷ்ட மாணவர் பி. சதீஸ்கரனின் பல்கலைக்கழக அனுமதியை ரத்துச் செய்வது என்று பல்கலைக்கழக ஒழுக்காற்று நடவடிக்கைக்குழு தீர்மானித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக ஒழுக்காற்று நடவடிக்கைக்குழு நேற்றுக் கூடி இத்தீர்மானத்தை எடுத்ததாக பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தனா தெரிவித்தார்.

தேடப்பட்டுவரும் மாணவன் சதீஸ்கரன் மீது 5 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை —

மேற்படி மாணவன் நாட்டை விட்டுத் தப்பி ஓடுவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## யுத்தக் கைதிகளுக்கு உறவினர்கள் உணவு அனுப்ப விடுதலைப் புலிகள் அனுமதி

மட்டக்களப்பு, நவ. 8

தமிழீழ விடுதலைப் புலிகள் வசம் உள்ள யுத்தக் கைதிகளுக்கு அவர்களது உறவினர்கள் உணவு மற்றும் உடுபுடைவைகளை அனுப்ப விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதனை அடுத்தே செஞ்சிலுவைச் சர்வ

(6ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி

மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும். சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஒவ்வொரு நாளும் காலை தொடக்கம் மாலைவரையும் கிடைக்கும். தொடர்பு: Lucky Farm Sales Centre, Palaly Road, Thirunelvely, Jaffna. [51022]

### தேவை

நல்ல சமையல் அனுபவம் தெரிந்தவர்கள் தேவை. தொடர்பு: இ. குகன், இல. 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [51026]

### மொழிபெயர்ப்பாளர்

ஜேர்மன் பாஷை படிப்பித்தல், மொழிபெயர்ப்பு ஆங்கிலம், தமிழ் என்பவற்றிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சபாநாயகம், ''றாடிக்கொட்'' 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். [51028]

### நூலகம்

தரமான நூல்களை வாசித்து வாசிப்புப் பழக்கத்தை விருத்திசெய்ய நாடுங்கள்: லிங் லெண்டிங் லைபிரெறி 41, தபாலக வீதி, சாவகச்சேரி, Ling Lending Lirbary. [50932]

### திருமணசேவை

சகல நிலைகளிலும் பொருத்தமான மணமக்கள் தேர்வுக்கு விரைவு திருமணங்களுக்கு நம்பகமான சேவை நோக்குடைய எமது சேவையைநாடுங்கள். 'சேவை நம்பகம்' விவாக சேவை, வைமன் வீதி, நல்லூர். [51020]

### வாடகைக்கு

நல்லூர் பருத்தித்துறைவீதியில், நல்லூர் கோயில் முன்புறத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில்இல.272இல் உள்ள மாடி வீடு சகல வசதிகளுடன் வாடகைக்குஉண்டு. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். (50952)

### தவறிவிட்டது

ஒரு தொகைப் பணமும் முக்கிய ஆவணங்களும் அடங்கிய பிறவுண் கலர் பேர்ஸ் ஒன்று 29-10-97 இல் மானிப்பாய்ச் சந்திக்கும் மூர்த்தநாயனார் கோயிலுக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ப. கதிர்காமநாதன், V. S. K, மானிப்பாய். [50963]

## வடமராட்சி வீதிகளில் வெள்ளம்

வடமராட்சிப் பிரதேசத்தில் அடைமழைபெய்து வருகிறது.

சேதமடைந்துள்ள பல்வேறு சிறு வீதிகளில் உள்ள குழிகளில் வெள்ளம் தேங்கியுள்ளதால் மக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

---

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வரைவுள்ளது

## கேள்வி விண்ணப்பம் கோரல்

**24" x 18" ( ½ Demy )**
**சிலிண்டர் இயந்திரம்**

எமது சங்கப் பதிப்பகத்திற்குத் தேவையான 24'' X 18'' (½ Demy) சிலிண்டர் இயந்திரம் வாங்கப்படுவதற்கான கூறு விலைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சீல் வைக்கப்பட்டு, பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம், 291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: **1997 - 11 - 20** ஆகும்.

(சி/1987) — பொது முகாமையாளர்

---

## இலவச கண் சிகிச்சை முகாம்

**09—11—1997** ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை வேலணை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மேற்படி சிகிச்சை, சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி யோகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. சிகிச்சைபெறவிரும்புவோர் மேற்படி பாடசாலைக்கு காலை 9-00 மணிக்கு வருகைதரவும்.

தலைவர்
**யாழ். லயன்ஸ் கழகம்**

(சி/1993)

---

பருத்தித்துறை பிரதேசசபை
1998 ஆம் ஆண்டுக்கான

## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் குத்தகைகள் சார்பில் 01-01-98 ஆம் திகதி தொடக்கம் 31-12-98 ஆம் திகதி வரைக்கான காலப்பகுதிக்குரிய கேள்விகள் 20-11-97 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் பருத்தித்துறை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 19-11-97 ஆம் திகதி பி.ப3-00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கமுடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய கேள்விப் பணமும் பணமாக செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் 'விசேட ஆணையாளர் பருத்தித்துறை பிரதேசசபை' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் இவ் அலுவலகத்திலும், குடத்தனை, செம்பியன்பற்று உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விவரம் | | ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1) மந்திகை மாட்டிறைச்சிக்கடை | ரூபா | 1,50,000 | 3,000.00 | 150.00 |
| 2) மானான்டி மாட்டிறைச்சிக்கடை | ரூபா | 50,000 | 3,000.00 | 150.00 |
| 3) நாகர்கோயில் மாட்டிறைச்சிக் கடை | ரூபா | 6,000 | 1,500.00 | 150.00 |
| 4) செம்பியன்பற்று மாட்டிறைச்சிக்கடை | ரூபா | 5,000 | 1,500.00 | 150.00 |
| 5) தாளையடி மாட்டிறைச்சிக்கடை | ரூபா | 8,000 | 1,500.00 | 150.00 |
| 6) மந்திகை ஆட்டிறைச்சிக்கடை | ரூபா | 10,000 | 1,500.00 | 150.00 |
| 7) அல்வாய் நாவலடி ஆ. இ. கடை | ரூபா | 15,000 | 1,500.00 | 150.00 |
| 8) மந்திகை சந்தை | ரூபா | 65,000 | 1,500.00 | 150.00 |
| 9) மானான்டிச் சந்தை | ரூபா | 6,000 | 1,500.00 | 150.00 |
| 10) கெருடாவில் சந்தை | ரூபா | 600 | — | 150.00 |
| 11) கற்கோவளம் சந்தை | ரூபா | 3,000 | — | 150.00 |
| 12) மருதங்கேணிச் சந்தை | ரூபா | 4,000 | — | 150 00 |

ஆ. சிவசுவாமி,
விசேட ஆணையாளர்.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி. 01-11-1997.

(சி/1984)

---

## வெள்ளி விழா
## சிறப்புற வாழ்த்துகின்றோம்

**அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை**

சைவசமயத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து

**13-11-97 அன்று 25 ஆண்டு நிறைவு விழா**

சிறப்பாக நடைபெற நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்

**S. T. பந்தல் சேவை சுவாமி அலங்காரம்**

★ முத்து மணவறை ★ பூமணவறை

முதலியவற்றுக்கு நாடவேண்டிய இடம்:

S. தில்லைநாதன் ஐயா
விமலேந்திரன் ஐயா
38, அரசடிப்பிள்ளையார் வீதி,
நாயன்மார்கட்டு.

S. தில்லைநாதன் ஐயா
சுரேந்திரன் ஐயா
இல. 50, வவுசற் பிளேஸ்,
கொழும்பு - 6.
T. P. 078—46447

(சி-1988)

---

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
(தேசிய பாடசாலை)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் கல்லூரி தம்பர் மண்டபத்தில் 1997-11-14 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு (புதிய நேரம்) நடைபெறும்.

அங்கத்துவம் பெற்ற சகலரையும் தவறாது வருகை தருமாறு அழைக்கின்றேன்.

- க. இராசதுரை
அதிபர்.

1997 - 11 - 08 (சி/1995)

---

## திருமறைக் கலாமன்றம்
**CENTRE FOR PERFORMING ARTS**

அண்மையில் ஐரோப்பிய கலைப்பயணம் மேற்கொண்ட
"வடலிக்கூத்தர்" பங்குகொள்ளும்
**திருமறைக் கலாமன்றம்**
வழங்கும்

## ஜெனோவா

[ கூத்து, இசை, நவீன நாடகம் ]

நாள்: 09 - 11 - 1997 (ஞாயிறு)
நேரம்: பி. ப. 4-00 மணி (இலங்கை நேரம்)
இடம்: சென். பற்றிக்ஸ் கல்லூரி மண்டபம்.

பிரவேசம்: இலவசம்

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி-1991)

---

## விசேட பொதுக்கூட்டம்

**யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்**
(வ-து) பதிவு. இல. NJ/01

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 12-11-97 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு சங்கப் பணிமனையில் தலைவர் திரு.சி. வேதாரணியம் தலைமையில் நடைபெற இருப்பதால் சகல அங்கத்துவ லொறி உரிமையாளர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

1. 01-12-97இல் நடைமுறைக்கு வர இருக்கும் யாழ். செயலக கேள்விக் கோரல் சம்பந்தமாக ஆராய்தல்.
2. உபதலைவர், உபசெயலாளர் தெரிவு
3. புதிய பதிவுகள் லொறி உரிமை மாற்றம்
4, பிறவிடயங்கள்

S. S. மரியநாயகம்
செயலாளர்

(51039)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவுக் கடலில் பட்டப்பகலில் தகர்க்கப்பட்ட புலிகளின் கப்பல்!




கடந்த ஞாயிற்றுக் கிழமை, 2 ஆம் திகதி காலை 10 மணி.

முல்லைக் கடலில் தரித்து நின்ற புலிகளின் ஆயுதக் கப்பலை விமானப்படை தாக்கி அழித்ததாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

ஆளில்லா உளவு விமானத்தை அனுப்பி கப்பலைப் படம் எடுத்த பின்னர், விமானங்களை அனுப்பி குண்டு வீசி கப்பலைத் தகர்த்ததாகவும் —

வெடிகுண்டுகள் ஆயுதங்களுடன் தரித்து நின்ற கப்பல் விமானக்குண்டு வீச்சினால் வெடித்துச் சிறிதயதாகவும் —

அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

250 கிலோ கிராம் எடையுடைய எட்டுக் குண்டுகள் விமானப் படையினரால் போடப்பட்டதாகவும் —

அதில் ஆறு குண்டுகள் கடலில் வீழ்ந்துவிட்டதாகவும்—

கப்பலில் வீழ்ந்த இரண்டு குண்டுகளினால் கப்பல் வெடித்துச் சிதறியதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் கப்பல் தகர்க்கப்பட்டதோ —

அல்லது அதில் இருந்த 14 புலிகள் உயிரிழந்ததோ —

சர்ச்சைக்கு இடமில்லாத உண்மையான தகவல்கள் என்பது இப்போது ஓரளவு ஊர்ஜிதமாகியிருக்கின்றது.

ஆனால் புலிகள் கப்பலில் தாம் ஏற்றிவந்த ஆயுதங்கள் அனைத்தையும் கப்பல் தகர்ப்பில் இழந்து விட்டார்கள் எனவும் —

புலிகளுக்கு இது பேரிழப்பு எனவும் —

கொழும்பில் அடித்து முழக்கப்படுவதை நம்பலாமா? இதுதான் பாதுகாப்பு ஆய்வாளர்கள் இன்று எழுப்பும் கேள்வி.

கப்பல் தகர்ப்புச் சம்பவம் இலங்கைக் கடற்பரப்புக்குள் — முல்லைக் கரையை அண்டி — கடற்பகுதியில் — பட்டப்பகல் வேளையில் நிகழ்ந்திருக்கின்றது.

கடும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வன்னி யுத்தக் களத்தை அண்டிய பிரதேசத்தில் ஆயுதங்களுடன் ஒரு கப்பலைக் கொண்டுவந்து பட்டப்பகலில் நிறுத்தி வைத்து, ஆயுதங்களை இறக்குவதற்கு புலிகள் ஒன்றும் முட்டாள்கள் அல்லர் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

தமது ஆயுதக் கப்பல் கிழக்குக்கரைக்கு வந்தால் கூட சர்வதேச கடற்பரப்பில் வைத்தே தமது அதிவேக சிறுபடகுகளுக்கு அவற்றை மாற்றி, விமானங்கள், கடற்படைக் கப்பல்கள் போன்றவற்றின் ராடர்களுக்கு போக்குக் காட்டிவிட்டு அதிவேகப் படகுகள் மூலம் அவற்றைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் திறன் புலிகளிடம் உள்ளது.

ஆயுதக் கப்பலை முல்லைக் கரைக்கு அண்டிய பிரதேசத்துக்குக் கொண்டுவர புலிகள் விரும்பினால் கூட, பட்டப்பகலில் அதனைக் கரையை அண்டிய பிரதேசத்துக்குக் கொண்டு வரமாட்டார்கள். வன்னியை அண்டிய கடற்பகுதியில் கடற்படைக் கப்பல்கள் தாறுமாறாக ஓடித் திரிவதும், விமானங்களும், ஹெலிகளும் அடிக்கடி பறந்து திரிவதும் புலிகளுக்குத் தெரியாததல்ல.

ஆகவே, புலிகளின் ஆயுதக் கப்பல் கிழக்குக் கரைக்கு வந்தாலும், பொழுது சரிந்து இருள் விரிந்து கடலைத் தழுவும் நேரம் வரை சர்வதேசக் கடற் பரப்பில் கப்பல் நகர்ந்து கொண்டிருக்கும். தவிர, இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் நுழையாது. இருள் சூழத் தொடங்கியதும் கப்பல் உள்ளே வரும். இருளோடு இருளாக ஆயுதங்கள் மளமளவென்று இறக்கப்பட்டு கரைக்குக் கொண்டு செல்லப்படும். பொழுது விடியுமுன்னரே கப்பல் மறுபடியும் சர்வதேச கடற்பரப்புக்குச் சென்று விடும். இதுதான் புலிகளின் உத்தி.

கப்பலில் இருந்து ஆயுதங்கள் இறக்கப்பட்டதான காட்சிகள் ஏதும் அன்றைய தினம் காலை 10 மணிக்குப் பின்னர் உளவு விமானம் எடுத்ததாகக் கூறப்படும் படங்களில் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

1996 முற்பகுதியிலும் முல்லைத்தீவு கடற்பகுதியில் வைத்து புலிகளின் ஆயுதக் கப்பலான 'ஹொரிசோன்' இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டது. அதில் ஐந்து புலிகள் பலியானார்கள். அறுபது கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைப் புலிகள் இழந்தார்கள்.

இந்தியக் கடற்படை ஹொரிசோன் கப்பலை மோப்பம் பிடித்து, பின் தொடர்ந்து, ஸ்ரீலங்கா கடற்படைக்கு தகவல் கொடுத்ததாலேயே ஆயுதங்களை இறக்க முன்னர் இரவோடு இரவாக அக்கப்பலை இலங்கைக் கடற்படையால் அழிக்க முடிந்தது.

அத்தகைய கப்பலை ஆயுதங்களுடன் இழந்த பின்னர்-மீண்டும் ஒரு தடவை தமது ஆயுதக் கப்பலை—பட்டப்பகலில் சர்வதேச கடற்பரப்புக்குள் இருந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் கொண்டு வந்து நிறுத்தி, இலங்கைப் படைகளின் தாக்குதலுக்கு இலக்காக விடுவதற்கு புலிகள் ஒன்றும் சிறுபிள்ளைத் தனமாகச்செயற்படுபவர்கள் அல்லர்.

அப்படியானால்—

பொழுது விடிந்த பின்னர் நண்பகல் அண்மிக்கும் வரை கப்பல் முல்லைக் கடற்பரப்பில் தரித்து நின்றிருந்து, தாக்குதலை வேண்டிக் கட்டிக் கொண்டதற்குக் காரணம் என்னவாக இருக்க முடியும்?

அதற்குப் பல ஊகங்கள் கூறப்படுகின்றன.

(i) அது புலிகளின் ஆயுதக் கப்பலாக இல்லாமல் வேறு ஏதேனும் கப்பலாகஇருந்திருக்கலாம்.

(ii) கப்பல் தாக்கப்பட வேண்டும் என்பதை புலிகள் விரும்பியிருக்கலாம்.

(iii) கப்பலை பொறியாகப் பாவித்து கடற்படையினரை நெருங்கி வரச்செய்து அவர்களைத் தாக்குவதற்கு புலிகள் திட்டமிட்டிருக்கலாம்.

(iv) கப்பல் பழுதடைந்த காரணத்தால் குறிப்பிட்ட நேரத்தில் திரும்பிச் செல்ல இயலாமல் சிக்கியிருக்கலாம்.

இந்த நான்கு காரணங்களில் முதலாவது ... தவறு என்பது ஓரளவு ஊர்ஜிதமாகி விட்டது. தகர்க்கப்பட்டது புலிகளின் கப்பல் என்பது நிச்சயம்.

எனவே, கப்பல் தாக்கப்பட வேண்டும் என்பதைப் புலிகள் விரும்பியிருக்கலாம் என்பதும் கப்பலைப் பொறியாகப் பாவித்து கடற்படையைத்தாக்க புலிகள் திட்டமிட்டிருக்கலாம் என்பதும் காரணமாக இருக்கலாம்; அல்லது கப்பல் பழுதடைந்தது காரணமாகஇருக்கலாம்.

எது எப்படியென்றாலும், கப்பலில் இருந்த ஆயுதங்கள் இறக்கப்பட முன்னர் அதனைத் தாக்கி அழித்துவிட்டோம் என்று படைத்தரப்பில் கூறுவது முழக்கணக்கில் பூச்சுற்றும் வேலை என்கின்றது கொழும்புப் பத்திரிகை ஒன்று.

ஆயுதங்கள் முழுவதும் இறக்கப்பட்டுவிட்டன என்றே தெரிகின்றது எனக் கூறினார் கொழும்பில் உள்ள முன்னாள் தமிழ் ஆயுதக் குழு ஒன்றின் சிரேஷ்ட தலைவர் ஒருவர்.

இலங்கை அரசுப் படைகளுக்கு 32 ஆயிரத்து 400 மோட்டார் ஷெல்களை ஏற்றி வரும்போது சர்வதேச கடற்பரப்பில் வைத்து கப்பல் ஒன்று கடந்த ஜுலையில் காணாமற் போனதல்லவா? அக்கப்பலை புலிகளே கடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டதும், அக்குற்றச்சாட்டைப் புலிகள் மறுத்ததும் தெரிந்தவையே.

அக்கப்பலை சர்வதேசப் பொலீஸார் தேடி வருகின்றனர். அவர்களின் கைகளில் அக்கப்பல் சிக்க முன்னர் அதனைத் தடயமே இல்லாமல் அழித்துவிட புலிகள் திட்டமிட்டிருக்கக் கூடும் என்ற ஊகம் இப்போது தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கு முன்னர் அக்கப்பலில் ஆயுதங்கள், வெடிமருந்துகள் போன்றவற்றைக் கொண்டு வந்து முல்லைக் கரையில் இறக்குவது —

பின்னர் அதை ஸ்ரீலங்கா கடற்படையின் கண்களில் படுமாறுவிட்டு, பொறியாக வைத்து, கடற்படையினரை நெருங்கிவரச் செய்து அவர்களைத் தாக்குவது —

அதன் பின்பு தடயமே இல்லாமல் கப்பலை அழித்து விடுவது —

எனப் புலிகள் திட்டமிட்டிருக்கக் கூடும். ஒரு கப்பலை தடயமே இல்லாமல் அழிக்க முன்னர், அதைப் பயன்படுத்தி எதிரிக்கு (ஸ்ரீலங்காப் படைகளுக்கு) அதிக அழிவை ஏற்படுத்தினால் என்ன என்று புலிகள் கருதியிருக்கலாம்.

அதன்படி, நள்ளிரவில் ஆயுதங்களை இறக்கிய பின்னர் கப்பலில் வெடிகுண்டுகளைப் பொருத்தி வைத்துவிட்டு கடற்படையின் வருகையை எதிர்பார்த்து புலிகள் காத்திருக்க வேண்டும்.

ஆனால் 'ஐரிஸ்மோனா' பயணிகள் கப்பலை மீட்கப் ... அனுபவம் கடற்படையினருக்கு இருந்ததால் இம்முறை முல்லைக் கடலில் தரித்து நின்ற கப்பலுக்கு கிட்ட அவர்கள் போகவில்லை; எட்ட நின்று விமானப் படைக்குத் தகவல் கொடுத்துவிட்டுதள்ளி நின்று விட்டார்கள்.

இதனால் கப்பலை பொறியாக வைத்து கடற்படையை அழிக்கும் திட்டம் பலிக்கவில்லை. ஆனால் கப்பல் மட்டும் தடயம் இல்லாமல் அழிந்து போனது. அத்தோடு 14 புலிகளும் உயிரிழந்து போனார்கள்.

'பலத்த கண்காணிப்புகள் மத்தியில் முல்லைக் கடலுக்குள் கப்பல் புகுந்திருக்கின்றது; இரவு முழுக்க நின்றிருக்கின்றது; ஆயுதங்களை இறக்கியிருக்கின்றது. அதுவரை கண்ணை மூடிக்கொண்டிருந்த தமது பலவீனத்தை மூடி மறைக்க, கப்பல் தாக்கப்பட்ட செய்தியை பிரமாண்டமான செயலாக விவரிக்கும் முயற்சி நடந்திருக்கின்றது'— இவ்வாறு இராணுவ விமர்சகர் ஒருவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கப்பல் பழுதுற்ற காரணத்தினால்தான் பகலில் அக்கடற் பிரதேசத்தில் அது தரித்து நிற்க வேண்டி நேர்ந்தது என்றால் —

அக்கப்பலுக்குக் காவலாக அந்நேரத்தில் கடற்புலிகளின் வேறு பல படகுகளும் நின்றிருக்கும்; ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை.

எனவே கப்பலை தடயம் இன்றி அழிக்கும் திட்டத்துடன் கடற்படைக்கு புலிகள் வைத்த பொறியே இது என்றும் —

கப்பல் அழிந்தது; கடற்படையினர் சிக்காமல் தப்பினர் என்றும் —

கருதுவதே பொருத்தமானது என்கின்றார் அந்த இராணுவ ஆய்வாளர்.

* * *

## பச்சை கொமாண்டோ பறந்தது ஏனோ?

ஸ்ரீலங்காப் படைகளுக்கு பயிற்சியளிக்க வந்த அமெரிக்க இராணுவத்தின் 'கிறீன் பெரெட்ஸ்' கொமாண்டோ படைப் பிரிவினர் திரும்பிச் சென்று விட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அமெரிக்கக் கொமாண்டோக்கள் ஸ்ரீலங்காத் துருப்புகளுக்கு பயிற்சி வழங்கிய இடங்களில் ஒன்று வீரவிலப் பகுதி காடுகளில் உள்ளது. அப்பிரதேசத்தில் இராணுவ முகாம் ஒன்றும் விமானத் தளமும் திறந்தவெளி சிறைச்சாலை ஒன்றும் உள்ளன.

**பாசுபதன்**

இந்த வீரவிலப் பகுதியில் இருந்து சுமார் இருபது கிலோமீற்றர் தூரத்தில் தான் கதிர்காமம் உள்ளது.

கடந்த பத்தாம் திகதி இரவு கதிர்காமம் பஸ் நிலையம் மீது போராளி குழு ஒன்று திடீர்ப் பாய்ச்சல் நடத்தியது. 19 பஸ்கள் முற்றாக எரித்து நாசமாக்கப்பட்டன; பஸ்நிலையமும் எரிந்து நாசமானது. சுமார் இரண்டு கோடி ரூபாவுக்கு நஷ்டம். இத்துணிகரத் தாக்குதலை புலிகளே நடத்தியிருக்கின்றார்கள்.

இத்தாக்குதல் நடந்த பிரதேசத்துக்கும் அமெரிக்கக் கொமாண்டோக்கள் பயிற்சி வழங்கிய தளத்துக்கும் இடையில் இருப்பது வெறும் காட்டுப் பிரதேசமே.

இதே போன்று பயிற்சியளிக்க வந்த அமெரிக்க கொமாண்டோக்கள் ஏழு பேர் கலதாரி மெரிடியன் ஹோட்டலில் தங்கியிருந்த சமயம் — கதிர்காமச் சம்பவம்நடந்து ஐந்துநாள்களின் பின் —ஹோட்டலின் ஒரு பக்கத்தில் பெரும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

நேரடியாக யுத்தத்தில் சம்பந்தப்படாமல் — தூரநின்று கொண்டு — ஸ்ரீலங்கா படைகளுக்கு பயிற்சி மட்டும் வழங்கலாம் என்று அமெரிக்கத் தரப்பு நினைத்தாலும் கூட, மேற்படி இரு சம்பவங்களும், பயிற்சியளிக்க வரும் அமெரிக்கக் கொமாண்டோக்கள் யுத்தத்திலிருந்து தள்ளி நிற்க முடியாது என்பதை அமெரிக்கத் தரப்புக்கு உணர்த்தியிருக்கக் கூடும் என்றும் கருதலாம்.

'கலதாரி மெரிடியன்' ஹோட்டல் குண்டுவெடிப்பை அடுத்து, உல்லாசப் பயணத் துறையில் பெரும் பாதிப்பு ஏற்படப் போகிறது என அஞ்சிய அரசுத்தரப்பு, கலதாரி ஹோட்டலில் தங்கியிருந்த அமெரிக்க கொமாண்டோக்களை குறி வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்ற செய்தியை கசிய விட்டு—

அதன் மூலம் புலிகளின் இலக்கு உல்லாசப் பயணத் துறை அல்ல என்று உலகை நம்ப வைக்க முயற்சித்தது.

இது அமெரிக்கத் தரப்புக்கு சீற்றத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

இது தவிர, இலங்கையில் அமெரிக்க கொமாண்டோக்களின் பிரசன்னம் இந்தியத் தரப்புக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருப்பதாகவும் ஒரு தகவல்.

புலிகள் இயக்கத்தை முதலில் தடை செய்தது இந்தியாவே. எனவே புலிகளை பயங்கரவாத இயக்கமாக அமெரிக்கா அறிவித்ததும் அதை இந்தியா வரவேற்கும் என ஸ்ரீலங்கா அரசு எதிர்பார்த்துக்காத்திருந்தது. அமெரிக்க அறிவிப்பு வந்ததும் அத்தகவலை ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உடனடியாக இந்தியாவுக்குத் தெரியப்படுத்தினார்.

ஆனால் இலங்கையில் அமெரிக்க பிரசன்னத்தால் சீற்றமுற்றிருந்த இந்தியா, புலிகளைப் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்யும் அமெரிக்க அறிவிப்பை வரவேற்கவும் இல்லை; கருத்துக் கூறவும் இல்லை,

அமெரிக்காவின் பிரகடனத்தை பாராட்டுவது அல்லது வரவேற்பது இலங்கை விவகாரத்தில் அமெரிக்க தலையீட்டுக்கு ஆதரவளிப்பதாகிவிடும் என இந்தியா கருதியிருக்கக் கூடும்.

இந்தக் காரணத்தினாலும் —

அரசாங்கத்தில் இடம் பெற்றுள்ள வாசுதேவ போன்ற இடதுசாரிகளும் மற்றும் ஜே. வி. பி. போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இலங்கையில் அமெரிக்கத் தலையீட்டை கடுமையாக எதிர்ப்பதாலும் —

இலங்கையில் அமெரிக்கத் தலையீட்டை அடக்கி வாசிக்க வேண்டிய கட்டாயம் இலங்கை அரசுத்தரப்பினருக்கு ஏற்பட்டது.

இதனாலேயே அமெரிக்காவின் கிறீன் பெரெட்ஸ் கொமாண்டோக்கள் வாபஸ் பெறப்படுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டது; அமெரிக்காவின் பெயர் குறிப்பிடாமல் உலக ஏகாதிபத்தியம் மற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவுக்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

றும் முதலாளித்துவம்குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உதட்டளவில் பேசும் நிலையும் ஏற்பட்டது.

இதனிடையே இலங்கைக்கான புதிய தூதரை அமெரிக்கா நியமித்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் மனித உரிமை மீறல்கள் குறித்தும் ஆராயப்பட வேண்டும் என்றுஅவர் கூறியிருக்கின்றார்.

இந்த அறிவிப்பும், அமெரிக்க கொமாண்டோக்கள் வாபஸ் பெறப்பட்டதான அறிவிப்பும் இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு மாறிவிட்டது என்பதைக் காட்டுவதாகக் கருதி விடக்கூடாது.

அமெரிக்காவும் இலங்கையும் சேர்ந்து தமது உறவை அடக்கி வாசிக்கத் தீர்மானித்ததன் விளைவே இது என்கிறார் ஓர் அரசியல் ஆய்வாளர்.

★ ★ ★

## நடக்குமா பேச்சு?

வவுனியாவிலிருந்து வட பகுதிக்குப் பாதுகாப்பான தரை வழி விநியோகப் பாதை ஒன்றைத் திறப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ''வெற்றி உறுதி'' படை நடவடிக்கை தொடங்கி, அடுத்து வரும் சில நாள்களில் ஆறு மாதங்கள் பூர்த்தியாகப் போகின்றன.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இத்தகைய நீண்ட—இவ்வளவு சொத்து, உயிர் அழிவுகளைத் தந்த — இராணுவ நடவடிக்கை முன்னெப்போதும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆறு மாதம் நடைபெற்ற படை நடவடிக்கையின் பின்னர் அத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் பூர்த்தியாகி விட்டதாகவும் —

அடுத்த கட்டத் தாக்குதலுக்கு படையினர் தயாராகி வருவதாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா இராணுவத்தில் 56 ஆவது டிவிஷன் என்ற புதிய படையணி தோற்றுவிக்கப்பட்டு வன்னிக் களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வன்னிக் களத்தில் இராணுவத்தின் துருப்பு எண்ணிக்கை திரும்பவும் மூன்றில் ஒரு பங்கு மேலதிகமாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

வன்னிக்குள் புலிகளை முடக்கி விட்டது போலவும்—

மிக விரைவில் புலிகள் கூண்டோடு அழிக்கப்பட்டு விடுவார்கள் என்பது போலவும்—

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை முழங்கிவருகிறார்

''புலிகளின் எண்ணிக்கை சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு அளவுக்கு குறைக்கப்பட்டுவிட்டதாக நான்நினைக்கின்றேன். அவர்கள் அனைவரும்தீவிரமான சண்டையில் ஈடுபடும் உறுப்பினர்கள் அல்லர், அவர்களில் பெரும்பாலானோர் 13 முதல் 17 வயதுடைய இளைஞர்களும் யுவதிகளுமேயாவர். யுத்தம் புரியும் பொது இயல்பை புலிகள் இழந்து விட்டனர். அவர்களின் மனோபலமும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குக் குன்றிப் போய் விட்டது. ஆனால் மோட்டார் போன்ற சில யுத்தக் கருவிகளை அவர்கள் வைத்திருப்பதால் அதைக் கொண்டு எங்களுக்கு சில சேதங்களை அவர்கள் ஏற்படுத்தி வருகின்றார்கள். அவர்களின் பலத்தை இல்லாதொழிக்க எங்களால் இயன்றது அனைத்தையும் நாம் செய்து வருகின்றோம். புலிகள் அலங்கோலமாகக் குழம்பிப் போயிருக்கின்றார்கள்'' — இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை.

ஆனால் வடக்கிற்கான தரைவழிப் பாதையை இதோ திறந்து விடுகின்றோம் என்று ஆர்ப்பாட்டத்துடன் தாம் ஆரம்பித்த படை நடவடிக்கையை ஆறு மாதமாகத் தொடர்ந்தும் அரைவாசி கூட முன்னேற முடியாமல் தவித்து நிற்கின்றனர் அவரின் படையினர்.

இந்தப் படை நடவடிக்கை குறித்துஅமைச்சர் ரத்வத்தையின் மருமகனும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரரும், ஐ. தே. கட்சியின் எம். பியுமான அனுரா பண்டாரநாயக்கா கூறுவது வேறு விதமாக இருக்கின்றது.

''புலிகளுக்குஎதிராக அரசு மேற்கொள்ளும் யுத்த தந்திரோபாயம் பயனளிப்பதாக நான் நம்பவில்லை. கடந்த ஆறுமாதகாலமாக இருபது கிலோ மீற்றர் தூரமே அவர்களால் நகர முடிந்தது. அதுவும் என்ன செலவில் தெரியுமா? ஆயிரக்கணக்கானோர் செத்துமடிகின்றார்கள். அவர்கள் பூர்த்தி செய்வார்கள் என்று எனக்குப் படவில்லை. அனேகமாக அது முடியாது.

''எஞ்சிய எழுபது கிலோ மீற்றரைக் கைப்பற்றினால் கூட விடுதலைப் புலிகள் முற்றாக அழித்தொழிக்கப்படுவார்கள் என்றோ யுத்தம் முடிவுக்கு வரும் என்றோ நான் நம்பவில்லை.

''அரசு புலிகளுடன் பேசினால் ஒழியஇப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிட்டும் எனநான் நம்பவில்லை'' — இப்படிக் கூறுகின்றார் அனுரா பண்டாரநாயக்கா.

அரசு — புலிகள் பேச்சு நடத்துவதற்கான வாய்ப்புக்கு எதிரான போக்கை பிரதிப் பாதுகாப்புஅமைச்சர் அனுருத்த ரத்வத்தை எதிர்ப்பவர் போல் தென்பட்டாலும் அவருக்கு அரசுத்தரப்புக்குள்ளும் வெளியிலும் இருந்து பேச்சுக்கான அழுத்தம் தொடர்ந்து தீவிரமடைந்து வந்து கொண்டு இருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து எதிர்க்கட்சிகளுடன் ஓர் உடன்பாட்டுக்கு வரமுன்னர் புலிகளுடன் அரசு பேசி இணக்கத்துக்கு வர வேண்டும் என்றும் —

இது தொடர்பாக அரசு புலிகளுடன் பேசுவதை எதிர்க்கமாட்டோம்என்றும் -

பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. அரசாங்கத்துக்கு திரும்பத் திரும்பக் கூறி வருகிறது

புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவது தொடர்பாக அரசாங்க மட்டத்திலும் எதிர்க்கட்சி மட்டத்திலும் தனித்தனியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு பத்திரிகை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

விசேடமாக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ் நிலைகளை உருவாக்கும் முயற்சியில் அரசாங்கம் மீண்டும் அந்தரங்கமாக ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு முக்கிய கட்டமாகவே 'வெற்றி உறுதி' படை நடவடிக்கையின் மூன்றாம் கட்டத்தை அல்லது புதியதொரு தாக்குதலை காலதாமதப்படுத்தும் தீர்மானமும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது — என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து அரசுத் தரப்புக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையில் இடம் பெற்று வரும் பல சுற்றுப் பேச்சுக்களின் போதும் அரசு — புலிகள் பேச்சு நடத்த வேண்டிய அவசியம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதனையடுத்து, கூட்டணித் தலைவர்கள் சிலரின் ஏற்பாட்டுடனும் அரசுத் தரப்பு ஆசியுடனும் கிறிஸ்தவ மத பீடம் ஒன்றின் முக்கிய தலைவர் ஒருவர் வன்னிக்குச் சென்று பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து பேச்சு நடத்தியதாகவும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது

ஆனால் அதன் உண்மைத் தன்மை குறித்தும், அப்பேச்சுக்களின் பெறுபேறு பற்றியும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இதற்கிடையில் —

அண்மையில் பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த லங்கா சமசமாஜக் கட்சிப்பிரமுகரும் அரசுத் தரப்பு எம். பியுமான வாசுதேவ நாணயக்கார அந்தநாடுகளில் உள்ள புலிகளின் பிரமுகர்கள் பலரை அழைத்து பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியதாகவும் —

அரசுடன் பேச்சு நடத்துவதற்கு புலிகள் முன்வர வேண்டும் என்று அப்போது புலிகளின் பிரமுகரிடம் அவர் அழைப்பு விடுத்திருந்தார் எனவும்—

வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் —

புலிகள் தரப்புடன் தனிப்பட்ட ரீதியில் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து ஐ. தே. கட்சிக்குள்ளும் சில பிரமுகர்கள் ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

அதேவேளை —

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் வடக்கு—கிழக்குப் பகுதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள், நிர்வாக முறை ஆகியவை குறித்து ஆராய்ந்துள்ள ஐ. தே. க. அது தொடர்பாக தனது அறிக்கை ஒன்றை புலிகள் இயக்கத்தினரிடம் கையளிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருவதாகவும் —

புலிகளுடன் தாம் நடத்தக் கூடிய உத்தேசப் பேச்சுவார்த்தைகளின் போது இதைப் புலிகளிடம் சமர்ப்பிக்கலாம் என ஐ. தே. க. வட்டாரங்கள் கருதுவதாகவும்—

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே சமயம்—

ஏதேனும் ஒரு கட்டத்தில் புலிகளுடன் பேசியேயாக வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகாவும் அமைச்சர் ஜி. எல். பீரிஸும் அண்மைக் காலத்தில் கூறி வருவதும் குறிப்பிடத்தக்கது. ★

கணக்கீடு
A/L 98
கம்பனி
புதிய பிரிவு ஆரம்பம்
திங்கள் 1997—11—10
காலை 6-15 — 7-15
(திங்கள், வெள்ளி 6-15 — 7-15)
D. SAM
D. M. I.
233, STANLEY ROAD, JAFFNA.
(சி-1985)

A/L 98
DAY CLASS
கணக்கீடு
நடைபெறும் பாடங்கள்
★ கம்பனி
★ கொள்வல் கொடுத்தல் கணக்கும் வருமானம் செலவுக் கணக்கும்.
★ கிரயக் கணக்கீடு (Costing Acc.)
ஆசிரியர்:
D. SAM.
D. M. I.
233, STANLEY ROAD, JAFFNA.
(சி/1986)

## அரங்கு

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான ஒரே போக்குவரத்து வசதி விமான சேவைதான். ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் விமானத்தில் கொழும்பு செல்வோரும் குறிப்பிட்ட சில நாள்களில் காங்கேசன்துறை ஊடாக கப்பலில் திருகோணமலை மற்றும் மன்னாருக்குச் செல்வோரும் பயண ஆயத்தங்களுடன் கூடும் இடம் யாழ்ப்பாணத்தின் பழைய ரயில் நிலையம் தான். அங்கிருந்துதான் பயணிகள் காங்கேசன்துறைக்கும் பலாலிக்கும் படையினரால் கூட்டிச் செல்லப்படுகின்றனர்.

விமானத்தில் கொழும்பு செல்வதற்காக யாழ். ரயில் நிலையத்தில் கூடுபவர்களில் பெரும்பாலானோர் படித்த—வயதான—பிரமுகர்கள் மற்றும் குடும்பஸ்தர்களே.

ஆனால் பயணிகளும் பிரியாவிடை கூற வருபவர்களும் அங்கு நடத்தப்படும் விதமு, அங்கு மேற் கொள்ளப்படும் நடைமுறைகள் போன்றவை சில சமயங்களில் மிகுந்த மன வேதனையைத் தருவனவாக இருப்பதாகப் பலரும் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

யாழ். மக்களின் மனதை வெல்வதற்கு கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கும் படை உயரதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம். கொள்கைகளை வகுத்து தீர்மானங்களைச் செயற்படுத்தும் படை அதிகாரிகள் அலுவலகங்களுக்குள்ளும் முகாம்களுக்குள்ளும் தான் இருக்கின்றார்கள். மக்களுடன் நேரடியாகத் தொடர்புபடுபவர்கள் அவர்கள் அல்லர்.

மக்களுடன் தொடர்புபடுபவர்களை சரியாக வழி நடத்த வேண்டியது, அவர்கள் சரியாக செயற்படுகின்றார்களா என்பதை கண்காணிக்க வேண்டியது மூத்த படை அதிகாரிகளின் பொறுப்பே.

நடந்து முடிந்த விடயங்களுக்கு சாட்சியங்களைக் கோருவதை விடுத்து, இனிமேலாவது சரியாக நடக்கின்றார்களா என்பதை திறமையாகக் கண்காணிக்க ஓர் ஒழுங்கு முறையை ஏற்படுத்தினால்தான் தாம் ஏற்படுத்திக் கொடுக்கும் விமான சேவைக்கும் மதிப்பு. மக்கள் நல்லுறவைப் பேண வேண்டும் என்ற விருப்பத்தில் சில அடிகளேனும் முன்னேற முடியும்.

★ ★ ★

யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத்துறை மீண்டும் களை கட்டத் தொடங்கி விட்டது. ஏனைய துறைகள் போல விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கவும் பல்வேறு உதவிகள், வசதிகள் அரசிடமிருந்தும் மாகாணசபையிடமிருந்தும், வெளியாரிடமிருந்தும், தூதரகங்களிடமிருந்தும் யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் தென்படுகின்றன.

ஆனால் அந்த உதவிகள் நியாயமான முறையில் பகிரப்பட வேண்டும். பாடசாலைகளுக்கு என்றால் என்ன, கழகங்களுக்கு என்றால் என்ன, தனிப்பட்ட வீரர்கள், மாணவர்கள் போன்றோருக்கு என்றால் என்ன வசதிகள், வாய்ப்புகள், திறமைகள், வலு ஆகியவை கவனத்தில் எடுக்கப்பட்டு உரிய முறையில் உதவிகள் பகிரப்பட வேண்டும்; அது தொடர்பான நிர்வாக நடவடிக்கைகள் திறந்தவையாக (Transperency) இருப்பதும் அவசியம்.

சில மாதங்களுக்கு முன்னர் வடக்கு— கிழக்கு மாகாணசபையால் ஒரு தொகை விளையாட்டு உபகரணங்கள், கருவிகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் அவை எங்கே மறைந்தன, அல்லது யாருக்கு வழங்கப்பட்டன என்பது மாவட்ட விளையாட்டு அதிகாரி உட்பட யாருக்கும் தெரியாது. மூத்த அதிகாரி அல்லது அதிகாரிகள் மாறியிருக்கலாம். ஆனால் யாரோ ஒருவர் என்றோ ஒரு நாள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லையா?

சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்று கடந்த வருடம் பாடசாலை சிறுவர்களுக்கான ஒரு தொகைப் புத்தகப் பைகளை அன்பளிப்பாக வழங்கியிருந்தது. அது வந்ததும் சரி, விநியோகித்ததும் சரி யாழ். கல்வித் திணைக்களத்துக்குத் தெரியாது. ஆனால் ஒரு பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் சேர்ந்த சிறுவர்,சிறுமியர் மட்டும் பாடசாலை சீருடை போல ஒரே மாதிரியில் புத்தகப் பைகளைத் தோளில் சுமந்து கொண்டு ஒரு நாள் வீதிக்கு வந்தபோதுதான் புத்தகப் பைகள் அன்பளிப்பாக வந்ததும் விநியோகிக்கப்பட்டதும் கல்வி அதிகாரிகளுக்குத் தெரிய வந்தது.

★ ★ ★

பாடசாலை விளையாட்டு விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள் போன்றவை பல காலமாக கல்வி அதிகாரிகளுக்கு அதிபர்கள் 'பந்தம்' பிடிக்கும் நிகழ்வுகளாக மாறிவருகின்றன.

தனது நிர்வாகத்தின் கீழ் இருக்கும் ஒவ்வொரு பாடசாலையினதும் விழாக்களுக்கு தானே பிரதம விருந்தினராகப் போகவேண்டும் என எதிர்பார்க்கும் கல்வி அதிகாரிகள் பலர். இதனால் பல அதிகாரிகளை பல சமயங்களில் அவரது அலுவலகக் கதிரைகளில் பார்க்க முடிவதில்லை. பெரும்பாலும் பாடசாலை விழாக்களில் நிர்வாகம் குறித்து உபதேசம் செய்து கொண்டு இருப்பார்கள் அவர்கள். ஆனால் அலுவலக நேரத்தில் அவர்கள் கதிரைகள் வெறுமையாக இருக்கும்.

இத்தகைய விழாக்களை தமது நோக்கத்தை எட்டுவதற்கான — பந்தம் பிடிப்பதற்கான — நிகழ்வாகக் கருதாமல், தான் சார்ந்த பாடசாலை சமூகத்துக்கு நன்மை பயக்கும் சமூக நிகழ்வாக நடத்திக் காட்டுவது அதிபர்களின் பொறுப்பாகும்.

மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்பவர்களையும் தமது சமூகம் சார்ந்த பெரியோரையும் இத்தகைய நிகழ்வுகளில் கனம் பண்ணுவதன் மூலம் பாடசாலைகளும் நன்மையடையலாம்; மாணவர்களும் பயன் — உத்வேகம் — பெறலாம். கல்வி அதிகாரிகளுக்கு மட்டுமே இத்தகைய தகுதி இருப்பதாக அதிபர்கள், பாடசாலை நிர்வாகிகள் கருதக் கூடாது.

கல்வி அதிகாரிகளும் மாலை — மரியாதை — 'மைக்' பிடித்து உபதேசம் பண்ணும் வாய்ப்பு — இவற்றில் நாட்டம் கொண்டு அலையாமல் தவிர்த்து பாடசாலைகள் தமது சமூகத்துடன் சேர்ந்து இயங்கும் வகையில் அதிபர்கள் செயற்படுவதற்கு தூண்டவேண்டும். செய்வார்களா? அல்லது 'மைக்' என்றால் மைசூர்பாகு என அலைவார்களா? — மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வைரமுத்து சோமசுந்தரம்

வைரமுத்து சோமசுந்தரம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நந்தினி, ஜெனனி (மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவிகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், இராமேஸ்வரம் (முன்னாள் இ. போ. ச. சாரதி, கோண்டாவில்), இராமலிங்கம் (சுவிஸ்), நன்னித்தம்பி, கலா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும். பாஸ்கரன், கோமதி, சிந்துஜா ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 8-11-97 பகல் 12மணிக்கு இவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்துக்குஎடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராமேஸ்வரம்,
(சகோதரர்)

மெமோறியல் லேன்,
மானிப்பாய்.

(51027)

## திருமதி வல்லிபுரம் தங்கம்மா

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி வல்லிபுரம் தங்கம்மா 05-11-1997 புதன்கிழமை அன்று கைதடியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் (குட்டித்தம்பி) அவர்களின் அன்பு மனைவியும், இராசலச்சுமி (ஆசிரியை, நாவலப்பிட்டி), பகவதி (கைதடி), புனிதவதி (இந்தியா), நிர்மலாதேவி (இந்தியா), ஆனந்தவடிவேல் (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், க. செல்லத்துரை, ந. கிருஷ்ணபிள்ளை (திருமலை), செ. இரத்தினம் (சில்வா வோச் வேக்ஸ்), வெ. சிவலிங்கம் (தனுஷா நகைமாடம்), ஹேமலதா (மட்டக்களப்பு) ஆகியோரின் மாமியாரும், செல்வி, தக்ஷாயினி, சபேசன், செந்தில், சிவரூபன், சிவசங்கர், நிரைஞ்சன் குமார், கோகுலன், தனுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06-11-97 இல் கைதடியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வெ, சிவலிங்கம்
(மருமகன்)

கலட்டி,
நாச்சிமார்கோயிலடி.

(51037)

## திருமதி குமாரன் சின்னம்மா

அரியாலையை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இடம்பெயர்வால் முத்தையன்கட்டில் வசித்தவருமாகிய கு ாரன் சின்னம்மா அவர்கள் 20-10-97 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இ. குமாரன் (P. W. D. ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், இராமலிங்கம் (இளைப்பாறிய, வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்), நந்தகுமார், பார்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசம்மா (புங்குடுதீவு - 7), அன்னம்மா, குணரத்தினம் ஆகியோரின் மாமியாரும், றஜீதா — தயாநிதி (கனடா), ரதீதா — லோகநாதன் (பிரான்ஸ்), இராஜேந்திரகுமார் (நோர்வே), மதன்குமார் — தினேஷ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-10-97 அன்று முத்தையன்கட்டில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. இராமலிங்கம்
(மகன்)

45, சாஸ்திரியார் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(51035)

## இராசரத்தினம் சிவலோகநாயகி

திருமதி இ. சிவலோகநாயகி அவர்கள் 6-11-97 வியாழக்கிழமை நள்ளிரவு 10 மணியளவில் சிவனடிப் பேறடைந்தார்.

இவர் பகிரங்க வேலைப்பகுதி ஓவசியரும், செட்டியாமடம் அராலி வாசகருமானகாலஞ்சென்ற சி இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தியாகலிங்கம், சண்முகலிங்கம் (அஞ்சலதிபர், வெள்ளவத்தை), சாரதாம்பாள் (கொழும்பு), கமலாம்பாள், கணேசலிங்கம் (கனடா), மகேசலிங்கம் (பிரான்ஸ்), ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னலட்சுமி, திருவருட்செல்வன் (ஓமான்), சிவராசா (சித்திரகலா ஸ்ரூடியோ, நல்லூர்), நளாயினி (கனடா), சாந்தகுமாரி (பிரான்ஸ்), வைத்தியகலாநிதி ஏ. உமாகாந்தன் (ஆயுர்வேத வைத்தியசாலை, நாயன்மார்கட்டு) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மினி, அபர்ணா, செந்தூரன் அபிராமி, பிரணவன், துர்க்கா, அசோக், லக்ஸ்மன், ஷிராணி, மயூரி, பிரகாஷ், ஷாசீலம்போதரன், அனுஷன், கிருஷாகேசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 8-11-97 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏ, உமாகாந்தன்
(மருமகன்)

முறிவு, நெறிவு வைத்தியசாலை,
நாயன்மார்கட்டு.

(51033)

# தீவுப்பகுதி அபிவிருத்தி பற்றி ஆராய அரச அதிபரின் தலைமையில் குழு

## இன்று புறப்பட ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 8

தீவுப்பகுதியில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திப் பணிகள் குறித்து ஆராய யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் குழு ஒன்று இன்று அங்கு செல்லவிருக்கிறது.

இக் குழுவில் ஐ. நா. அபிவிருத்தித் திட்டம், அகதிகளுக்கான ஐ நா. தூதரகம், ஐ. நா. சிறுவர் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றின் அதிகாரிகளும், செயலக அதிகாரிகளும் இடம்பெறுகின்றனர்.

அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களுக்குச் செல்லும் இக் குழு அங்கு மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராயும். [இ-3]

## தோட்டங்களில் மரவள்ளிக் கிழங்கு அபகரிப்பு

சாவகச்சேரி, நவ. 8

மட்டுவில் பகுதியில் தோட்டங்களில் மரவள்ளிக்கிழங்கு திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

காணிகளில் நடப்பட்டுள்ள மரவள்ளித் தடிகளை தற்போது மழை பெய்துள்ள சாதகமான நிலையைப்பயன்படுத்தி இரவோடிரவாக இழுத்துக் கிழங்கைத் திருடிச் செல்கின்றனர். (ஐ-31)

## உரல்களை திருடியோர் சிக்கினர்

நெல்லியடி, நவ. 8

வீட்டில் உள்ளோர் உறங்கிய வேளை உள்ளே புகுந்து இரண்டு உரல்களைத்திருடிய இருவர் நெல்லியடி பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு உரல்களும் மீட்கப்பட்டுள்ளன.

கரவெட்டி மேற்குப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்தே உரல்கள் திருடப்பட்டன. (ஐ-109)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், நவ. 8

கலாநிதி காரை செ சுந்தரம்பிள்ளை எழுதிய சிங்கள ''பாரம்பரிய அரங்கம்'' என்னும் நூலின் அறிமுக விழா எதிர்வரும் திங்களன்று முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் முத்தமிழ் மன்றத் தலைவர் க. ஸ்ரீசந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் செல்வி நிர்மலாதேவி நல்லையா அறிமுக உரையாற்றுவார். நூல் ஆய்வுரையை கவிஞர் இ. முருகையன் வழங்குவார். (ஐ)

## பொது அறிவுப் போட்டி

வடமராட்சி, நவ. 8

வடமராட்சிப் பிரதேச பாடசாலைகளில் ஜி. சீ. ஈ. உயர்தரவகுப்பில் கற்கும் மாணவர்களிடையே வடமராட்சி வட்ட லியோகழகம் ''உங்களுக்குத் தெரியுமா?'' என்ற தலைப்பில் பொது அறிவு வினாவிடைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

அடுத்த மாத விடுமுறை காலத்தில் நடத்தப்படும் இப் போட்டிக்கு பாடசாலைகளிலிருந்து 7 பேர் கொண்ட குழுக்களாக இம் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)


**A/L 98**

முயற்சியாண்மையும்
முகாமைத்துவமும்

By:

திரு. முரளி

09-11-97 (1.00 மணி)

**N.C.C.A**

யாழ்ப்பாணம்.

(49839)


## புல்மோட்டை கடலில்

## மூழ்கிய கப்பலின் எரிபொருள் கசிவதால் நீர் மாசடைகிறது

திருகோணமலை புல்மோட்டைக்கடற்பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி இல்மனைட் ஏற்றிக் கொண்டிருந்த சமயம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி கடலில் மூழ்கிய ''கோடியலிற்றி'' என்னும் கப்பலில் இருந்து வெளியேறும் எரிபொருளால் அக்கடற் பகுதியில் மீன்பிடித் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் அபாய நிலை உருவாகியுள்ளது.

சமுத்திர பாதுகாப்பு. தடுப்பு அதிகார சபை மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கப்பலின் தாங்கிகளில் உள்ள எரிபொருளை அகற்ற சிங்கப்பூரைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று 70 லட்சம் ரூபாவைக் கோரியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கான நிதியை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் அஸ்ரப்பிடம் இருந்து பெறுவதற்கு திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளனர். (ஐ-21-3)

## கலதாரி ஹோட்டலுக்கு திறைசேரி நிதி உதவி

கொழும்பு, நவ. 8

அண்மையில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த கொழும்பு கலதாரி ஹோட்டலைத் திருத்தி அமைப்பதற்குத் திறைசேரி மூலம் நிதியைப் பெற்றுக் கொடுக்க அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க முன்வந்துள்ளார்.

ஹோட்டலுக்கு ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி 6 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றுலா, சிவில் விமானத்துறை அமைச்சர் என்ற வகையில் ஹோட்டல் சேதங்களை பார்வையிடச் சென்ற சமயம் திறைசேரி நிதி பெற்றுத் தருவதாக அமைச்சர் உறுதியளித்தார்.

குண்டு வெடிப்பின் போது சேதமடைந்த ஹில்டன், இன்ரகொன்ரனல் ஆகிய ஹோட்டல்களுக்கும் நிதி உதவியைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் உறுதி அளித்துள்ளார். (ஐ-3)

## புதைத்து வைத்த பணம், நகை 7 ஆண்டுகளின் பின் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 8

1990 ஆம் ஆண்டு காங்கேசன்துறைப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறிய ஒரு தம்பதியர் அங்கு புதைத்து விட்டு வந்த பெறுமதியான பொருள்களை மீண்டும் பெற்றுக் கொண்டனர்.

இது தொடர்பாக 51 ஆவது படையணியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தையிட்டிப் பகுதியில் கலைமகள் வீதியில் வசித்த மேற்படி தம்பதியினர் வீட்டை விட்டு வெளியேறும் போது சுமார் 30 பவுண் தங்க நகைகளையும், சுமார் 4 லட்சம் ரூபா பணத்தையும் மற்றும் வங்கி ஆவணங்களையும் வீட்டுவளவின் பின் புறம் புதைத்து விட்டு தமது மகளுடன் வெளியேறி இணுவில் மேற்குப் பகுதியில் உள்ள நண்பர் ஒருவரின் வீட்டில் வசித்து வந்தனர்.

காங்கேசன்துறைப் பகுதியில் புதைத்து வைத்த பணமும், நகைகளும் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கடந்த 14 10. 97 ஆம் திகதிய ''உதயன்'' பத்திரிகையில் வெளியான செய்தியைப் பார்த்து விட்டு இவர்கள் 51 ஆவது படையணியின் தளபதிக்கு கடிதம் மூலம் விண்ணப்பித்து தமது பொருள்களின் விவரங்களைத் தெரிவித்தனர். அதனையடுத்து 51 ஆவது படையணியின் தளபதி உரிய நடவடிக்கை எடுத்தார். தையிட்டியில் உள்ள அவர்களின் வீட்டு வளவில் புதைக்கப்பட்டிருந்த பணமும், நகைகளும் தோண்டி எடுக்கப்பட்டு கடந்த முதலாம் திகதி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதேபோன்று அப்பகுதியைச் சேர்ந்த மற்றொரு நபரும் தமது காணியில் புதைத்து வைத்திருந்த 100 பவுண் தங்கத்தை மீளப் பெற்றுள்ளார்.

காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து தாவடி தெற்கில் வசித்து வந்த இந்த நபர் 51 ஆவது படையணியின் தளபதிக்கு விண்ணப்பித்ததை அடுத்து அவர் மேற்கொண்ட உடனடி நடவடிக்கையின் பயனாக கடந்த இரண்டாம் திகதி அவர் தமது தங்கத்தை மீளப் பெற்றுக் கொண்டார்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## முதலாம் வருட நிறைவு விழா

யாழ். பல்கலைக்கழக முதலாம் வருடம் நிறைவு பெற்ற (95/96) மாணவர்களின் வருட இறுதி ஒன்றுகூடல் 9-11-97 இல் நடைபெற இருப்பதால் அனைத்து 2 ஆம் வருட B பிரிவு கலைப்பீட மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா ஏற்பாட்டாளர்கள்.

(51040)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு கடற்பகுதிக்கு

# வேறு கப்பல்களும் வந்தனவா? விமானப்படையினர் தேடுதல்

கொழும்பு, நவ. 8

கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவுக் கடற்பகுதியில் தாக்கியழிக்கப்பட்ட கப்பலுடன் மேலும் ஒன்றிரெண்டு கப்பல்களும் வந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டதால் அப்பகுதியில் பாரிய தேடுதல் இடம்பெற்றதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிவந்ததாகச் சந்தேகிக்கப்படும் கப்பல் ஒன்றைக் கடந்த ஞாயிறன்று விமானப்படை விமானங்கள் தாக்கி அழித்தமை தெரிந்ததே.

அந்தக்கப்பலுடன் மேலும் ஒன்று அல்லது இரண்டு ஆயுதக்கப்பல்களும் வந்திருக்கலாம் எனச் சந்தேகித்து அப்பகுதியில் விமானப் படையினரும், கடற்படையினரும் தேடுதலில் ஈடுபட்டதாகவும் —

இத்தேடுதலின் போது கிழக்குக் கடற்பகுதியில் பயணம் செய்த மூன்று வெளிநாட்டுக் கப்பல்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும் —

''லங்காதீப'' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டுக் கப்பல்களை கரையில் இருந்து 30 கிலோ மீற்றருக்கு அப்பால் செல்லுமாறு விமானம் மற்றும் கடற்படையினர் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-164-3)

# வர்த்தகருக்கு ஆலோசனை ஜேர்மன் நிறுவனம் வழங்கும்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். மாவட்டத்தில் வர்த்தக முயற்சியில் ஈடுபட்டுள்ளோருக்கும், புதிதாக ஈடுபடவுள்ளோருக்கும் ஆலோசனை வழங்கி அவர்களை ஊக்குவிக்க ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் (ஜீ. ரீ. இஸற்) முன்வந்துள்ளது.

நவீன வர்த்தக நுணுக்கங்கள் தொடர்பான பயிற்சியை வர்த்தகர்களுக்கு வழங்குவது தொடர்பாக கலந்துரையாட இலங்கை—ஜேர்மன் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் இலங்கை வர்த்தக அபிவிருத்தி நிலைய அதிகாரிகள் விரைவில் யாழ். வரவுள்ளனர்.

இவர்கள் இங்குள்ள வர்த்தகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். கலந்துரையாடலில் பங்குபற்ற விரும்பும் வர்த்தகர்கள் சுய விவரங்களுடனான தங்கள் விண்ணப்பங்களை ''இலக்கம் 11, கண்டிவீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரியில் உள்ள ஜீ. ரீ. இஸற் நிறுவன பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

## மண் வெட்டி விநியோகம்

கொழும்புத்துறை, நவ. 8

வலிகாமம் மேற்கு, சங்கானை பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கும், விவசாய கூலிகளுக்கும் நோர்வே அரசாங்க உதவியுடன் இன்று சனிக்கிழமை காலை தொல்புரம் சமநல சேவை நிலையத்தில் வைத்து இலவசமாக மண்வெட்டிகள் வழங்கப்படும்.

உலக உணவு விவசாய நிறுவன விநியோக ஆலோசகர் கா. குணரத்தினத்தின் மேற்பார்வையில் இப்பகுதியில் வறுமைக் கோட்டுக்குள் உள்ள 750 விவசாயிகளுக்கும், 750 கூலிகளுக்கும் மண்வெட்டிகள் இன்று வழங்கப்படும்.

(ஐ-30)

## இராஜகோபுரம் அமைப்பு வேலை

கொழும்புத்துறை, நவ. 8

கொழும்புத்துறை ஆத்தியம்பதி சந்திரசேகரர் விநாயகர் கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகித் தற்போது நடைபெற்று வருகின்றன.

மணிக்கூண்டுக் கோபுரத்துடன் கூடியதாக இந்த இராஜகோபுரம் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

(ஐ-30)

## உறவினர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

தேசக் குழு ஊடாக இப்பொருள்களை கைதிகளுக்கு அனுப்ப புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

''சாகரவர்த்தனா'' என்ற கப்பலில் கப்டன் உட்பட 24 பேர் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-21)

## மரண அறிவித்தல்

### சுவாமிநாதன் சண்முகலிங்கம்

(தபால்அதிபர் - தபாற்கந்தோர் - சுழிபுரம்)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், வட்டு-வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சு. சண்முகலிங்கம் 6-11-97 இல் காலமானார்.

அன்னார் ச. ஜெயவதியின் அன்புக் கணவரும், ச. செந்தில்குமரனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நா. சுவாமிநாதன் தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி மீனாம்பிகையின் மருமகனும், காலஞ்சென்ற இளையதம்பி சிவசம்புவின் சகலனும், திருமதி சிவசம்பு கலாவதியின் அன்பு மைத்துனரும், சி. சிவானந்தன், சி. முகுந்தன், சி. ஆனந்தி ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7-11-97 இல் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

திருமதி ஜெயவதி சண்முகலிங்கம் (மனைவி)

வட்டு. வடக்கு,
சித்தன்கேணி.

(51021)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08 - 11 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ஊர்காவற்றுறை சந்தைக்கட்டட திறப்புவிழா

நெடுந்தீவு, நவ. 8.

ஊர்காவற்றுறை புதிய சந்தைக்கட்டடத்தை அகதிகளுக்கான ஐ. நா. வதிவிடப் பிரதிநிதி ஜோண் டிக்ஸன் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற திறப்புவிழா வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபர் எஸ். சண்முகநாதன், அகதிகளுக்கான ஐ. நா. தூதரக பிரதிநிதி செல்வி கைற்கோடன் மற்றும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் உட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(ஐ-111)

## சிரமதானம்

பளை பொதுச் சந்தை வளவு மற்றும் நகரப்புறங்கள் ஆகியவற்றை துப்புரவு செய்யவும் ஆழமான நிலங்களை நிரப்பவும் சிரமதான நிகழ்ச்சி ஒன்று இன்றுசனிக்கிழமை நடைபெறுகிறது.

## வடபகுதி...

(முதலாம் பக்கத் தொடர்)

வழங்க விரைவில் நேர்முகப் பரீட்சைகள் அந்தந்த மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

1996 ஆம் ஆண்டு நடந்த போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களின் பட்டியலில் இருந்து இவர்கள் உயர்ந்த புள்ளி அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

இவர்களில் 575 பேர் யாழ். மாவட்டத்தில் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவர்.

அதே நேரம் — வடக்கு - கிழக்கில் ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்காக அண்மையில் நடந்த நேர்முகப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 871 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 584 பேர் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த போதும், 374 பேருக்கே நியமனம் வழங்கப்படவிருக்கிறது. எஞ்சியோர் தமது தகைமையை நிரூபிக்கத் தேவையான சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கவும், வதிவிடத்தை நிரூபிக்கும் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கவும் தவறிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த 374 பேருக்கும் இம்மாத நடுப்பகுதியில் நியமனம் வழங்கப்படவிருப்பதாகவும் சு. டிவகலாலா மேலும் தெரிவித்தார்.

(ஐ-3)

## தடையை...

(முதலாம் பக்கத் தொடர்)

நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்றும் —

1977 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் தேர்தலில் சுயநிர்ணய உரிமைக்குக் கொடுத்த ஆணையை நிறைவேற்றுவதற்காகவே ஆயுதம் ஏந்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்றும் — அமெரிக்காவுக்கு எதிரானவர்கள் அல்லர் என்றும் — புலிகள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க சட்டத்துக்கு முரணானதாக பிரகடனம் செய்யப்பட்ட அறிவிப்பு உள்ளது என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்)

மாக இந்த இயக்கம் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது — என்று இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பாக விடுதலைப் புலிகளின் சர்வ [illegible] அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.

(இ-3)

# ஈராக்கைத் தாக்க துருக்கியில் தளம்?

## அமெரிக்கா அனுமதி கோரியது

அங்காரா, நவ. 8

ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்காக துருக்கியின் தென்பகுதியில் உள்ள விமான நிலையத்தைப் பயன் படுத்த துருக்கி அரசிடம் அமெரிக்கா அனுமதி கோரியுள்ளது.

துருக்கியப் பிரதமரை மேற்கோள்காட்டி அந்நாட்டுப் பத்திரிகைகள் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் இக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுமுன் அதுதொடர்பாக ஐ. நாவின் பதிலுக்காக துருக்கியப் பிரதமர் காத்திருப்பதாகவும் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இதே வேளை —

அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளக் கூடும் என எதிர்பார்த்து தனது இராணுவ தொழில் நுட்ப சாதனங்களை ஈராக் இடம்மாற்றியுள்ளது.

இடம் மாற்றப்பட்ட கருவிகள் மீண்டும் நிறுவப்படும் என்றும் அவற்றை ஐ. நா பரிசோதனைக் குழுவினர் சோதனையிட அனுமதிக்கப் படுவார்கள் என்றும் ஈராக் வெளிவிவகார அமைச்சர் முகமது சயத் அல்சஹாப் தெரிவித்தார்.

இதற்கிடையில் போராயு தங்களைக் கண்காணிக்கும் ஐ. நா குழுவின் படப்பிடிப்புக் கருவிகள் சில சேதமடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தற்செயலாக இடம்பெற்ற விபத்துச் சம்பவமே என்று ஈராக் தெரிவித்துள்ளது. கடந்த புதன்கிழமையன்று ஏவுகணை ஒன்றை இயக்கிப் பார்த்த சமயம் அதன் இயந்திரப் பகுதி வெடித்துச் சிதறியதால் இந்தக் கண்காணிப்புக் கருவிகள் சேதமடைந்ததாக ஈராக் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

## சைக்கிள் கடை தீக்கிரை

செம்பியன்பற்று நவ. 8

வடமராட்சி கிழக்கு மாமுனையில் கடந்த 29 ஆம் திகதி சைக்கிள் கடை ஒன்று தீக்கிரையானது.

கடை உரிமையாளர் வன்னிக்குச் சென்றுவிட்டதால் அவரது உறவினர்கள் அக்கடையைப் பராமரித்து வந்தனர்.

விசமிகள் வைத்த தீயால் கடை முற்றாக எரிந்து சாம்பராகி உள்ளது.

(ஐ-36)

## JOB VACANCY

### POST OF SECRETARY

The Save the Children Fund is an International Non Governmental Organisation working for the rights and welfare of the children irrespective of nationality race or religion.

**A VACANCY EXISTS IN SCF OFFICE JAFFNA FOR THE POST OF SECRETARY.** The Secretary will be responsible to the District Coordinator through Administrative Officer in the district.

**THE DUTIES AND RESPONSIBILITIES:**

1) To attend to the typing work as requested by the administrative staff.
2) To take responsibilities for ensuring the proper maintenance of all files and documents in the district Office.
3) To handle all routine correspondence and documentation as and when required by the Administrative Officer.
4) Manage all outgoing and incoming mail in the district and to undertake all reception duties.

**THE SUCCESSFUL CANDIDATE WILL HAVE:**

a. G. C. E. (Ordinary Level/ Advance Level) with English as a subject.
b. Good command of English and good knowledge of Tamil/ Sinhala.
c. A good knowledge of shorthand typing.
d. Computer skills in Lotus 1-2-3 and Word Perfect 5.1

**DESIRABLE:**

e. Knowledge of Word perfect 6,1/7
f. Experience in relief and rehabilitation Work.
g. Knowledge of Office management.

**Starting salary will be Rs. 6.988/00**
**SCF retirement age is 60 years.**

Applications stating the names addresses and contact telephone numbers of two non-related referees who are familiar with your work and one of them should be your present or most recent employment to be sent to:

District Coordinator,
SCF - Jaffna.

Closing Date: Two weeks from the advertisement

Short-listed candidates will be sent an application form of SCF.

(c/1994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
# சஞ்சிகை

08 - 11 - 1997 சனிக்கிழமை



வைத்திய ஆலோசனைக்கு ஏற்ப
மூக்குக்கண்ணாடிகள் பெறுவதற்கும்,
சிறந்த முறையில் பற்களைக் கட்டிக்
கொள்வதற்கும் நாடவேண்டிய இடம்

பி. ஜெ. பர்னாண்டோ
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1974)

## கருத்துக் கலசம்

மயூரா

### மன அமைதி

புறச்சூழலில் அமைதி நிலவினால் மட்டுமே தனிமனித வாழ்விலும் அமைதி உண்டாகும். வாழ்க்கையில் அமைதியும் நிம்மதியும் பிறப்பதற்கு மன அமைதியும் மிக அவசியமானதாகும்.

வாழ்க்கைஅமைதிக்கும் புறச் சமாதானத்துக்கும் நிறையத் தொடர்புண்டு. அதனால் சமாதானம் வேண்டும் என்று விரும்புவது மனித இயல்பு. அமைதியை, சமாதானத்தை வெறுப்பவர்கள் மிக மிகக் குறைந்த வீதத்தினரே.

இன்றைய நிலையில் அமைதியையும் சமாதானத்தையும் அதிகம் விரும்புவர்கள் தமிழர்களே. ஆயினும் அவை தற்காலிகமானவையாக வந்து போவதால் பயனில்லை.

நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள்வேண்டிய அளவு கிடைக்கின்றன. மின்சாரம் கிடைத்திருக்கிறது. அலுவலகங்கள் திறந்து பணிகள் நடைபெறுகின்றன. மாணவர்கள் பாடசாலை சென்று கல்வி பயில வசதி ஏற்பட்டுள்ளது. இயல்பு வாழ்க்கை ஓரளவிலேனும் திரும்புகிறது.

இத்தனையும் கைக்கு வந்துவிட்டதால்சமாதானம்கிடைத்துவிட்டது என்று நினைப்பவர்கள் பலர். ஆனால் இந்த வசதிகள் மன அமைதியைத் தந்துள்ளனவா என்று சிந்தித்துப் பார்ப்பதில்லை.

இப்போதைய புறச்சூழல் அல்லது புற அமைதி எப்போதும் எந்த நேரமும் மாற்றம் அடையும் தன்மையது என்பது பலருக்குத் தெரிகிறது; உணர்கிறார்கள். அவை நிரந்தர மற்றவை என்பதே யதார்த்த நிலை.

நிரந்தரமான சமாதானம்வரும் வரை நிறைவான புற அமைதி கிடைக்கமாட்டாது. எனினும் மன அமைதியை எமது முயற்சியால் வளர்த்துக் கொள்ளலாம். மன அமைதிக்கு நல்ல மன வளம் தேவை.

மனவளத்தைப் பேணுவதற்கு ஆன்மீக ஈடுபாடும் பிரார்த்தனையும் பெரிதும் உதவும். பிரார்த்தனை வழிபாட்டின் பிரதான அங்கம். வழிபாடு மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கான சிறந்த மார்க்கம்.

மனம் ஒரு குரங்கு என்பார்கள். அது தான் நினைத்த மாதிரி தாவித்திரியாமல் தடுக்க மனக் கட்டுப்பாடு தேவை. அதுவே மனிதனின் மிகப் பெரிய பலம்.

துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், தோல்விகள் மனதை நலிவடையச்செய்வன. எனவே அவற்றைத் தாங்கும் இதயம் வேண்டும். எதையும் தாங்கும் இதயம் உள்ள ஒருவனின், அதற்கான பக்குவத்தை அடையும் ஒருவனின் வாழ்க்கையில் மன அமைதிக்குக் குறைவிருக்காது.

ஆகையால் சமாதானம் இப்போதே வந்து விட்டதாக நினைத்து வாழாது, மன அமைதி மூலம் வாழ்க்கை அமைதியைத் தேடுவதற்காக—

மன அமைதியைத் தரவல்ல வழிபாட்டிலும் பிரார்த்தனையிலும் ஈடுபாடும் பயிற்சியும் பெறுவோமாக.

# காதலுக்கு விளக்கம் கூறிய கவின்மிகு இலக்கியங்கள்

''காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்''—என்றார் பாரதியார்,

காதலின் மென்மையைப் பாரதியார் தமது கவிதையில் அழகாகக் காட்டியுள்ளார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவர் காதலுக்கு ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார். அப்படி ஒரு விளக்கத்தை திருவள்ளுவருக்கு முன்னரோ பின்னரோ எவரும் கொடுக்கவில்லை.

''மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படுவார்''

என்பதே அந்த விளக்கம். (திருவள்ளுவர் காலத்தில் காமம், காதல் என்னும் இரு சொற்களும் ஒரே பொருளில் வழங்கின. பின்னரே காதல் என்பது தன்னலம் கருதாத அன்பு என்னும் பொருளிலும் காமம் என்பது தன்னலம் குறித்த ஆசை என்னும் பொருளிலும் வந்தன).

மலரை விட மென்மையானது காதல் உணர்வு. அதனை உணர்ந்து அதன் பயனை அடைபவர் சிலரே என்கிறார் திருவள்ளுவர். காதல் என்ற போர்வையில் இன்று நாம் காணும் பலவும் காமமே. சிலவே காதல் ஆகும்.

ஆயினும் இலக்கியங்கள் பல திருவள்ளுவர் கூறும்—தன்னலம் கருதாத—அன்பை—காதலை—சிறப்பாகக் காட்டியுள்ளன.

### ஆங்கில நாவலில் காதல் சிறப்பு

''ஏ ரேல் ஒவ் ரு சிற்றீஸ்'' (A tale of two cities) என்ற நாவல் மூலம் ஆங்கில மொழிக்குப் பெருமையையும் தமக்குப் புகழையும் சேர்த்துக்கொண்டவர் சார்ள்ஸ் டிக்கன்ஸ் என்ற நாவலாசிரியர். அழகு—இளமை—மென்மை—அனைத்தும் நிரம்பிய ஒரு பெண்ணைப் படைத்தார் டிக்கன்ஸ். அந்தப் பெண்ணுக்கு ''லூசிமனெட்'' எனப் பெயரிட்டுத் தனது நாவலின் கதாநாயகி ஆக்கிக்கொண்டார்.

மதுவைத் தவிர இனிய பொருள் எதுவும் இவ்வுலகில் இல்லை என்று நம்பினான் ஓர் இளம் வழக்கறிஞன். நீதிமன்றத்துக்குச் செல்லும் நேரம் தவிர மற்றைய நேரம் எல்லாம் மதுவிலே மூழ்கி இருக்கும் ''சிட்னிகாட்டன்'' என்ற அந்த வழக்கறிஞன் நீதிமன்றத்துக்குச் சாட்சி சொல்ல வந்த ''லூசிமனெட்'' என்னும் இளம் அழகியைக் காணுகிறான். மதுவை விட இன்பம் தரும் பொருளும் இவ்வுலகில் உண்டு என்ற முடிவுக்கு வருகிறான். திருவள்ளுவர் கூறிய தன்னலம் கருதாத பரிசுத்தமான அன்பு—காதல்—அவனிடம் உண்டாகிறது.

சிட்னிக்காட்டன் லூசிமனெட் என்ற அந்த அழகியின் வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்தான். மிக நாகரிகமாகப் பேசினான், மிக நாகரிகமாக நடந்துகொண்டான். இக்காரணத்தால் அவனை அவள் கற்றறிந்த நண்பனாகவும் நாகரிகம் மிக்க விருந்தினனாகவும் மதித்துப் பழகி வந்தாள்.

ஒரு நாள் சிட்னி காட்டன் தனது தன்னலமற்ற அன்பினை — காதலினை — லூசிமனெட்டிடம் வெளிப்படுத்தினான்.

லூசிமனெட் மிகவும் நிதானத்துடன் சார்ள்ஸ்டார்ணே என்பவனைத் தான் விரும்புவதாகவும் அவனைத் திருமணம் செய்ய இருப்பதாகவும் தெரிவிக்கிறாள்.

இந்த இடத்தில் தான் சிட்னி காட்டனின் மலரினும் மெல்லிய காதல் உணர்வு சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. தன் காதலை அவள் ஏற்கவில்லை என்று அவன் ஆத்திரப்படவில்லை. தன் மகிழ்ச்சியை விடத் தன்னால் காதலிக்கப்பட்டவளின் மகிழ்ச்சி பெரிது என்று எண்ணுகிறான் சிட்னிக்காட்டன். லூசிமனெட்டைப்பார்த்து ''உனக்கோ உனது அன்புக்கு உரியவர்களுக்கோ எப்போதாவது ஏதாவது துன்பம் ஏற்பட்டால் அதை உயிரைக் கொடுத்தும் விரைந்து நீக்க நான் இருக்கிறேன் என்பதை நினைவில் வைத்துக் கொள்.'' என்று கூறி விட்டுச் சென்று விடுகிறான்.


கூறியவாறே அவளது காதலனை மரண தண்டனையில் இருந்து காப்பாற்றுவதற்காகத் தன்னைத் தியாகம் செய்து தான் மரண தண்டனையை ஏற்கிறான் சிட்னி காட்டன்.

திருவள்ளுவரின் காதல் இலக்கணத்துக்குச் சிட்னி காட்டன் இலக்கியமாகத் திகழ்வதைக் கண்டோம்.

### எட்டுத் தொகையில் விலங்குகள் காதல்

இனித் தன்னலம் கருதாத காதலை எட்டுத் தொகையில் ஒன்றாகிய கலித் தொகையில் காண்போம்.

அந்தப் பாடல் தன்னலம் கருதாத



காதலை மனிதருக்குக் காட்டுவதற்காக ஓர் ஆண்மானையும் பெண் மானையும் எடுக்கிறது.

பாலை நிலத்தில் ஆண்மானும் பெண்மானும் செல்கின்றன. வெயிலோ மிகவும் உஷ்ணமாக இருக்கின்றது.

இருமான்களும் வெயினால் மிகவும் களைத்து விடுகின்றன. தங்குவதற்குச் சிறு மர நிழல் கூட இல்லை.

அந்த நிலையில் ஆண்மான் வெயிலால் தான் வாடுவது பற்றிக் கவலைப் படவில்லை. பெண்மான் வெயிலாற் பதை பதைக்கின்றதே என்று கவலைப் படுகிறது. பெண்மானின் துன்பத்தை உடனே நீக்க வேண்டுமே என்று துடி துடிக்கிறது. அந்த நெருக்கடி நிலையில் ஆண்மானுக்கு — கலைமானுக்குத் திடீரென ஒரு வழி தோன்றுகின்றது.

கலைமான் வெயிலில் நிற்கிறது. அப்போது அதன் நிழல் நிலத்தில் விழுகிறது. அந்த நிழலில் பெண்மானை ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்கிறது. தான் வெயிலில் நின்று கொண்டு தனது நிழலைப் பெண்மானுக்குக் கொடுக்கும் கலைமான் காதற் கலைமானாக விளங்குகிறது.

மலரினும் மெல்லிது காமம் என்ற வள்ளுவரின் கருத்தை கலித்தொகை மானில் வைத்துக்காட்டியுள்ளது.

''இன்னிழலின்மையான்
வருந்தியமடப்பிணைக்கு
தன்னிழலைக் கொடுத்தளிக்கும்
கலைமான் ... ரத்தாரே''

... கலைமான் இனிய நிழலில்லாத படியால் வருந்திய பிணைக்குத்தான் நின்று தன் நிழலைக் கொடுத்தது என்கிறார்.

இலக்கியங்கள் காதலின் மென்மையைக் காட்டும் அதேநேரத்தில் காதலைப் பெற்றோர்கள் எவ்வாறு எதிர்க்கின்றனர் என்றும் காட்டுகின்றன.

### காதலும் பெற்றோரும்

காதல் என்ற வார்த்தையைக் கேட்டதுமே சீறிப்பாயும் இயல்பு பெற்றோர்களுக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. காதல் என்று ஆரம்பித்ததோ பெற்றோரின் எதிர்ப்பும் அன்றே ஆனது.

இந்த உண்மையை மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மிக அழகாகக் கூறுகின்றார்.

''நாடகத்திற் காவியத்திற் காதலென்றால்
நாட்டினர்தாம் அதைவியந்தே நன்றாம் என்பார்
ஊடகத்தே வீட்டினிலே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் பலருங்கூடிப்
பாடைகட்டி அதைக் கொல்ல முயலுகின்றார்''

என்கிறார்.

### பெற்றோர்பற்றிப் பாரதிதாசன்

தோள் வலியும் நல்லுளமும் கொண்ட இளைஞன் ஒருவனும் பண்பும் அழகும் பொருந்திய பாவை ஒருத்தியும் ஒருவரை ஒருவர் உயிரினும் மேலாகக் காதலித்தனர். இது பெண்ணின் தந்தைக்கும் தமையனுக்கும் தெரிந்து விட்டது.

இதனை அறிந்ததும் தந்தையும் தமையனும் என்னபாடுபட்டனர் என்பதைக் காதலியே கூறுவதாக அமைந்த பாரதிதாசன் பாடலைப் பார்ப்போம்,

''குடும்பத்தின் பெயர் கெடுக்கத்
தோன்றி விட்டாய்!''
கொடியவளே! விஷப்பாம்பே!
என்று தந்தை
தட தட என்றிருகையால்
தலையில் மோதித்
தரையினிலே புரண்டழுதார்
அண்ணன் அங்கு
மட மட வென்றே கொல்லைக்
கிணற்றில் வீழ்ந்தே
மாய்வார் போல் ஓடிப்பின்
திரும்பிவந்தே
''படுபாவி'' என்று நைந்தார்,

என்கிறாள்.

தகப்பனார் மகளின் காதலை அறிந்ததும் கௌரவமான எங்கள் குடும்பத்தின் பெயரைக் கெடுக்கத்தான் பிறந்

**புலவர்**
**ம. பார்வதிநாதசிவம்**

தாய் என்றாராம். கொடியவளே! விஷப்பாம்பே! என்றாராம் அவருக்குக் காதல் விஷமாகத் தெரிகிறது. தனது 'தலையிலே தட தட என்று அடித்துக் கொண்டாராம்.

தமையன் தங்கையின் காதலை அறிந்ததும் மட மட வென்று கிணற்றுள் வீழ்பவர் போல் கிணற்றுக்குக் கிட்ட ஓடித்திரும்பி வந்தானாம்.

காதலைப் பெற்றோர் எதிர்ப்பது இன்று நேற்று ஏற்பட்டதன்று. காதல் என்று தோன்றியதோ எதிர்ப்பும் அன்றே தோன்றியது எதிர்ப்பதற்குப் பெற்றோர்கள் பல காரணங்களைக் கூறுவார்கள். ஆயினும் எதிர்ப்பு எதிர்ப்புத்தான் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தான் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் குறித்து

# சர்வஜன வாக்கெடுப்பு நடத்தினால் அரசுக்கு அதில் வெற்றி கிடைக்குமா?

## உள்ளும் புறமும்

குறமுனி

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைச்சர் பீரிஸ் முன்வைத்திருக்கும் யோசனைகள் 'பிஞ்சிலேயே பழுத்து — வெம்பி அழுகிப்போய் விடுமா?

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இன்று கிளப்பப்படும் முக்கிய கேள்வி இதுதான்.

தீர்வு யோசனைகளை அரசு முதன் முதலில் வெளியிட்ட சமயம் அது இருந்த வடிவத்தில் இப்போது இல்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக தீர்வு யோசனைகளில் தெரிவிக்கப்பட்டிருந்த அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான பல அடிப்படை அம்சங்கள் அதிலிருந்து நீக்கப்பட்டு விட்டன.

அதே போன்று —

தீர்வு யோசனைகள் முதன் முதலில் வெளியிடப்பட்ட சமயம் அதற்கு பொதுமக்கள் மத்தியிலும் ஏனைய அரசியல் கட்சிகள் மத்தியிலும் இருந்த வரவேற்பும் ஆதரவும் கூட இன்று இல்லை என்பதுதான் உண்மை.

அதிகாரப் பரவலாக்கல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாயின் அதற்கு வழி செய்யும் விதத்தில் அரசமைப்புத் திருத்தப்பட வேண்டும். அத்தகைய அரசமைப்புத் திருத்தத்தை செய்வதாயின் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவும், சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் இசைவும் கட்டாயமாகும்.

சட்டரீதியாக அரசமைப்பை மாற்றுவதற்கான ஒரே வழி இது தான்.

ஆனால் அரசின் தீர்வு யோசனைகளில் ஒற்றை யாட்சி முறை கைவிடப்படல், வடக்கு—கிழக்கு இணைப்பு, அதிகாரப் பரவலாக்கல் அலகுக்கு காணி அதிகாரம் வழங்கல் போன்றவை இடம் பெற்றிருக்கும் வரை அத்தகைய அரசமைப்பு மாற்றத்துக்கு ஐ. தே. க. உடன்பட்டு வராது என்பது ஓரளவு தெளிவாகியுள்ளது.

ஐ. தே. கட்சியின் ஆட்சிக் காலத்தில் அதிகாரப் பரவலாக்கலுக்கு வழி செய்யும் விதத்தில் இலங்கை—இந்திய உடன்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைக்கு மேலதிகமாக — அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கலுக்கு மேல் — ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு ஐ.தே.க. உடன்படாது என்பதே அக்கட்சியின் பிந்திய நிலைப்பாடு என்று தெரியவருகின்றது.

எனவே ஐ. தே. கட்சி இந்த நிலைப்பாட்டில் இருக்கும் வரை அதிகாரப்பரவலாக்கலுக்கு வழி செய்யும் அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது — தற்போதைய அரசமைப்பை சட்ட ரீதியாக மாற்றி, அதன் இடத்துக்கு மறு சீரமைக்கப்பட்ட புதிய அரசமைப்பைக் கொண்டு வருவது — பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு இயலாத ஒன்றாகவே இருக்கும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு ஆதரவு பெறாத எந்த அரசமைப்புத் திருத்தத்தையும், சட்ட ரீதியாக்குவதற்காக மக்கள் முன் கருத்துக் கணிப்புக்கு (சர்வஜன வாக்கெடுப்புக்கு) வைக்க முடியாது.

எனினும் ஜனாதிபதி விரும்பினால் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஏதேனும் ஒரு விடயத்தை மக்கள் முன் வைத்து சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அவர்களின் கருத்தை அறிந்து கொள்ளலாம். அதற்கு தற்போதைய அரசமைப்பில் இடம் உண்டு. ஆனால் அத்தகைய மக்கள் தீர்ப்பு ஏதும் சட்டமாக மாறிவிடாது. அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பு சட்டமாக்கும் அதிகாரமற்ற ஒன்றாகவே (Non Binding Referendum) கருதப்படும்.

எனவே நாடாளுமன்றத்தில் தனது அதிகாரப்பரவலாக்கல் திட்டத்துக்கு மூன்றில் இருபங்கு ஆதரவு கிடைப்பதற்கு ஐ.தே.கட்சி ஒத்துழைக்காவிட்டால் —

சர்வஜன வாக்கெடுப்பு (Non Binding Referendum) ஒன்றை இது விடயத்தில் நடத்தி, மக்கள் ஆதரவை தமது தீர்வுத் திட்டத்துக்குச் சாதகமாகப் பெற்று, மக்கள் ஆதரித்து விட்டதால் மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் இருக்கும் ஐ.தே. கவினர் உட்பட அனைவரும் தீர்வுத்திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்ற தார்மீக அழுத்தத்தை எம். பிக்கள் மீது திணித்து, அதன் மூலம் தமது தீர்வுத்திட்டத்துக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரு பங்கு ஆதரவைப் பெறலாம் என அரசுத் தலைவர்களும் ஜனாதிபதியும் கருதுகின்றனர்.

சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் தீர்வுத் திட்டத்துக்கு மக்கள் ஆதரவைப் பெற்றுவிட்டால் —

சட்டரீதியாக இல்லாவிடினும் சட்ட முரணான வகையிலும் — முப்படைகளின் தளபதி என்ற முறையில் தமக்கு இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி — தற்போதைய அரசமைப்பைச் செயலிழக்கச்செய்து, புதிய அரசமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வர முடியும் என்று ஜனாதிபதி கருதுவதாகவும்—

முன்கூட்டியே சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் ஆதரவைப் பெற்று அதனை உலகுக்கு அம்பலப்படுத்தி விட்டால், பின்னாளில் இத்தகைய தவறான நடவடிக்கை மூலம் (சட்ட முரணான வகையில்) புதிய அரசமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வந்தாலும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவே தாம் அத்தகைய வழியை நாடியதாக உலகுக்கும் நாட்டுமக்களுக்கும்—தேவைப்பட்டால் நீதிமன்றங்களுக்கும் — பின்னர் விளக்கம் கூறலாம் என்று ஜனாதிபதி நினைப்பதாகவும் —

அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் ஜனாதிபதியின் எதிர்பார்ப்புக்கு மோசம் வருவது போன்ற நிலையே தேர்தல் களத்தில் — மக்கள் மனதில் — உருவாகி வருவதாக களநிலைவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அறுபதுக்கும் அதிகவீத வாக்குகளைப் பெற்று சந்திரிகா குமாரதுங்க அதிசய சாதனை படைத்தார் என்பது உண்மையே. அதே ஆதரவு தாங்கள் நடத்த உத்தேசித்திருக்கும் சர்வஜன வாக்கெடுப்புக்கும் கிடைக்கும் என்று அரசுத் தரப்பினர் பகல் கனவு காண்பது தான் வேடிக்கை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரியான தலைமைத்துவம் இன்றிக் குழம்பியிருந்த ஐ. தே. கவை எதிர்த்து—மக்கள் ஆதரவு ஏதுமில்லாத அதன் வேட்பாளரான திருமதி சிறிமாவி காமினி திஸநாயக்காவை எதிர்த்து—17 வருட ஐ. தே. க. ஆட்சியில் கசப்புற்றிருந்த மக்களின் மனநிலைக்கு மத்தியில்—சந்திரிகா குமாரதுங்க அந்த வெற்றியை ஈட்டினார்.

அன்று தமிழ் மக்களின்—தமிழ்க் கட்சிகளின் கணிசமான ஆதரவு சந்திரிக்கா குமாரதுங்காவிற்கு இருந்ததும் அவர் அறுபதுக்கும் அதிக வீதமான வாக்குகளை பெற காரணமாயிற்று.

ஆனால் நிலைமை இன்று அடியோடு மாறிவிட்டது.

அரசின் தீர்வுத் திட்டத்துக்கு ஐ. தே. கட்சி பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவிக்கும் சூழ்நிலை உருவாகி வருகின்றது.

சிங்கள இனவாதக் கட்சிகள், சிங்களத் தீவிரவாதப் போக்கு அமைப்புகள், மகா சங்கத்தினர், பிக்குகளில் கணிசமானோர் எனப் பல தரப்பும் அரசின் தீர்வுத் திட்டத்துக்கு எதிராக ஓரணியில் இணைந்து 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற நிலையை எட்டியிருக்கின்றனர்.

போதாக்குறைக்கு அரசாங்கத்தில் இடம்பெற்றிருக்கும் புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) அணியினரும் சிறிமானி அத்துலத்முதலி, மற்றும் ரவி கருணநாயக்கா எம். பி. போன்றோரின் தலைமையில் தீர்வுத் திட்டத்துக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியிருக்கின்றனர்.

தவிரவும், ஆளும் கட்சியின் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கும் டி. எம். ஜயரட்ண போன்ற சில இனவாதப் போக்கு அமைச்சர்களும் தீர்வுத் திட்டத்துக்கு எதிராகக் கொடித் [illegible] வல்.

சிங்கள மக்களிடையே தீர்வுத் திட்டத்துக்கு எதிராக எழுந்துள்ள உணர்வலைகளுக்கு மத்தியில் அத்திட்டத்துக்கு தமிழ் மக்களிடமிருந்து கிடைக்கக்கூடிய ஏகோபித்த ஆதரவே அரசுக்கு ஆறுதல் தருவதாக இருக்கவேண்டும்; இருக்க முடியும். ஆனால் அதுவும் தடம் மாறி ஏகோபித்த எதிர்ப்பு நிலையை நோக்கித் திரும்பிக்கொண்டிருப்பதை அரசு உணர்வதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்களிடையேயுள்ள முக்கிய கட்சிகள், அமைப்புகளை எடுத்துக்கொண்டால் அவை:- தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி., புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். ஈரோஸ், ரெலோ, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் மற்றும் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவையாகும். தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் என்று எடுத்துக்கொண்டால் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இப்போதுள்ள சூழ்நிலையைக் கவனத்திற் கொண்டால் அரசு தனது திட்டத்தை தற்போதைய வடிவத்தில் முன்னெடுக்குமானால் முழு தமிழ் பேசும் மக்களின் — அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின்—ஒட்டு மொத்த எதிர்ப்பை அது சம்பாதிக்க வேண்டியிருக்கும் என்பது கண்கூடு.

தமிழீழ விடுதலைப் புலிகளும் அவ்வமைப்புசார்பான தமிழர்களும் அரசின் தீர்வுத் திட்டத்தை ஆதரிக்கப்போவதில்லை என்பது சர்ச்சைக்கு அப்பாற்பட்ட விடயம்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றைய ஒரு கட்சியான ஈ.பி.டி.பி. ஒரு விடயத்தில் தீர்க்கமாக உள்ளது. தற்போது இணைந்து ஐக்கியமாக இருக்கும் வடக்கும் கிழக்கும் (திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் அனைத்தும்) எந்த வித கேள்விக்கும் இடமின்றி தொடர்ந்து ஒரே அலகாகப் பேணப்பட வேண்டும்; அவை பிரிக்கப்படமுடியாதவை என்பதே ஈ.பி.டி.பி. தலைமைத்துவத்தின் விடாப்பிடியான நிலைப்பாடு. இதில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் அக்கட்சி இடங்கொடுக்க மாட்டாது என்பதேபலரதும் நம்பிக்கை.

ஆனாலும், தமிழ்க் கட்சிகள் எதிர்த்தாலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட மக்கள் விரும்பினால்தான் அந்த இரு மாவட்டங்கள் மட்டும் வடக்குடன் இணைக்கப்படும் என்று அரசுத் தரப்பில் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார் அமைச்சர் ஜி.எல். பீரிஸ்.

இணைப்பு விடயத்தில் ஈ.பி.டி.பி. கொண்டுள்ள விடாப்பிடியான நிலைப்பாட்டுக்கு மாறான — முரணான — நிலையை அரசு கைக்கொள்ளும் என்பதை அரசின் சார்பில் அமைச்சர் பீரிஸ் வெளியிட்ட பின்னர், தீர்வுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி அல்லது தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி ஈ.பி.டி.பியோ, அதன் தலைமைத்துவமோ தமிழ் மக்களை கேட்டுக்கொள்ளப் போவதில்லை என்பது தெளிவு.

இதேபோன்ற நிலைப் பாட்டையே ஈ. பி. ஆர். எல். எவ்., ஈரோஸ் போன்ற கட்சிகளும் கொண்டுள்ளன.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி அரசின் தீர்வுத் திட்டத்தை வெறும் ஏமாற்றுவித்தைஎன்று குறிப்பிட்டு ஆரம்பத்திலேயே அடியோடு தூக்கி எறிந்து விட்டது.

எனவே தீர்வுத்திட்டம் சர்வஜன வாக்கெடுப்பாக மக்கள் முன்வைக்கப்படும் போது அதற்கு ஆதரவாக வாக்களிக்கும்படி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமோ அல்லது ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்கட்சி போன்றவையோ கேட்கப் போவதில்லை.

ஏனைய தமிழ்க் கட்சிகள் வடக்கு — கிழக்கு இணைப்பு மாற்றப்பட முடியாத அம்சம் என்பதில் தீவிரமாக இருந்தால் அந்த வழியிலேயே 'புளொட்' அமைப்பும் நிற்கும் என்று கொழும்பு தமிழ் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தமிழ்ப்பேசும் மக்களின் எஞ்சிய கட்சிகள் என்று கருதினால் அவை தமிழர் விடுதலைக் கூட்டணி, இ. தொ. க., மலையக மக்கள் முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் ஆகியவையாகும்.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களை வடக்குடன் இணைப்பது குறித்து அந்த மாவட்டங்களிலும் —

கிழக்கில் உள்ள சில முஸ்லிம் பிரதேசங்களுக்கு தனியான நிர்வாக அலகு ஒன்றை உருவாக்குவதற்கு அப்பிரதேசங்களிலும் —

தனித்தனியான சர்வஜன வாக்கெடுப்புக்களை நடத்தும் திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முற்றாக எதிர்க்கின்றது. சர்வஜன வாக்கெடுப்பு இன்றியே இந்த இரண்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அக்கட்சித் தலைவரான அமைச்சர் அஷ்ரப்பின் நிலைப்பாடு.

ஆனால் யார் எதிர்த்தாலும் இந்த இரண்டு விடயங்களையும் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டே தீரும் என்று அமைச்சர் பீரிஸ் அரசு சார்பில் கூறியிருப்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை அதிருப்திக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

என்றாலும் அரசில் இடம் பெற்றிருக்கும் அமைச்சர் என்ற முறையிலும்—

ஜனாதிபதி சந்திரிகாவுடன் நல்லுறவைப் பேணும் ஒரு முஸ்லிம் தலைவர் என்ற முறையிலும் —

அரசு நடத்த உத்தேசிக்கும் சர்வஜன வாக்கெடுப்பின்போது அரசின் கோரிக்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# திருப்பதி லட்டின் வரலாறு

திருப்பதி என்றதுமே பக்தர்கள் அனைவருக்கும் முதலில் நினைவுக்கு வருவது கோவிந்தராஜர் என்று அழைக்கப்படும் ஏழுமலையானும் அடுத்தபடியாக நினைவுக்கு வருவது அவரது கோயிலில் தரப்படும் பிரசாதமான லட்டும் தான்.

அந்த லட்டின் தரம் குறைந்து வருவதும் விலை உயர்ந்து வருவதும்தான் பக்தர்களுக்குப் பெருத்த குறை என்றால் மிகையாகாது.

1940 களில் தான் திருப்பதி லட்டு பொதுமக்களுக்கு விற்பனைக்கு வந்தது.

அப்போது அதன் விலை வெறும் 50 சதம். நிறை 700 கிராம். அதாவது அரைக்கிலோவுக்கு மேல்.

8 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் எடை கணிசமாகக் குறைக்கப்பட்டு விலை ஒரு ரூபா என்று நிர்ணயிக்கப்பட்டது. அப்போது 175 கிராம் தான் அதன் எடை.

1974 — 75 இல் அதன் விலை ரூ 2 ஆக உயர்த்தப்பட்டது. 3 ஆண்டுகளுக்குப் பிறகு விலை ரூ. 3 ஆக உயர்த்தப்பட்டது. பிறகு 1980 களின் ஆரம்பத்தில் விலை ரூ. 4 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

14 — ஆம் நூற்றாண்டில்தான் ஆலயத்தில் பிரசாதங்கள் முதன் முதலாக விற்பனைக்கு வந்தன. பெருமாளுக்கு நைவேத்தியம் செய்யப்படும் பிரசாதங்களின் வகைகள் அதிகமானதைத் தொடர்ந்து. அவற்றைப் பக்தர்களுக்கு விற்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

லட்டை குறைந்த விலைக்கு விற்பதால் ஆலயத்துக்கு ஆண்டுதோறும் 14 கோடி இழப்பு ஏற்படுவதாக ஆலய நிர்வாகிகள் கூறுகின்றனர்.

விலையைப் பற்றி என்ன கவலை, தரமாக இல்லையே என்று பக்தர்கள் அங்கலாய்க்கின்றனர். ★

# நாடாளுமன்றம் அருகே 500 கிலோ குண்டு மீட்பு

ஜேர்மனியின் பொன் நகரில் உள்ள ஜேர்மன் நாடாளுமன்றக் கட்டடத்தின் அருகே 500 கிலோ நிறைகொண்ட வெடிகுண்டு புதைந்து கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

குண்டு கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அருகே உள்ள 29 மாடிகளைக் கொண்ட கட்டடத்தில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஊழியர்களும் அங்கிருந்து அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர். அருகே உள்ள வீடுகளில் வசிக்கும் மக்களும் தற்காலிகமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

உடனடியாகவே குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் அங்கு வரவழைக்கப்பட்டனர்.

இரண்டாம் உலக யுத்தகாலத்தில் நேச நாடுகளின் போர் விமானங்கள் வீசிய குண்டுகளில் ஒன்றாக இது இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஜேர்மனியில் இது போன்ற யுத்தகாலக் குண்டுகள் நிலத்துக்கடியில் இருந்து அடிக்கடி கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. ★

# வெற்றிலைக்கு தைவானில் தடை!

வெற்றிலை, பாக்கு, பீடா என்பன வற்றை வாயில் போட்டு மென்று அழகிய வெள்ளைச் சுவர்களை யெல்லாம் ரத்தச் சிவப்பாக்கும் வெற்றிலைப் பிரியர்கள் தைவான் நாட்டிலும் அதிகம். இதனால் தைவான் அரசு வெற்றிலைப் பயிர்களை அழித்து விடமுடிவு செய்துள்ளது. தெருவோர வெற்றிலைக் கடைகளை மூடிவிடவும், வெற்றிலை—பாக்கு விற்பவர்கள் மீது வரி விதிக்கவும் அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

தைவானில் வாய்ப்புற்று நோய் அதிகரித்து வருவதால் இந் நடவடிக்கைகளை எடுக்க அரசு முடிவு செய்துள்ளது. ★

# கோபி அன்னான் சொன்ன கதை

ஐக்கிய நாடுகள் சபையில் 35 ஆண்டுகள் பணியாற்றியவர் கோபி அன்னான். அவர்தான் தற்போது அதன் பொதுச் செயலாளராகப் பணியாற்றுகிறார்.

இவர் தமக்கு 17 வயதாகும் போது கானா நாட்டில் படித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் தலைமையாசிரியர் கோபி அன்னான் இருந்த வகுப்பறைக்குள் நுழைந்தார். அங்கு இருந்த கரும்பலகையில் ஒரு பெரிய வெள்ளைத்தாளை ஒட்டினார். பிறகு அந்தத் தாளின் ஓர் ஓரத்தில் ஒரு கறுப்புப் புள்ளியை வைத்தார்.

பின்னர் அவர் மாணவர்களைப் பார்த்து ''இப்போது நீங்கள் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். வகுப்பிலிருந்த எல்லா மாணவர்களுமே 'கறுப்புப் புள்ளி' என்று ஒருமித்த குரலில் கத்தினார்கள். தலைமையாசிரியர் சிரித்துக் கொண்டே கூறினார். உங்களில் ஒருவர் கூட இந்தக் கரும்பலகையிலிருந்த பெரிய வெள்ளைத் தாளைக் காணவில்லையா...? உங்கள் வாழ்க்கையில் இந்த மாதிரிப் போக்கைக் கடைப்பிடிப்பது நல்லதல்ல'' என்றார்.

இந்த அனுபவத்துக்குப் பின்னர் தான் எந்த ஒரு பிரச்சினையையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்க வேண்டும் என்பதைத் தான் கற்றுக் கொண்டதாக கூறுகிறார் கோபி அன்னான். ★

# வீரப்பனிடம் சிக்கவிருந்த பி.பி.ஸி செய்தியாளர்கள்!

பி.பி.ஸி நிறுவனத்தைச் சேர்ந்த செய்தியாளர்கள் மூவரைக் கடத்துவதற்கு வீரப்பன் திட்டமிட்டிருந்ததாகக் கர்நாடக உளவுத் துறையினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கடைசியாக வீரப்பன் வாகனம்ஒன்றை வழி மறித்து அதிலிருந்த வனத்துறைப் படப்பிடிப்பாளர்கள், விவசாயத் துறை விஞ்ஞானி ஆகியோர் உட்பட ஆறு பேரைக் கடத்திச் சென்றது தெரிந்ததே.

காட்டு வழியில் அந்த வாகனை வழிமறித்த வீரப்பன் ''வெளிநாட்டுக்காரர்கள் உள்ளே இருக்கிறாங்களா?'' எனக் கேட்டாராம்.

விவரணப் படம் ஒன்றைத் தயாரிப்பதற்காக இம்ரான். குரிஷித், மற்றும் இன்னொருவர் உட்பட மூன்று பி.பி.ஸி செய்தியாளர்களும் அன்றைய தினம் அந்த வழியாக வானில் செல்ல இருந்தனர்.

தற்செயலாக அவர்கள் குறிப்பிட்ட தினத்துக்கு முதல் நாளே அங்கு சென்று விட்டுத் திரும்பி விட்டதால் வீரப்பனிடம் சிக்காமல் அதிர்ஷ்ட வசமாகத் தப்பி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு மாநிலங்களுக்கு இடையிலான விவகாரமாக மட்டும் இருந்து வரும் தனது பிரச்சினையில் உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக வெளிநாட்டவர்கள் எவரையாவது கடத்தி விடவேண்டும் என்பதில் வீரப்பன் ஆர்வமாக உள்ளார் என்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை நோக்கமாகக் கொண்டே பி.பி.ஸி செய்தியாளர்களை இலக்குவைத்தாராம் வீரப்பன். ★

## பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

### கர்ப்பப் பையில் 6 கிலோ கட்டி

திருமணமாகாத பெண் ஒருவரின் கர்ப்பப் பையிலிருந்து ஆறு கிலோ நிறையுடைய கட்டி ஒன்றை டாக்டர்கள் அகற்றியுள்ளனர்.

தமிழகத்தில் மூணாறு என்னும் இடத்தைச் சேர்ந்த 21 வயதான பெண்ணின் வயிற்றில் இருந்தே இக்கட்டி அகற்றப்பட்டது.

ஒரு வருட காலமாக நீடித்த தீராத வயிற்று வலியை அடுத்து டாக்டர்களிடம் சென்று பரிசோதித்த போதே இப்பெண்ணின் கர்ப்பப் பையில் கட்டி வளர்ந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

### ஆதிவாசிகள் பட்டினி

அந்தமான் தீவுக் காடுகளில் வாழும் ஜாரவா பழங்குடியின மக்கள் பசி, பட்டினி காரணமாக உணவைத் தேடி காட்டை விட்டு வெளிவரத் தொடங்கியுள்ளனர்.

ஜாரவா பழங்குடியினர் கடந்த வாரம் காட்டிற்குள் இருந்து குழுக் குழுவாக மத்திய அந்தமான் பகுதியின் வடக்கு படகுத்துறை அருகே வந்தனர். அங்கிருந்தவர்களிடம் தங்கள் வயிற்றைத் தட்டிக் காண்பித்து 'பசி' என்று சைகை காட்டினர். ★

### டயானாவின் காதணி மீட்பு

விபத்தில் சிக்கி உயிரிழந்த இளவரசி டயானாவின் காரில் இருந்து அவரது காதணியை பிரெஞ்சு பொலீஸார்மீட்டுள்ளனர்.

முதலில் காரில் சோதனை நடத்திய பொலீஸார்காதணி உட்பட பல பெறுமதியான பொருள்கள் காணாமற் போயிருக்கலாம் எனக் கருதினர். ஆயினும் பின்னர் பெறுமதி வாய்ந்த அவரது காதணி காருக்குள் கண்டு பிடிக்கப்பட்டதாக 'தடெய்லிமெயில்'' என்ற பத்திரிகைதெரிவித்துள்ளது. ★

### நாய்களின் இராச்சியம்

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜோத்பூரைச் சேர்ந்த கிராமம் பாலி. அங்குள்ள வீதிகளில் மனிதர்களைவிட நாய்கள் தான் அதிகம். சுதந்திரமாகச் சுற்றித் திரியும் நாய்களிடம் எவராவது வம்பு செய்தால் அவர்களை அவை சும்மா விடுவதில்லை. கடித்துக் குதறி விடுகின்றன.

இங்கு இந்த ஆண்டின் முதல் [illegible] மாதங்களில் பட்டும் சுமார் 500 பேர் நாய்க் [illegible] ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

# தன் 'இமேஜை' வளர்ப்பதில் இளவரசர் சார்ள்ஸ் தீவிரம்!

இளவரசி டயானா இறந்த பிறகு சார்ள்ஸின் போக்கு கொஞ்சம் மாறியிருக்கிறது. தன் 'இமேஜ'மக்கள் விரும்பும் படியாக மாற்றியமைத்துக் கொள்ள சார்ள்ஸ் கடும் முயற்சிகள் செய்கிறாராம்.

சமீபத்தில் வட இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் பதியில் மக்கள் வெள்ளம்இவரைச் சூழ்ந்தபோது வழக்கத்துக்கு மாறாக நின்று நிதானித்து அவர்ளுடன் பேசியிருக்கிறார். ஏற்கனவே ஒரு தாளில் எழுதி வந்திருந்த குறிப்புகளை அவ்வப்போது பார்த்தபடி. ''டயனாவின் இறப்பைத் தொடர்ந்து நீங்



சார்ள்ஸ்

கள் அடைந்த சோகம் மற்றும் அளித்த ஆறுதல் வார்த்தைகள் எனக்கும் என் குழந்தைகளுக்கும் எந்த அளவுக்கு நிம்மதியைக் கொடுத்துள்ளது என்பதை என்னால் வார்த்தைகளில் கூறமுடியவில்லை'' என்று கூற, மக்களிடையே சலசலப்பு. பலர் அழுதார்கள்; பலர் கைதட்டினார்கள்; ஆறுதலாக சார்ள்ஸின் கையைக் குலுக்கியவர்களும் உண்டு.

முக்கியமாக ''வில்லியமும், ஹரியும் எப்படி இருக்கிறார்கள்?'' என்று நெகிழ்ச்சியோடு கூட்டத்தினர் ஒட்டு மொத்தமாகக் கேட்டிருக்கிறார்கள்.

தனது இருமகன்களுக்கும்தான் மக்களுக்கும் தனக்குமிடையே உள்ள பாலம் என்பதை சார்ள்ஸ் நன்றாகவே உணர்ந்திருக்கின்றார்.

தாயில்லாக் குழந்தைகள் (அதிலும் ஒருவர் வருங்கால மன்னன்) என்று மக்கள் கொட்டும் பரிதாப உணர்வில் ஒரு பகுதியையாவது ''தாயில்லாக் குழந்தைகளை வளர்க்க வேண்டிய நிலையில் உள்ள தகப்பன்'' எனும் வகையில் தான் பெற கடுமையாக முயற்சிக்கிறார்;

என் மகன்களைப் பற்றி நான் மிக மிகப் பெருமைப் படுகிறேன். மிகவும் வேறுபட்ட, வேதனையான சூழலை அவர்கள் அசாதாரணத் துணிவுடன் எதிர் கொள்கிறார்கள்'' என்று அடிக்கடி கூறுகிறார்.

சொல்லப் போனால் டயானா இறந்திருக்காவிட்டால்கூட, பொதுமக்களிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பை சார்ள்ஸ் வலியவே உண்டாக்கிக்கொண்டிருப்பார் என்கிறார்கள் இளவரசருக்கு வேண்டியவர்கள். காரணம் ''சார்ள்ஸ் வருங்கால மன்னனாவதில் உங்களுக்கு விருப்பமா?'' என்று அவருக்குத் திருமணமான புதிதில் கேட்ட போது, 82 சதவீதமாக இருந்த ''ஆமாம்'' என்றவர்களின் எண்ணிக்கை அவரது விவாகரத்துக்குப் பிறகு 41 சதவீதமாகக் குறைந்துவிட்டது. இந்தப் பள்ளத்தை ஈடு செய்யவேண்டியது அவசியம் என்று கருதுகிறார் சார்ள்ஸ்.

பல நல்ல விஷயங்களுக்கு சார்ள்ஸ் வாரி வழங்கியிருக்கிறார் என்பதை சமீப காலமாகப் பட்டியலிடத் தொடங்கியிருக்கிறார்கள் பக்கிங்ஹாம் அரண்மனையின் மக்கள் தொடர்பு அதிகாரிகள்.

சார்ள்ஸின் 'இமேஜ்' உயர உதவிக்கரம் நீட்டியிருப்பவர் இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர். ★

# எலிகளுக்கு கிராக்கி!

எலிகளைக் கண்டு முகம் சுழித்த காலமெல்லாம் மலையேறி விட்டது. இப்போது எலிகளும் வீடுகளில் வளர்க்கும் செல்லப் பிராணிகளாகி விட்டன.

ஜேர்மனியில் அண்மையில் நடைபெற்ற ''விலங்குகள் — 97'' என்ற கண்காட்சியில் அனைவரையும் கவர்ந்தவை அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த எலிகள்தானாம்.

ஜேர்மனியில் தற்போது 80 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் எலிகளைச் செல்லப்பிராணிகளாக வளர்க்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் சுழலும் ரோஜா....

பனிச் சறுக்கு விளையாட்டைத் தொலைக்காட்சியில் பார்க்கும் போது தலை சுற்றுகிறது அல்லவா?

மயிர்க் கூச்செறியும் இந்த விளையாட்டில் பம்பரமாய் சுழன்று அபார உலகசாதனைகளைப் படைத்த பலர் உள்ளனர்.

சில்லுகள் பொருத்தப்பட்ட சட்டங்களில் கால்களை வைத்துக் கொண்டு சுழன்றும் சமநிலையில் நின்றும் ஒலிம்பிக் சாதனை வரை எட்டி லட்சக்கணக்கான ரசிகர்களின் மனங்களில் இடம்பிடித்த ரஷ்யத் தம்பதிகளின் கதை இது.

தண்ணீர் பனிக்கட்டியாக இறுகும்போது பாறையை விடக் கடினம் ஆகிறது. 'பாத்றூமில்' தினம் தினம் சறுக்கி விழுபவர்கள் இந்தப் பனிப் பிரதேசங்களின் மீது ஓர் அடி கூட எடுத்து வைப்பார்களா?

சில்லுகள் பொருத்தப்பட்ட சட்டங்களில் கால்களை வைத்துக்கொண்டு கால் கிழியச் சுழன்றும் சமநிலை தவறாமல் நின்று பிடித்தும் ஒலிம்பிக் சாதனைகள் வரை எட்டிப்பிடித்த ரஷ்ய தம்பதிகளான சேகி (Sergei) ஏக்காரேறீனா (Ekareriha) ஆகியோரின் கதை இது.

இளமையில் இருந்தே தொடர்ச்சியான பனிச் சறுக்கல் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்த அவளுக்குப் பதினொரு வயது ஆகும்போது அந்தப் புதிய அனுபவம் கிட்டியது. அந்த இளம் ரோஜா மலருடன் ஜோடியாக சறுக்கல் பயிற்சிகளில் ஈடுபட என அந்தப் பதினைந்து வயது ஆடவன் வந்து சேர்ந்தான்.

எடுத்த எடுப்பிலேயே அவளைக் கவர்ந்துவிட்டாலும் அவன் கருமத்திலே கவனமாகவே இருந்தான். பயிற்சியில் தீவிரமாக இருந்தான். ஏனைய விடயங்களில் அவளோடு பாராமுகமாகவே அவன் நடந்து கொண்டது அந்தப் பதினொரு வயதிலும் அவள் மனதை ஏனோ நெருடியது.

தனித்து ஒருவர் மட்டும் ஈடுபடும் போதே மிகவும் சிக்கலானதாக இருக்கும் இப்பனிச் சறுக்கு விளையாட்டில் இருவர் கரம் கோர்த்து செயற்படுவது என்பது மேலும் பல மடங்கு சிக்கலான காரியம். சறுக்கும் போது ஒருவரின் சமநிலையை அடுத்தவர் கெடுத்து விடாமல் இருவரும் ஒரே விதமாக நிலைமைகளைச் சமாளித்து நின்று பிடிக்க வேண்டும்.

இதற்கான தீவிரமான தொடர்ச்சியான பயிற்சிகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் ஈடுபட்டு வந்தனர். உடலோடு உடல் உரச ஈடுபடும் இப் பயிற்சிகள் அவளது மனதை என்னென்னவோ செய்தன. அவன் மட்டும் எதிலும் பட்டுக்கொள்ளாதவன் போலவே காணப்பட்டான். வயதோ அவளுக்குப் பதினாறையும் அவனுக்கு இருப்பதையும் எட்டிக்கொண்டிருந்தது.

அந்த வேளையில் 1987 இல் ஒரு நாள் வழமை போலவே அவளைப் பட்டும் படாமலும் பிடித்துச் சுழற்றியபடி பயிற்சியைத் தொடர்கிறான் அவன். பனிப்படையின் வெடிப்பு ஒன்றில் அவனது கால் இடறியதுதான் தாமதம் அவளைப் பிடித்திருந்த அவனது பிடியோ தளர்ந்துவிட்டது. பனிப்பாறை மீது சுழற்றி வீசப்பட்ட அவள் பிடரி அடிபட்டு மூளை பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டாள்.

சிலநாட்கள் சிகிச்சையைத் தொடர்ந்து தேறி வரும் அவளது மனக்கவலை எல்லாம் பயிற்சி நாள்கள் வீணடிக்கப் படுவது பற்றியும், அவனோடு கழிக்க வேண்டிய பொழுதுகள் இழக்கப்படுவது பற்றியுமே இருந்தன.

அந்த வேளை பார்த்து சற்றும் எதிர்பாராத விதமாக அவன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். அவனது கரங்களில் ஒரு ரோஜா மலர்ச் செண்டு அவளைப் பார்த்துச் சிரித்தது. அவனது முகத்தில் கவலையும் குற்ற உணர்வும் தென்பட்டன. கண்ணில் நீர்த்துளிகள் கோர்த்து நின்றன. அடிக்கடி வைத்தியசாலைக்கு வந்து அவளது சுகத்தை விசாரிக்கத் தொடங்கிவிட்டான்.

அவள் முற்றாகத் தேறியதும் மீண்டும் பயிற்சிகள் தொடங்கி விட்டன. இப்போது அவனது அணுகுமுறையில் மாற்றம் தெரிந்தது. பயிற்சியின் போது அக்கறையாக அவளை இறுகப் பற்றியபடி அவன் செயற்பட்டது உடலோடு உடலை மட்டும் சேர்க்கவில்லை; உயிரோடு உயிரையும் சேர்த்து விட்டது போலிருந்தது. இருவரும் மனம் இணைந்து செயற்பட்டது பல வெற்றிகளைக் குவிக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்தது.

அவனது உணர்வுகள் அவளது இதயத்திலும், அவளது உணர்வுகள் அவனது இதயத்திலும் தெளிவாகப் பதிந்தன. அந்த இணக்கம் 1988 இல் கனடாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இருவரையும் தங்கப்பதக்கத்தை தட்டிச் செல்ல வைத்து விட்டது. இது அவர்களின் காதலுக்குக் கிடைத்த பரிசு.

இதயத்தில் மலர்ந்த காதல் 1991 சித்திரையில் இனிய திருமணத்தில் இருவரையும் சங்கமம் ஆக்கி விட்டது. 1992 இல் அழகிய பெண் குழந்தை 'டேரியா' பிறந்தாள். குடும்பத்தில் குதூகலத்துக்கும் குறைவில்லை. விளையாட்டில் வெற்றிகளைக் குவிப்பதற்கும் குறைவில்லை என்ற நிலைமை தொடர்ந்தது.

1994 இல் இரண்டாவது ஒலிம்பிக் தங்கப்பதக்கத்தை



மயிர்க் கூச்செறியும் பனிச் சறுக்கல் நடனமாடும் சேகியும், ஏக்காரேறீனாவும்

இவர்கள் நோர்வேயில் தட்டிக் கொண்டனர். இருவர் இணைந்து விளையாடும் பனிச்சறுக்கல் நிகழ்ச்சிகளில் மூக்குடைபடாமல் தப்பியது எப்படி என இவர்களிடம் ஆலோசனை கேட்கும் அளவுக்கு உலகின் முன்னணி பயிற்சி வழங்குநர்கள் நாடி வரத் தொடங்கிவிட்டார்கள். மண வாழ்வில் இணைந்த பின்பும் — குழந்தை பிறந்த பின்பும் — உலகின் முன்னணி நட்சத்திரங்களாகத் திகழலாம் என இவர்கள் நிரூபித்துக் கொண்டிருந்தனர்.

1995 நவம்பர் இருபது. அன்று அவர்களின் விதி தலைகீழாக மாறிய நாள். வழமை போல நியூயோர்க்கின் பலசிட் (placid) ஏரியில் இசை முழக்கத்துக்கு ஏற்ப ஆடி இருவரும் பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இருவரும் முழந்தாளில் ஆளை ஆள் பார்த்தபடி ஒற்றைக்காலில் நின்று சறுக்கத் தொடங்கினார்கள். இசை தணியவும் அவள் அவனைச் சுற்றிச் சுழன்று பின் நிலை எடுத்தாள்.

மீண்டும் இசை உச்சமடையும் நேரம். அவனது கரங்கள் அவளது இடையைப் பற்றிப் படர்ந்து தழுவியபடியே அசுர வேகத்தில் சறுக்க வேண்டிய கட்டம். இசையின் வழியினின்றும் அவன் விலகினான். கரங்கள் இடையைத் தழுவ மறந்தன. [illegible] தாள்கள் மடிந்தன. பனிக்கட்டி மீது சரிந்து விழுந்தான் அவன். அக்கணமே இசை நிறுத்தப்பட்டது. ஏதோ பிழைக்கிறது என்பது அவளுக்கும் இசை வழங்கியவருக்கும் புரிந்து கொண்டது.

விழிகள் சொருகிய நிலையில் பனிப்படை மீது அடியற்ற மரம்போல விழுந்து கிடக்கும் அவனிடம் இருந்து அவளது கதறலுக்கு விடை கிடைக்கவில்லை. உடனடியாக அங்கு விரைந்த அம்புலன்ஸ் அவனை வைத்திய சாலையில் சேர்த்தது.

இதயத் துடிப்பில் சீரற்ற நிலைமை தென்பட்டது. அதனைச் சீரமைக்க முயன்றும் நியூயோர்க்கின் நவீன மருத்துவமனையாலும் வைத்தியர்களாலும் மேற்கொள்ளப்பட்ட அந்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன.

அவளுடைய காதிலே வேல் பாய்ச்சிய செய்தியை நம்பவே முடியாமல் உள்ளே ஓடி வந்தாள். அவன் மீது புரண்டு அழுதாள். மார்பும் வயிறும் சூடாகவே இருந்தன. அவளுக்கு நம்பவே முடியவில்லை. கைகளையும் கால்களையும் பற்றிக் கொண்டாள். அவை பனிக்கட்டி போலக் குளிரவும் அவள் மூளை உறைந்து கொண்டது. அவனது உடலில் சூடு தணியத் தொடங்கியது.

இருபத்தெட்டு வயதில் இதய நோய் அவனைப் பலி கொண்டு விட்டது. நோய் இருப்பதற்கான அசுகையே எவருக்கும் முன்பு தெரியவில்லை. எல்லாவற்றையும் இழந்தவள் போனாள் அவள். களத்திலும் அவனது அரவணைப்பு, காதலிலும் வாழ்விலும் அதே அரவணைப்பு, குவிந்த வெற்றிகள் குவித்த வாழ்த்துக்கள் எல்லாம் வெறுங் கனவாகின. இனி வாழ்வில் ஏதும் மிச்சம் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை. அவனது மரணச் சடங்குகளின் பின் சில வாரங்கள் கழித்து பிரமை பிடித்தவளாக அவள் மொஸ்கோ திரும்பினாள்.

எல்லாம் இழந்து வெறுத்த நிலைமையில் ஆசை மகள் ஏதும் அறியாதவளாய் அப்பாவி போலச் சிரிக்கிறாள். "அவனது முகத்தைப் பார்த்து சிரி; அவளது மலரும் மனதை நோகடிக்காதே; அவளிடம் உன் கணவனைக் காண்; அவளுக்காக ஆரோக்கியமாக வாழ்; உன் கணவனுக்காக அவளைக் காப்பாற்று; உன் கணவனுக்காக நீ பனி மீது இறங்கி களத்தில் ஆடு" என்றெல்லாம் தாய் கனிவுடனும் கண்டிப்புடனும் கூறி வந்தாள்

ஏற்க வேண்டிய நிலைமை. அத்துடன் ஏதாவது ஒன்றில் ஈடுபடாத போது தனிமையில் நினைவுகள் வாட்டுவதை எப்படித் தாங்கிடல் இயலும்? அதில் என்ன திருப்தி கிடைக்கப் போகிறது?

தமிழில்
**மு. சிவநேசன்**

டேரியாவின் சிரிப்பில் தன் கணவனைக் கண்டு திருப்திப் படப் பழகினாள். பனியில் இறங்கி ஆடத் தொடங்கினாள். ஆனால் இறங்கும் போது தனித்தே இறங்கும் மனம் தவிக்காமலா விடும்? இன்னொருவனுடன் சேர்ந்து ஆடுவது என்பது விளையாட்டைப் பொறுத்த வரையில் மட்டும் என்றாலும் கூட அவளால் இனி கற்பனையிலும் எட்ட முடியாத காரியம் ஆகிவிட்டது.

அவனோடு இறங்கமுன் இருவரும் பரஸ்பரம் கொஞ்சிக் கொள்வது ஞாபகத்துக்கு வரும். கண்ணீர் திரையிட்டு மறைக்கும். தனி ஆட்டத்தில் இனி சாதனைகள் செய்வதே தன் கணவனுக்குத் தான் செய்யும் அஞ்சலி என நினைத்துக் கொண்டாள். இறங்க முன்பும் இறங்கும் போதும் நிலைகொள்ளாமல் தவிக்கும் மனது சறுக்கத் தொடங்கியதும் சாதனைகளை எட்டத் தொடங்கி விடும். எல்லாம் மறந்து அவன் சக்தியே தன் சக்தியாக எண்ணி ஆடத் தொடங்கி விடுகிறாள் அவள்.

அவனுடைய ஞாபகார்த்த நிகழ்வாக 1996 பெப்ரவரியில் நடத்தப்பட்ட சறுக்கி விளையாட்டு நிகழ்வில் அவள் ஆட அழைக்கப்பட்டாள். தனித்து ஆட அரங்கம் தாங்குமா அவளின் மனத்துயர் தன்னை என்ற நிலைமை. விழிகளில் நீர் திரள இருளில் அமைதியாக ஆடத் தயாராக நின்று கொண்டிருந்தாள் அவள். மெல்ல ஒளி வெள்ளம் பிறந்து பிரகாசம் அடையவும் இசை பிறந்து தாளம் போடவும் உலகினை மறந்து ஆடத் தொடங்கினாள் அவள். அவனும் சேர்ந்து ஆடுகிறான் என்ற உணர்வு அவளை எங்கெங்கோ மிதக்க வைத்தது.



மகள் டேரியாவுடன் ஏக்காரேறீனா

உலகின் பல பாகங்களிலும் இருந்து ஏகப்பட்ட ரசிகர்கள் வந்து குவிந்திருந்த நிகழ்வு அது. அனைவரும் ஆட்டம் முடியும் தறுவாயில் இருப்புக் கொள்ளாமல் எழுந்தே நின்றனர். ஆட்டம் முடிந்ததும் கூடி ஆடிய அவனைக் காணவில்லை எனத் தவித்தாள் அவள். கண்ணீர் உடைப்பெடுத்து ஓடியது. கையில் தரப்பட்ட ஒலிவாங்கியில் அவள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தாள். தான் தனித்து ஆடியதாக எவரும் எண்ண வேண்டாம். ஆடும் வரை சோடித் துணையாக சேகி இருந்ததாக அவள் குறிப்பிட்டாள்.

என்னதான் இருந்தாலும் இழப்பு இழப்புத்தான்! இதயம் வலிக்கத்தான் செய்யும்! ஓர் இழப்பை இன்னொன்றால் எப்படியும் ஈடு செய்யவே இயலாதே! ★

## ஹைக்கூ

வானத்திலும்
யுத்தப்பிரகடனம் ...
இடி முழக்கம்!

★ ★ ★

சிறிது நேரம்
யுத்த நிறுத்தம்,
தூடாறும பீரங்கி!

★ ★ ★

ஆற்று நீரூற்றியும்
அணையவில்லை
ஜாதீ!

★ ★ ★

எந்த வேடனிடம்
அகப்பட்டாய்?
சமாதானப் புறாவே!

★ ★ ★

நிலத்தைப் பார்த்து
வினாத் தொடுக்கும்
உயிருள்ள
வினாக்குறி
உழவன்!

— தர்மசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தப் ...... பத்து நிமிடங்கள்..

சஞ்சீவி சிறுகதை

-தீபா செத்துப்போனாள்.

இரண்டு ஒற்றைகளில் ஏதோ உப்புச்சப்பில்லாத விஷயங்களை எழுதிவிட்டு, அப்படியும் இடம் போதாமல் கடிதம் எழுதிய கொப்பி ஒற்றையின் ''மாஜின்'' கோட்டுக்கு அப்பால் நேர்கோடாய் குறுக்கிக் குறுக்கி சித்ரா எழுதியிருந்த விஷயம்—

......தீபா செத்துப் போனாள்......

நாலரை மாதங்கள் ஆஸ்பத்திரியில் காயங்களோடு போராடிவிட்டுக் கடைசியில் காலனை ஜெயிக்கவிட்டு—

தீபா செத்துப்போனாள்.!

சனிக்கிழமை ரியூசனின் மூன்று மணித்தியாலங்களையும் தூங்கித் தூங்கிக் கழித்துவிட்டு, சோர்வும், களைப்புமாய் வீடு திரும்பிச் சாப்பிட்டு குட்டித் தூக்கம் போட்டு எழும்பிய பின்பும், கடிதம் பற்றிய சிந்தனையேயில்லாமல், சாவகாசமாய்க் கொண்டு வந்து தந்த அம்மா மீது கோபம் வந்தது.

இவ்வளவுதான் என்றில்லாமல் எம்மோடு படித்த சேகரனைக் கண்டது முதல், ராகினிக்கு றெஜிஸ்ரேஷன் முடிந்தது வரை துருவித் துருவி ஊர்வம்பு அளந்துவிட்டுக் கடைசியில் பின்குறிப்பாய் இதை எழுதிய சித்திரா மீதும் கோபம் வந்தது.

காலையில் ரியூசனுக்குப் போகிறபோது கூட வஞ்சகமில்லாமல் சிரித்தபடி, எனக்கொரு கடிதம் இருக்கிறது என்று கூட சொல்லாமல் பலபேரின் துக்கங்களையும், சந்தோசங்களையும் தானறியாமலே காகிதக் கட்டுகளாய் சுமந்து சென்ற தபாற்காரர் மீது இன்னும், இன்னும் கோபம் வந்தது.

அந்த தபாற்காரரோ, சித்திராவோ அல்லது என் அம்மாவோ கூட என்னுடைய இந்த எரிச்சல் கலந்த கோபத்தை எதிர்பார்த்திருக்க முடியாது.

தீபா செத்துப்போனாள். என் நெஞ்சில் சம்மட்டிபோல் ஓங்கி அறையும் வார்த்தைகள். நம்ப முடியாதவற்றை நம்பு, நம்பு என்று அழுத்தமாய்ச் சொல்கின்ற 'மாஜின்' கோட்டுக்கு அப்பால் குறுக்கி எழுதப்பட்ட வரிகள்......!

தீபா......என் பிரியமான சினேகிதி!

பத்து நிமிடங்கள் மட்டுமே பழகிய பாந்தமான நண்பி.

அந்தப் பத்து நிமிடத்தில் அவளொரு மலராய் விரிந்து, இதமாய் மணம் வீசியது இன்னும் ஞாபகம் இருக்கிறது.

அவளை நான் அறிவேன்; என்னை அவளும் அறிவாள்; இருவரும் நெருங்கியதில்லை. ஒரு சிரிப்பு......அது கூட இல்லை. அதற்குக்கூட எமது ''இமேஜ்'' எமக்கு இடம் கொடுத்ததில்லைப் போலும். அவளும் என்னைப்பார்த்து சிரித்ததில்லை; நானும் அவளைப் பார்த்துச் சிரித்ததில்லை.

ஒரு ''மாணவ முதல்வி'' என்ற நினைப்பு அவளுக்கும் ''தமிழ்ச் சங்கச் செயலாளர்'' என்ற நினைப்பு எனக்கும் இருந்தது அதற்குக் காரணமாய் இருக்கலாம்.

ஒரு முறை தற்செயலாய் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. லைபிரறிக்கு ஒரு புத்தகம் தேடி நான் போய்க் கொண்டிருந்த போது அவளது குரலால் ஈர்க்கப்பட்டு மெல்ல நடந்தேன். அவளது குரல் கலகலப்பாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

''ஐயோ அண்டைக்கு மாதிரி நான் ஒரு நாளுமே பயப்பிட்டேல்லை. இரவிரவாய் கனவிலை பேய்வந்து வெருட்டத் தொடங்கீற்றுது. இனிமேல்...''

அவள் முடிக்கமுதல் இன்னொருத்தி குறுக்கிட்டாள்.

''பேய்ப் படம் பாக்கமாட்டியோ.''...

''இல்லை, இல்லை. இனிமேல் பேய்ப்படம் பார்க்கிறதெண்டா கதவைப் பூட்டிப் போட்டுத்தான் இருந்து பார்க்கிறது......''

அவள் பாவனை சிரிப்பை வரவழைக்கப் 'பக்' கென்று சிரித்துவிட்டேன்.

திடீரென்று என் சிரிப்பை உணர்ந்து முகத்தில் அப்பிய கலகலப்பு வராமல் திரும்பிப் பார்த்தாள். என்னை அங்கே எதிர்பார்க்காததாலும், தன்னுடைய பயத்தை நான் அறிந்து கொண்டதற்காகவும் வெட்கம் குமிழியிட மொட்டையாய்ச் சிரித்தாள். அதற்குப் பிறகு என்னைப் பார்க்கின்ற போது தினமும், கவிழ்ந்து, குனிந்து தன் அசட்டுத்தனத்தை இவள் கண்டுகொண்டாளே என்றதொரு வெட்கத்தோடு என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள். எனக்கும் சிரித்துக் கொண்டுபேசுவதில் எந்த சிரமமும் இருப்பதாகத் தெரியவில்லை;

ஆனால் நான் பத்துநிமிட சினேகிதம் என்று சொன்னது இதையல்ல. அந்த சினேகிதத்திற்கு முதல் ஒரு வருஷமாகவே அவளை நான் அறிந்துவைத்திருந்த போதிலும், அந்தநட்பின்பின் ஒருவருஷம் அவள் உயிருடன் இருந்த போதிலும் அவளை அதற்குப் பின் நான் சந்திக்கவேயில்லை. அவள் என் உன்னதமான சினேகிதி என்றபோதிலும் அவளது குடும்பத்தைப் பற்றியோ, அவளது பெற்றோர் சகோதரர்கள் பற்றிய விஷயமோ எதுவும் எனக்குத் தெரிந்ததில்லை.

அந்தப் பத்து நிமிடங்களில் பல தடவை 'அக்கா' என்று அன்பு குழைய என்னை அழைத்த அவளுக்கு 'அக்கா' என்கின்ற சொந்தம் இல்லாமற் கூட இருக்கலாம். அதனாற்தான் என்னில் அந்தச் சொல்லை உதிர்த்தபோது அவள் கண்கள் மின்னியிருக்கக் கூடும். அண்ணனோ, தம்பி தங்கையோ யாரேனும் இருந்திருக்கக் கூடும். அல்லது, இவளது இந்தப் பிரிவு தாங்க முடியாதபடி அவளேயொரு தனிப்பிள்ளையாகவும் இருக்கலாம். யார் அவள் அம்மா...? யார் அவள் அப்பா...? என் கண்களுக்குள் தெரியும். அந்த மனிதமுகங்களுக்குள் அவளுக்குத் தெரிந்தவர்களாய், அவளுடன் உறவு கொண்டவர்களாய் எந்த மனிதர்கள் இருக்க முடியும்...? அந்தப் பத்து நிமிடங்களை நான் இன்னும் நீடித்திருக்கலாம். அவள் பற்றியறிந்திருக்கலாம். ஆனால், அதுவே நம் முதலும், முடிவுமான நட்பென்று எனக்குத் தெரியாமல் போயிற்று.

இது ஒரு பெரிய தொல்லை. ஊருக்குள் ஒரு பள்ளிக்கூடத்திலேயே நானும் படித்திருக்கலாம். என் பள்ளிக்கூடப் பிள்ளைகளின் சகல வரலாறுகளும் எனக்குத் தெரிய வந்திருக்கும். இது யாழ்ப்பாணத்துக்குப் படிக்கப் போனதால் ஏற்பட்ட நட்பு. அதனாற்தான் அவளைப் பற்றித் தெரிந்த அளவுக்கு அவள் குடும்பத்தைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை. ஆனாலும் அவள் ஒரு ஸ்கூல் பஸ்ஸிற்குக் காத்திருப்பதை நானும் பஸ்ஸிற்துக் காத்திருக்கும்



வேளைகளிற் கண்டிருக்கிறேன். ஒரு கூட்டம் கலகலப்பாய் இருக்கின்றதென்றால் அந்தக் கலகலப்புக்குக் காரணமானவள் இவளாய்த்தானிருக்க முடியும்...?

அவளது குறும்புக் கண்கள், எப்போதும் சிரிப்பிற் சிவக்கும் முகம்... இவளா...? இவளா போனாள் அன்றைக்கு...?

அந்தப் பத்து நிமிடச் சந்திப்பு...

காலத்தாற் செய்த உதவி சிறிதெனினும். ஞாலத்தின் மாணப் பெரிதாம். எனது வாழ்க்கையில் அதற்கு உதாரணம் அவள்.

ராகினி என் முன் நின்று பொரிந்தபடியிருந்தாள் ஆம்... அந்த ராகினி, சற்று முன் சித்ராவால் றெஜிஸ்ரேஷன் என்று குறிப்பிடப்பட்ட அதே ராகினி தான். அவள் அப்போது என்னோடு படித்துக் கொண்டிருந்தாள். நெருங்கிய நண்பி என்றில்லாவிட்டாலும் இதுவரை ஓரளவு நல்லவளாகவே என் கண்களுக்குத் தோன்றியிருந்தாள். அவள் அப்போது தமிழ் மன்றச் செயலாளராகிய என்னிடம் கத்திக்கொண்டிருந்தாள்.

''யூனியன் காசெல்லாம் எங்கை போகுது? சோடா குடிச்சுக், குடிச்சு கரியாக்குங்க காசை... இனிமேல் கேளுங்க தாறம் காசு...?''

யாரோ மூட்டிய நெருப்பு பாளையின் தணலாய்க் கருகிக் கொழுந்து விட்டெரிந்தது.

யார்...? யார்...? நானா? நானா...?

[illegible] போது விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த அத்தனை மாணவிகளும் ஒரு கணம் திரும்பிப் பார்க்க முள் குத்திய வேதனை.

என்னைப்போய், என்னைப் போயா இப்படிச் சொன்னாய்?

என்பாடங்களை வீணாக்கி ரீச்சரிடம் திட்டு வாங்கி தமிழ் யூனியனுக்காக என்னையே தேய்த்து வருகிற என்னைப் பார்த்தா சொன்னாய்...?

தமிழ் யூனியன் மாணவர்களுக்கு வைத்த 'க்விஸ்' போட்டிக்காக என் பாடங்களுக்குத் தேடித் தேடிக் குறிப்புகள் சேகரிப்பதைவிட்டு, அந்தப் போட்டிக்கு கேள்விகள் சேகரித்துத் திரிந்த இந்த 'முட்டாள்' பெண்ணைப் பார்த்தா இப்படிக் கேட்டாய்...?

நா வறள, நா வறள ஒவ்வொரு வகுப்பாய் அலைந்து திரிந்து பிள்ளைகளை ஒழுங்குபடுத்தி கேள்விகள் கேட்டுப் புள்ளிகள் போட்டுக்கொண்டிருந்த போது... தாகத்திற்குத் தண்ணீர் கேட்கப் போக... பொறுப்பாசிரியரின் உத்தரவின் பேரில் சோடா வாங்கி வந்து எமக்குத் தந்ததையா இப்படிக் குத்திக் காட்டுகிறாய்...?

அதிலும், எனக்குச் சோடா ஒத்துக் கொள்ளாததால், மற்றவரின் திருப்திக்காக ஒரு 'மிடறு' விழுங்கி விட்டுப் பச்சைத்தண்ணீரில் விடாய் தீர்ந்த என்னைப் பார்த்து எப்படி ராகினி உனக்கு இப்படிக் கேட்க மனம் வந்தது...?

என் மனம்பொங்கியழுதது. ராகினி பத்ரகாளியாகி நின்றாள்.

என் கண்கள் கதறுவதற்கு ஆயத்தமாகின. தொண்டைக்குள்ளிருந்து வார்த்தைகள் வெளிவர மறுத்தன. அதுவே வசதியாக, ராகினி குற்றம் சுமத்திக் கொண்டே போனாள். அத்தனை நாள்களாய் மனதுக்குள் வைத்திருந்த காழ்ப்பையும், பொறாமையையும் துப்பிக் கொண்டிருந்தாள். இதற்கு மேலும் சும்மாயிருந்தால் என்னைப் பற்றியே அந்த இடத்தில் தப்பபிப்பிராயம் ஏற்பட்டு விடும் போற் தோன்றியது. மெதுவாய் என் நியாயத்தை விளக்கத் தொடங்கினேன்.

தமிழ் மன்றத்தின் செயலாளர் கூனிக்குறுகி நிற்பது அந்தச் சிறிய மாணவர்களின் முன் ஏற்புடையதன்று. இதை வகுப்பிலேயே மெதுவாய் என்னிடம் அவள் கேட்டிருக்கலாம். நடு மைதானத்தில் இவ்வளவுபேர் முன்னில் மறித்து வைத்துக் கேட்டிருக்கத் தேவையில்லை.

''இல்லை ராகினி, அதுக்கு யூனியன்காசை எடுக்கேல்லை நாங்களே காசு குடும்பம்...''

நான் ஏதோ சமாதானம் சொல்லத் தொடங்கிய போது, அருகிலிருந்த மரத்துக்குக் கீழ் பந்து அடித்தபடியே இங்கு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த தீபா அதற்கு மேலும் தாங்க மாட்டாமல் பந்தை விசிறிவிட்டு ஓடி வந்தாள்.

''என்னவாம்...?'' ஏளனமாய்க் கேட்டாள்.

ராகினி அதனைப் பார்க்காதது போல் அந்தச் சின்ன மாணவிகளுக்கு நான் 'யூனியன்' காசை வீணாக்குவதாய் அங்கலாய்த்தாள். அவள் பேச்சின் கவர்ச்சியில் தீபா ஒரு கணம் திகைத்தாள் இப்படியும் ஒருத்தி தன்மேல் உண்மை வரச்செய்ய முடியுமா? இது உண்மையென்றால்.. இவள் வென்று விட்டாளென்றால்... எல்லாமே பொய்யாய்ப் போகும். இதை ஜெயிக்க விடக் கூடாது. சத்தியம் மட்டுமே வெல்லவேண்டும். தீபாவுக்கு அதுதான் அன்றைய கொள்கையாயும், ஏன் இன்றைக்கும் அதுவாய் இருந்திருக்கலாம்.

''அக்கா...'' ஆதரவாய் என் தோள் தடவி நெருங்கினாள்.

''இவள் புருட்டஸைப் போல...'' மெலிதாய்ச் சொன்னாள்.

''புருட்டஸா...?''

''நீங்க சீசரை மாதிரியக்கா தன்ரை பேச்சுக் கவர்ச்சியாலை இவ உங்க மேலை பழி சுமத்துறா. இவவை மாதிரி எனக்கும் பேச்சுத் திறமை இருந்தா... சரி விடுங்க. சீசரிண்டை கறையைப் போக்கி புருட்டஸைக் கெட்டவன் எண்டு நிரூபிக்க ஒருத்தன் இருந்தானே. அதே மாதிரி நான் வந்திட்டன் அக்கா...''

தீபா... தீபா இதெல்லாம் நீஎங்கே படித்தாய்...? என்று நான் திகைத்தபோது தீபா, தீயாகிச் சிவந்த கண்களோடு ராகினியைப் பார்த்து விட்டு அந்தப் பிள்ளைகளைப் பார்த்துக் கேட்டாள்.

''யூனியன் காசு யூனியன் செலவுக்குத் தானே'.'' சிறிசுகள் தலையாட்டின.

''இந்த அக்கா உங்களுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்யிறா. உங்களுக்காக வேலை செய்யாமல் விட்டால் அக்காவுக்கு தண்ணியே விடாய்ச்சிருக்கா. சோடா வாங்கவே தேவையிருக்கா இந்த அக்கா தன்ரை ஒவ்வொரு நிமிஷத்தையும் உங்களுக்காகத் தன்ரை படிப்பை வீணடிச்சு, பாழாக்கினதுக்கு, அந்தப் பொன்னான நேரத்தை ஆர் திருப்பிக் குடுக்கப் போறீங்க...?'

தீபா கேட்க ராகினி சொன்னாள்.

- தாட்சாயணி -

''செயலாளரா இருந்தால் செய்யத்தான் வேணும்...''

''அப்ப, யூனியனிலை நீங்க உறுப்பினர் இல்லையா, யூனியன்காரர் எல்லாரும் சேர்ந்து செய்யிறதை ஒருதர் தலையிலை போடுறது பிழையில்லையா?''

''நானும் செயலாளராயிருந்தா செய்வன்...''

தீபா என்னைப் பார்த்து அர்த்தத்தோடு புன்னகைத்தாள். ''இதுதான் பிரச்சினை, மூலவேர் இங்கேயிருக்கிறது. அவள் செயலாளர் ஆகவில்லையென்ற அடிப்படைக் காழ்ப்புணர்வு.''

''ஆமா நீங்க செயலாளரா, இருந்தா நீங்களும் சோடா குடிச்சிருப்பீங்க...''

தீபா ஆணித்தரமாய்ச் சொல்லிவிட்டு ஆவேசமாய்க் கேட்டாள்.

''அவங்க யூனியன் காசிலை தான் சோடா குடிச்சாங்க, இனியும் குடிப்பாங்க, நீங்க என்ன செய்யப் போறீங்க...''

ராகினி ஒரு பூனையின் சிலிர்ப்போடு, கோபமாய் தீபாவைப் பார்த்து முறைத்து விட்டு அப்பால்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை முற்றம்

## புலம் பெயர்ந்தவனின் புதிய பாடல்

எங்கள் வீட்டு முற்றத்தில்
பூத்த பூவின் வாசம் இங்கு இல்லை.
எங்கள் கோயில் திருவிழாவும்
பார்க்க இங்கு வழியில்லை.
எங்கும் பனி . எங்கும் இருள்...
எப்படிப் பேசுவேன் — என்
அம்மாவின் மொழியில்?

பூக்களின் மகரந்தங்கள் பற்றியோ
அதனுள் ஊறும் தேன் பற்றியோ
என்னால் கதைக்க முடியாதுள்ளது!
எங்கும் எதிலும் இயந்திர மயம்!
நெருக்கடிக்குள் அகப்பட்ட வாழ்க்கை!
பயமும் அவதியும், அந்தரமுமாக
சின்னாபின்னப்பட்டுப்போயுள்ளது...

எலிகள், அணில்கள், தவளைகள் போல்
பதுங்கி, பயந்து, தாவி, ஒளிந்து
நசுங்கிப் போகும்
சீர்கெட்ட வாழ்க்கை!
உறவையும் சுற்றத்தையும் — எம்
வீட்டையும் மண்ணையும் மறந்த
வேர் அறுந்த வாழ்க்கை!

வந்த இடத்தில்
எம் சீர் குலைந்து
எம்மையும் எம் ஆன்மாவையும்
மலிவு விலைக்கு
ஏலத்தில் விற்று விட்டு
கண்ணாடி மாளிகைகளில்
விலாசம் காட்டும்
அவலமான மேற்குலக வாழ்க்கை!

திரைகடலோடியும் திரவியம் தேடி
திக்குகள் எட்டும் சிதறினும்
கலைச் செல்வங்கள் அத்தனையும் சேர்த்து
புதுவாழ்வு காணப்
புறப்படுவோம் தோழர்களே...
வறுமையை ஒழிக்க — ஒரு
புதுவேகம் கண்டிடுவோம்!
இனிமையை மீட்க — ஒரு
புதுப்பண் பாடிடுவோம்!

- கந்தையா ஸ்ரீ கணேசன்.

## நிச்சயம் கவனியுங்கள்

பட்டப் படிப்பை முடித்தவர்கள்
பலவா றாய்நற் தொழில் புரியும்
திட்ட மிதனை யேமறந்து
திரிகின் றார்பேய் பிசாசுகள் போல்
கெட்டுப் போன தெம் நாடு
குட்டிச் சுவரா யிவர்களினால்
எட்டுத் திசையும் இந்நிலைதான்
இங்கெம் பண்பா டென்னாச்சு!

ராக்கிங் என்ற போர்வையிலே
ரௌடித் தனங்கள் செய்கின்ற
போக்கின் றெங்கும் பல்கலையில்
புகுந்த தீதனால் இந்நாடு
தீக்குள் விரலை வைத்தாற்போல்
தீங்கில் வெம்பி வேகிறதே!
நோக்கம் என்ன? ரௌடிகளே
நீங்கள் தமிழ்மக் கள்தானா?!

பத்திரி கைக்கோ வருஞ்செய்தி
பலதுள் ஒன்றே! எத்தனையோ
சித்திர வதைகள் செய்கின்றார்
சினந்தால் கொடூரம் மிகக் கூடும்
செத்தும் போனார் சிலரிதனால்
சிலர்நோ யுற்றார் இச்செயலேன்?
பித்துப் பிடித்த தா இவர்க்கு?
பல்கலை யதற்கேன் வந்தனரோ?

- ஆ. விநாயகமூர்த்தி.

## மரணம்

எங்கும் மரண இருட்டு!
எல்லாத்திலும் மரணத்தின் முத்திரைகள்...
உறக்கத்திலும்
மரணத்தின் கெடுபிடி......!
வாழ்வே மரணத்தின்! சகதியாய்
நிலைமாறிப் போனதால்,
மரணம் மரணித்த பின்பல்ல
முன்பே முடம் பிடித்துக்கொண்டது மனிதரிடம்!
மரணத்தின் மடியில் நடைபோடும் மனிதரே!!!
நீங்கள் மரணித்ததில்லை
மரணமேயற்ற மண்ணின் வித்துக்கள்!

- வானம்பாடி.

## விமோசனம் தேடும் சாபங்கள்

அறிவின் கனத்தில்
லயம் தப்பிய இதயத்தின்
தாண்டவம்;
'கல்விக்' கரை கண்ட
அலையின் கண்மூடித்தனமான
ஆர்ப்பாட்டம்...
மிஞ்சிப் போன
மிருக உணர்ச்சி!
வக்கிர குணத்தின்
வடிகால் பாதை!
நாளைய 'விடிவெள்ளி'களை
நசுக்கிக் கொல்லும்
நரகாசுர வதை! — இந்த
புற்று நோயின்
தொற்று எது?
கறைப் பட்ட இக் காற்றின்
உறைவிடம் யாதோ?
கிளை பரப்பி நிற்கும்
விஷ விருட்சத்திற்கு
முளை யார் இட்டது?
உள்ளங்களின் கனவுகளை
சிதைத்து;
கற்பனைகளை கருவறுத்து
மனசுகளை ரணமாக்கி
விமோசனம் தேடிய
இந்த சாபம்,
அத்தனைக்கும் அடங்காமல்
ஆத்மாக்களைப் பலியெடுக்கும்
அசுர வேகத்துடன்
வதைகளை வளர்த்தபடி...!
ஓங்கி யொலிக்கும்
ஆத்ம ஓலங்களிலாவது
இந்த சாபங்களுக்கு
சமாதி உருவாகட்டும்!

- நிலா.

## பிரகாசம் இழந்தோம்!

ஐயகோ! — இது கொடுமை!
இடியெனச் செவிதனில்
இடித்தது செய்தி!

தழைத்தெழுந்த — இளந்
தளிரொன்று
தன் வாழ்விழந்தது!

வளர்த்துவிட்ட
தாய்மையங்கு — பெரும்
அனல் சுமந்தது!

ஐயகோ!
காயாகிக் கனியாகுமென்றே
காத்திருந்த — இளம்
பிஞ்சொன்றைப்
பிய்த்தெறிந்தன
பித்துப்பிடித்த
மந்திக்கூட்டம்!

அநியாயம்!
வரப்பிரகாஷ்
வாழும்
வரமிழந்து போனான்!

தமிழினம்
தலைகுனிந்தது!
மிருகங்களையும்
மேய்த்ததற்காய்
கல்லூரிகள்
கண்ணீர் வடித்தன!

கொலை நுட்பத்தையும்
கற்றுத்தெளிந்த
'பேய்'க் கூட்டமே!

'ஷெல்களும்'
குண்டுவீச்சு விமானங்களும்'
உங்களிடமா
தம் வேலையை ஒப்படைத்தன?
இன்று!
'பிரகாசம்' இழந்த
வரப்பிரகாஷ்..!

பல்கலைக்கழகமே —!
இப்பட்டியலை
இன்னுமா நீட்டப்போகிறாய்?

அறுபத்தைந்தாம்
கலையாய் — ''கொலைக்
கலையை'' எப்போது சேர்த்தாய்?

உன்
''பாடத்திட்டங்கள்''
இயமன்களைக்கூட
உருவாக்குமோ?

சொல்...!
இன்னுமேன் மௌனம்!

தயவுசெய்து
மந்திகளைக்
காட்டுக்குத் துரத்திவிட்டு
மாணவர்க்கு மட்டும்
[illegible]
[illegible]

- துணைவியூர் கேசவன்.

## அறிவா? அறிவீனமா?

பூக்கடை
வாசனைக்கு
புதிய அத்தர்
தேவையா?
சாக்கடை
நீரினில்
சந்தனம் குழைப்பதா?
அறிவியல் தேடலின்
அறியாமை யென்ற
அற்புதக்
கண்டுபிடிப்பா?
நவீனத்துவத்தை
நோக்கியே
நடை போடும்
நலமிக்க செயற்பாடா?
நாகரிக மோகத்தின்
அநாகரிக
வெளிப்பாடா?
சுகப் பிரவசத்திற்காய்
பணித்த,
துடி நடையா?
கறந்த பாலில்
வெண்ணெய் எடுக்கும்
கணனி முறையா?
நாடக
ஒத்திகை பார்க்க
நரபலியா?
குளிர் போக்கவேண்டி
கொதி நீரில்
குளியலா?
கொடியில் கனிபறிக்க
கொடூர
கத்தரிப்பா?
நாளும் நெருங்குண்டு
உருகியே அருகி வரும்
இனத்திற்கு.
உரம் கொடுக்கும்
நற்பணியா?
மனிதத்தை
குழி தோண்டிப் புதைத்து
மலர்த் தோட்டமா?
மானிடமே ...???

- அபிர்ராஜன்.

## பல்[...] கள[...]

கலாசார[...]
குறைப்பிந்[...]
சாக்கடை[...]
தவறிப்போ[...]
பாவம் மே[...]
பரிசுத்தம்[...]

அன்னைய[...]
ஆத்திசூடி[...]
நச்சுக்கசி[...]
நிச்சயம் [...]

மனிதத்தை[...]
மனிதனை[...]
மருத்துவ[...]
மகத்துவம்[...]

அன்பிற்கு[...]
அறிவியல[...]
பொறியிய[...]
அசிங்கங்க[...]

வாழ்க்கை[...]
வரியெழுத்[...]
வெற்றுக்[...]

வைக்கோ[...]
வயிற்றுள்[...]
கன்றைக்க[...]
எத்தனை[...]
பால் கற[...]

நிச்சயம் [...]
பல்கலைக்[...]
தவறாக [...]
கொல்கலை[...]

## கூடுபத்தி[...] குலவிளக்[...]

நாளைய கனவைத்தாங்கி நடந்தவா; பரி[...]
காளையே; தமிழா...! உன்னைக் கண்ணீர[...]
வேளையென் றுரைக்கமாட்டேன்; விதியெ[...]
கோழைகள் மலிந்தகூட்டக் 'கும்பலில் கே[...]
சூழ்ந்ததோர் சுற்றமுன்னைச் சுருண்டிட [...]

உதைத்திடல் மிதித்தல்வாயை ஊமையாய்[...]
'பதப்படுத் தல்' லென்றுங்கோர் பண்பாடு[...]
வதைத்திட்ட பின்னேயும்மை வரவேற்கக் [...]
புதைத்திட்ட பிணத்தின் மீது பூத்தூவல் [...]

என்ன நீ தப்பாய்ச்செய்தாய்? எவரிவர் [...]
மன்னவர் கடவுள்மாரின் மறுபிறப் புக்க[...]
அன்றிடில் இவர்க்கு உன்தாய் அடிமையா[...]
என்றடா கல்வித்தாயிவ் வியமர்க்குப் பர[...]

படித்திட்ட குற்றத்திற்குப் பணிஷ்மென்ரா[...]
துடித்திட வருத்திப் பின்னேன் தோழமை[...]
அடுத்தவன் துடிக்கப்பார்த்து இரசிக்கின்ற[...]
கொடுத்ததாம் அன்புத்தொல்லை; குழந்[...]

மதியாத சுற்றந்தன்னை மிதியாதே என்[...]
மிதிக்கின்ற சுற்றம்தம்மை மதியென்றால் [...]
எதுக்கென்று திருப்பிக்கேட்க ஏலாது என[...]
கதைக்கின்ற மனிதர்தாமா? கசாப்புக்கள[...]

குப்பிலாம் பொளியில்கற்று குலவிளக் கா[...]
உப்பிலாப் பண்டம்போலே உன்சுவை கெ[...]
இப்படியுன்னைச் சாய்த்தோர் இந்தஜன் [...]
தப்பவர் மீதும் அல்ல தமிழரின் பண்பிற்[...]

குனிந்து நீ நிலத்தைப் பார்த்தால் குட்டி[...]
இனமடா தமிழன்; நல்ல இளகிய இரு[...]
சினமெலாம் அதிலேகாட்டும் சிறந்ததோ[...]
இனியென்ன ?... தமிழே உனக்கிழப்புக்க[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைக்

ா?

ங்களே!
ழக்களே,
விழுந்து
தும் தீர்த்தத்தின்
டுத்துவிட்டீர்கள்!

கருப்பையிலேயே
ந்த கல்வியில்
ற்பட்டுவிட்டது!
ரியுங்கள்!

கொன்று விட்டு
காப்பாற்றும்
கென்ன

அகப்படாத

கிரீடம்!

ச் செப்பனிடாத
கள்
பைகளே!

ளை
டைத்து—செத்துப்போன
ங்கள்
ரம்?

ரியுங்கள்...
கம்
சரிக்கப்படுமுன்.
கழகமென்று.

ம் .எஸ். சந்திரபோஸ்

பரியும்

கே!

வானின்
அர்ச்சிக்கின்றேன்,
பழியும்போடேன்
ந்தாக்கள்'
த்ததென்பேன்.

க்கல்தானோ
கிப்போச்சு
ட்டம்வைத்தல்
லத்தானே?

டம்செய்ய?
ானோ?
விற்றிட்டாளோ?
தயானாள்?

ம்னிதரும்மைத்
ங்கள்?
ட்லர்க்கும்பல்
க்கு வாழ்க்கை இல்லை.

வ்வை
கவிக்கூத்தே
ல் நீங்கள்
ல் ஆடா?

வேளை
ாய் தோழா!
கள் தானாம்
ன!

கையை நீட்டும்
ண்டால்
கொல்லர் நாங்கள்
சகஜந்தானே!

ச. முகுந்தன்.

# காய்ச்சல் சொல்லும் கதை

எங்களுக்கு விடுமுறை எடுப்பதில் மிகவும் உதவியாயிருப்பது காய்ச்சல். சாதாரணமாய் மக்கள் கூறுவது போல் ''சும்மா'' காய்ச்சலில் இருந்து நடுங்க வைக்கின்ற மலேரியா, வாட்டுகின்ற நெருப்புக் காய்ச்சல், டெங்குக் காய்ச்சல் என்று ஏகப்பட்ட காய்ச்சல்கள் மனிதர்களிடையே காலத்துக்கு காலம் உலவுகின்றன.

காய்ச்சல் என்பது ஒரு நோயின் அறிகுறி. அது நோயல்ல. உடலின் வெப்பநிலை அதிகரித்தல், ''சும்மா'' நிகழுவதில்லை. ஏதாவது ஒரு நோயின் வெளிப்பாடாகவே அது இருக்கிறது: மலேரியா, நெருப்புக்காய்ச்சல் என்பன பிரதான அறிகுறியாகக் காய்ச்சலை கொண்டிருக்கின்றன; அதுபோல அனேக நோய்களில் காய்ச்சல் ஓர் அறிகுறி.

மனிதன் ஒரு மாறாவெப்பநிலையுள்ள விலங்கு. அப்படியென்றால் உடல் ஒரு குளிர்சாதனப்பெட்டி போல குறிப்பிட்ட வெப்பநிலை 98.4 பாகை பரனைட் என்ற அளவில் மாறாது வைத்திருக்கின்றது: குளிர்சாதனப்பெட்டியில் உணவுகள் பழுதடையாமல் இருப்பதுபோல மெல்லிய சூட்டில் உடல் உறுப்புக்கள் தங்கள் தொழில்களைச் சிறப்பாகச் செய்கின்றன.

ஆனாலும் ஒரு சந்தேகம். வெயிலில் வைத்த இரும்பு சுடுவதுபோல குளிரில் அது சில்லிடுவது போல மனிதனும் ஏன் சூடேறிப் போகவில்லை? அல்லது விறைத்துப் போகவில்லை! உடல் எப்படி சமாளிக்கிறது?

குளிர்காலங்களில் உடலிலிருந்து வெப்பம் இழக்கப்படும். உடல் குளிர்வடையும். மூளையில் ஒரு கட்டளை மையம் உடல் வெப்பநிலையைச் சீராக்கி இருக்கிறது. அதற்கு உடல் குளிர்ந்து கொண்டிருக்கிறது என்ற தகவல் உடன் போய்ச் சேரும். உடனே ''வெப்பத்தை உருவாக்க'' ''உடலைச் சூடேற்று'' ''வெப்பம் இழக்கப்படுவதை தடு'' என்ற கட்டளைகள் பறக்கும்.

அதுதான் நாங்கள் நடுங்குகிறோம். மயிர்கள் விறைத்து நிற்கின்றன. தோலுக்கு இரத்த ஓட்டம் குறைவடையும். உடலின் சக்தி உற்பத்திச் செயற்பாடுகள் கூடும். எங்களுக்குப் பசியும் கூடும், உடலுக்கு உதவியாக நாங்களும் தடித்த கம்பளி ஆடைகளை அணிந்து சுருண்டு போர்த்திக் கொண்டு அடுப்புக்கருகில் குந்தி உடல் குளிரடைவதைத் தடுக்கிறோம்.

மறுதலையாக உடல் சூடாகிறது என்ற தகவலுக்கு ''வெப்ப இழப்பைக் கூட்டு'' ''உடலைக் குளிரடையச் செய்'' என்ற கட்டளை பிறக்கும். தோலுக்கு இரத்தம் கூடுதலாகச் செல்லும். வியர்வை ஆறாய் ஓடி

## வைத்திய சஞ்சீவி

உடலின் வெப்பத்தைஉறிஞ்சி ஆவியாகும். நாங்களும் ஆடைகளைக் குறைத்து விசிறி குளித்த உடலுக்கு உதவி செய்ய உடல் சூடு குறைகிறது.

ஆனால் காய்ச்சலில் உடலின் வெப்பநிலை மேற்குறிப்பிட்ட பொறிமுறைகளுக்கு மேலாக உயர்ந்து விடுகிறது. எப்படி? எல்லாம் தலைமையகத்தில் ஏற்படுகின்ற கோளாறுதான்.

## நோயற்ற வாழ்வு - 3

தொற்று நோய்க்கிருமிகள் உடலினுள்ளே புகுந்து பெருகும் போது சில நச்சுப் பதார்த்தங்களை இரத்தத்தில் விடுகின்றன. இவை தவிர உடலின் தற்காப்பு நடவடிக்கைக்காக வெளியாட்களுடன் (கிருமிகள்) போரிடுவதற்கு வசதியாக உடல் வெப்பநிலையை அதிகரிக்க உடலே சில பொருள்களை இரத்தத்தில் விடுகின்றது. இவை உடல் வெப்பநிலை சீராக்கும் மையத்தை அடைந்ததும் அது 98.4 பாகை தான் சாதாரண உடல் வெப்பநிலை என்பதை மறந்து கூடுதலான ஒரு வெப்பநிலை 100 பாகை பரனைட் தான் சாதாரண வெப்பநிலையென்று நினைக்கத் தொடங்கும்.

அப்படி நினைக்கத் தொடங்கியதுமே உடல் குளிர்ந்து போயிருப்பதாகக் கருதி வெப்பத்தை உற்பத்தி செய்வதற்கான கட்டளைகளை அனுப்பும்.

பிறகு உடல் நடுக்கம், குளிர், மயிர் சிலிர்த்தல் எல்லாம் நிகழும். இது தான் மலேரியாக் காய்ச்சலில்நிகழுவது. பிறகு வெப்பநிலை உயர நடுக்கம் நின்றுவிடும்.

பிறகு நச்சுப் பதார்த்தங்களின் தாக்கம் குறைவடைய, அல்லது காய்ச்சலைக் குறைக்க எடுக்கும் மருந்துகள் இரத்தத்தில் சேர வெப்பநிலைச்சீராக்கி பழையவெப்பநிலை 98.4 என்ற ஞாபகத்துக்குத்திரும்பும். ''உடல் சூடாகிவிட்டது குறையுங்கள்'', என்று அறிவிக்கும், உடல் வியர்த்து தெப்பமாய் நனைந்தஉடுப்புகளை அகற்றுவோம் காய்ச்சல் விட்டுவிட்டது என்று.

சிறிய வெப்பநிலை மாற்றங்களில் இது பெரிதாகத் தோற்றுவதில்லை. காய்ச்சலின் அகோரம் நோய்க்கு நோய் வேறுபடுகிறது. மிக இலேசான காய்ச்சல் முதல் நடுங்க வைக்கும். குளிர்காய்ச்சல், முறை வைத்து ஒழுங்காக வருகின்ற காய்ச்சல் என வெவ்வேறு நோய்களுக்கேற்ப காய்ச்சலின் தன்மை வித்தியாசப்படுகிறது. காய்ச்சலின் அளவை உடல் வெப்பமானி கொண்டு அளந்து கொள்ளுவார்கள்.

காய்ச்சல் அதிகரித்துக் கொண்டு செல்லச் செல்ல உடலின் செயற்பாடுகள் பாதிப்படையத் தொடங்கும். 105 பாகை பரனைட்டுக்கு மேல் அதியுயர் காய்ச்சல் வெப்பநிலையுயர்வது அபாய எச்சரிக்கைதான். அதியுயர் வெப்பநிலைகளில் மூளையின் செயற்பாடுகள் பாதிப்புறும். சிறுகுழந்தைகளில் வலிப்பு ஏற்படுவது இப்படித்தான்.

உடலின் அதியுயர் வெப்பநிலைகளில் 110 பாகை பரனைட்டில் மூளை, இதயம் சிறுநீரகம் போன்ற அங்கங்கள் பாதிப்படைந்து மரணம் நிகழும். சகாரா. பாலைவனத்தில் கொதிக்கும் வெயிலில் நம்மவர் ஒருவர் சிக்கினாலும் உடல் வெப்பநிலை உடலின் சீராக்கும் பொறிமுறைகளை மீறிக்கூடி ''வெப்பத்தாக்கம்'' ஏற்பட்டு மரணம் நிகழும்.

மேற்கூறிய காரணங்களுக்காக காய்ச்சல் தணிக்கப்பட வேண்டியதாகிறது. வெப்பநிலையை குறைக்க பனடோல் போன்ற மருந்துகளுடன் ஐஸ்கட்டி குளிர் ஒத்தடம் கூட கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. குழந்தைகளில் காய்ச்சல் ஏற்படுகின்றபோது கூடிய கவனம் தேவையாகிறது.

**-அ. கிருஷ்ணேந்திரன்**
4 ஆம் வருடம்,
யாழ் மருத்துவ பீடம்.

ஆயினும் காய்ச்சல் சில நோய்களில் நோயாளிக்கு உதவி புரிகிறது. நோய்க் கிருமிகளை செயலிழக்கச் செய்வதில் உடலின் உயர் வெப்பம் உதவுகிறது. சில வைரசுத் தொற்றுநோய்கள், தொழுநோய், சிபிலிஸ் போன்ற நோய்களில் காய்ச்சல் அவ்வாறு உதவுகிறது.

சாதாரண காய்ச்சல், சுவாசத்தொற்றுக்கள், (தடிமன் போன்றவற்றிலும்) மற்றும் வேறு வைரசு தொற்றுக்கள் போன்றவற்றில் ஏற்பட்டு மிக விரைவில் குணமடைந்து விடும்.

ஏழு நாள்களுக்கு மேல் நீடித்து நிற்கின்ற காய்ச்சல்கள் கவனயீனமாக விடக் கூடியவை அல்ல. அது ஒரு தீவிர நோயின் அறிகுறியாகலாம்.

★

# ஏற்புத்தடை ஊசி மருந்தை அடிக்கடி ஏற்றக் கூடாது!

ஏற்புத்தடை ஊசிமருந்துக்குப் பற்றாக்குறை ஏற்படுவதாக அடிக்கடி செய்திகள் வெளியாகின்றன.

ஏற்புத் தடை ஊசிமருந்து தேவையானவர்களுக்கு மட்டும் அதைச் சரியான முறையில் கொடுத்தால்தட்டுப்பாடு ஏற்பட இடமில்லை.

விரிவாக்கப்பட்ட தடுப்பூசி மருந்து கொடுக்கும் திட்டத்தின் கீழ் அனேகமாக எல்லாக் குழந்தைகளுக்குமே நான்கு கட்டங்களில்ஏற்புத்தடையை உள்ளடக்கிய முக்கூட்டு வக்சீன் (டி. பி. ரி) வழங்கப்படுகிறது.

3 ஆம் மாதம் 5ஆம்மாதம்' 7 ஆம் மாதம் பின்னர் ஒன்றரை வயது ஆகிய பருவங்களில் குழந்தைகளுக்கு இது வழங்கப்படுகிறது.

பின்னர் பாடசாலைக் காலத்திலும் முதலாம் வகுப்பிலும் 5 ஆம் வகுப்பிலும் ஏற்புத்தடைக்கான ஊசி மருந்து (டீ. ரீ., ரீரீ) கொடுக்கப்படுகிறது.

மேற்கூறப்பட்ட காலங்களில் ஒரு பிள்ளைக்குக் கொடுக்கப்படும் ஏற்புத் தடை ஊசி மருந்து அப்பிள்ளையின் 15 ஆவது வயது வரை பலன்கொடுக்கக் கூடியது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் சிறுவர்களுக்கு மேலதிகமாக ஏற்புத்தடை ஊசிமருந்து கொடுக்கத் தேவையில்லை.

இத்தடை மருந்து ஒருவருக்கு மூன்று முறை கொடுக்கப்பட்டால் அடுத்து வரும் ஐந்து ஆண்டு காலத்துக்கு அதன் மூலம் பாதுகாப்புக் கிடைக்கும்.

**கர்ப்பிணிகள்**

கர்ப்பிணிகளுக்கு அவர்களது முதலாம்,இரண்டாம், மூன்றாம், நான்காம் கர்ப்ப காலங்களில் வழங்கப்படும் ஏற்புத்தடை ஊசி மருந்து அவர்களது வாழ்நாள் முழுவதும் பயனளிக்கும்.

எனவே மேற்கூறிய [illegible]ந்துக்களை மனதில் கொண்டு தேவையானவர்களுக்கு மட்டும் இம் மருந்தைக் கொடுப்பதன் மூலம் மருந்து விரயமாவதையும், தட்டுப்பாட்டையும் இல்லாமல் செய்யலாம், மருந்துகளை அதிகமாகக் கொடுப்பதால் பக்க விளைவுகள் ஏற்படும் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

ஏற்புத் தடை ஊசி மருந்தை ஒருவருக்குக் கொடுப்பதற்கு முன் பின்வருவனவற்றை நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

★ 15 வயதுக்குட்பட்ட பிள்ளையாயின் முன்னர் அட்டவணைப்படி அவருக்கு ஏற்புத்தடை மருந்து கொடுக்கப்பட்டிருக்கின்றதா?

★ முன்னர் ஏற்புத் தடை மருந்து கொடுக்கப்பட்ட கால விவரங்கள்.

★ இம் முறை அவருக்கு ஏற்பு மருந்து கொடுக்க வேண்டுமா?

★


குடாநாட்டில் ஏற்புத்தடை ஊசி மருந்துக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படுகின்றது. அநாவசியப் பயன்பாடே அதற்குக் காரணம் என வட பிராந்திய சுகாதார பதில் மாகாணப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி க. தா. சிவபாதம் கூறுகிறார்.

ஏற்புத் தடை ஊசி மருந்தின் பாவனை தொடர்பாக அவர் வழங்கியுள்ள அறிவுறுத்தல்கள் இங்கே பிரசுரமாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 23



சொற்சிலம்பம் இல. 23
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :
விலாசம் :

இங்கே வெட்டுக

முடிவு திகதி: 14 - 11 - 1997

### இடமிருந்து வலம்

1. மிதியடி. 4. தலைவன். 7. யுக்தி. 9. ஆசிரியன். 10 மனிதரைப் பிரிப்பது. 11. சங்கம் என்று பொருள்படும். பாபாவின் பக்தர்கள் தங்கள் கூட்டத்துக்கு இப்பெயரை அதிகம் பயன் படுத்துவர். 13. இணக்கத்துக்குரிய சொல். 14. எஞ்சி வருவது 16. பாரம். 17. மாத்திரை. 18. சுடு நீரில் வேக வை. 19. எருமை. 20. இணங்க. 22. சகோதரிகளின் கணவன் மாரிடையேயான உறவு முறை. 23. வித்தை. 24. மூன்று. 25. மோகம்.

### மேலிருந்து கீழ்

1. நடந்து செல்பவன். 2. வயிறு. 3. சிறையிலிருப்பவன். 4. அடுக்களையில் உள்ள கருவி; திருமணச் சடாங்கிலும் இதற்கு இடம் உண்டு. 5. பிரி. 6. நிறைவால் ஏற்படுவது. 8. குடிக்கலாம்; சோற்றுக்கும் சேர்க்கலாம். 12. எருதின் ஏரி. 13. மெதுவாக நகரும். நீண்டகாலம் வாழும். 15. குழம்புதல் 16. தனதாக்கு. 17. மதியால் வெல்ல முடியுமா? 18. அயர்ச்சி. 19. உயர்வான தன்மை. 21 பாடல். 23. படி என்றும் பொருள்படும்; படிகட்டவும் உதவும்.

### சொற்சிலம்பம் இல. 21 - விடைகள்

**இடமிருந்து வலம்**

1. நீதிபதி. 5 வெண்பா. 7. சரித்திரம். 9. தமையன். 11. விரசம். 13. பிரம்மா. 14. அனல். 15. தில் 16. திருமால். 19. சிவா. 21. டயானா. 23. சைவன்.

**மேலிருந்து கீழ்**

1. நீசன். 2. திரி. 3. பத்திரம். 4. திதி. 5. வெம்மை. 6. பாகன். 8. ரதம். 10. பின்னல் 11. விரல். 12. சமாதி. 13. பிதிர். 14 அமாவாசை. 17. ருசி. 18. போயா 20. தேன்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு :- க. சிவானந்தன்,
''லக்சுமி பவான்'' இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

★ இரண்டாம் பரிசு :- ஸ்ரீ. சிவதர்ஷினி,
''சிவகங்கை''
மூளாய், சுளிபுரம்.

★ மூன்றாம் பரிசு :- வ. வாகீசன்,
மக்கள் வங்கி—காங்கேசன்துறை கிளை,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம். 22 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

எல்லோரும் போலவே — புலன்கள் வழி ஊறிப் பிறந்துவரும் ஆசைகளில் மயங்கி — அவற்றிலே திளைத்து -நன்மை-தீமை ஆராயாது வாழும் சாதாரண வாழ்வில் எந்தப் பெருமையும் இருக்கப்போவதில்லை.

இவ் உலகில் பிறந்த மனிதர்களில் மிகச் சிலரே தம்மை உலகினுக்கு அடையாளம் காட்டி விடுகின்றனர். அவன்தான் 'மனிதன்' என்ற பெயரை மிகச் சிலரால்தான் தட்டிக்கொள்ள இயலுகிறது.

எல்லாராலும் எல்லாக் காரியங்களையும் சாதிக்க முடிதல் இல்லை. எதையும் சாதிக்கத்தக்க மன உறுதியோ — உடல் வலிமையோ — அறிவோ — திறமையோ அனைவருக்கும் சரிவர அமைவது இல்லை.

இந்தக்காரியம் நம்மால் முடியாது என்று ஆரம்பத்திலேயே மனம் தளர்ந்து ஒதுங்கிவிடுபவர்கள் பலர். வாழும் உலகம் இது; இவனா இதைச் செய்தான் என்று அனைவரையும் வியக்கவைப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எனவே சற்றுச் சிந்தியுங்கள். உங்களைப் பற்றி நீங்களே ஆராயுங்கள்; உணர்ந்து கொள்ளுங்கள்; மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர முயற்சியுங்கள். நிச்சயம் ஏதோ ஒரு துறையில் நீங்கள் பிரகாசிக்கலாம்.

இப்படிச் சாதாரண மனிதர்களால் சாதிக்க முடியாத ஒன்றை—செயற்கரிய செயலை—நீங்கள் செய்யும் போது உலகம் உங்களை வியந்து நோக்கும்.

இதை விடுத்து அனைவரும் போலே உண்டோம்— உறங்கினோம் — வாழ்ந்தோம்—மடிந்தோம் என்றால் அந்த வாழ்வினில் எந்தப் பெருமையும் இருக்காது. உலகம் உங்களை ஒரு பெரியவனாக அடையாளம் கண்டுகொள்ள மாட்டாது.


**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார் — 0026**

(நீத்தார் பெருமை)

-அம்பிகைபாகன்-

# இந்த வார இராசி பலன்

## (08 - 11 - 1997 முதல் 14 - 11 - 1997 வரை)




மாற்றம்:

08 - 11 - 1997 இல் மகர இராசியில் 'அவிட்ட நட்சத்திரம் மாறும்.

அரசியலில் புதிய மாற்றம்; அதனால் மக்கள் மனமாற்றம் —மக்கள், மாணவர்கள் மனமாற்றம். விலைவாசிகள் ஏற்றம். இந்திய அரசியலில் புதிய திட்டங்கள், புதிய தலைமை என்பன ஏற்பட ஆரம்பகட்டம். கிழக்கு நாடுகளில் புதிய பிரச்சினைகள் உருவாகும்; இயற்கை அழிவுகள் தொடரும். மேற்கு உலகில் திட்டமிட்ட செயற்பாடுகளால் ஐ. நா. புதிய திட்டங்கள் வகுக்கும். மதப்போர் திட்டமிட்டபடி நடக்கும்.

**மேடம்:** உங்கள் திட்டங்கள், விளக்கங்களுக்கு மனைவி அல்லது மனைவி வழியிலிருந்து எதிர்ப்புக்கள் வரும். நீங்கள் அவற்றைக் கேட்க மாட்டீர்கள். உதவி பெற்றவர்கள், உறவு முறையினர் உதவி கேட்டு வருகிறார்களே என்ன செய்வது? தட்டலாமா? விடலாமா? எனக் கலங்கியபடி இருப்பீர்கள். இவ்வுலகில் உதவி கேட்டு வருபவர்கள் அதிகம். உதவி உங்களுக்குத் தேவைப்படும் பொழுது ஓடி ஒளிப்பார்கள். அதற்காக உதவி செய்யாமல் விடலாமா? என நீங்கள் வாதாடுவீர்கள். உங்கள் நல்ல மனோநிலையை இந்த உலகத்து மனிதம் கண்டும் காணாமல் இருக்கும். தொழில் ஸ்தானத்தில் ஊக்கத்தைப் பொறுத்து உயர்வுகள்—பணவரவுகள் இருக்கும். உடம்பில் சிறுசிறு காயங்கள் வருமாம். புதிய நட்பு உற்சாகத்தைத் தரும். ஏழரைச் சனி இருப்பதனால் அடிக்கடி சோம்பல் படாமல் எதிலும் கொஞ்சம் ஊக்கத்துடன் இருக்கவும்.

★ அதிர்ஷ்டத் திகதி: 9, 10, 12, 14.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி.

**இடபம்:** உங்களுக்கு ஏட்டிக்குப் போட்டி வீட்டிலேயே இருக்கும். நீங்கள் ஓர் உழைப்பாளி. ஆனால் அனுபவிக்க முடியாதபடி கால நேரம் இருக்கும். என்ன இருந்தாலும் சமாளித்து விடுங்கள். அதிகம் உழைத்து என்னத்தைத்தான் செய்வது? ஏதோ ஒரே வேகத்தில் வண்டியை ஓட்டிக் கொண்டு இருந்தால் காணாதா? அதிகம் உழைத்து உழைத்து உடம்பு களைத்தது தான் மிச்சம். மறைமுக எதிரிகளால் உங்களை தொழில் ஸ்தானத்தில் ஒன்றும் செய்து விட முடியாது. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். எதிர்ப்பாலாருடன் மனம் விட்டுக் கதைப்பதால் வீண் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட இடம் உண்டு. ஏதோ உங்கள் கருத்துக்களுக்கு இக்காலத்தில் நாலு பேர் தலையாட்டியபடி இருப்பார்கள். உங்கள் சொல்வாக்கால் செல்வாக்குப் பெருகி வரும்.

★ அதிர்ஷ்டத் திகதி: 10, 11, 14.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

ஏற்படக்கூடாது. அதற்காக இக்காலத்தில் அவதானமாக நடந்து கொள்ளல் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான பலன்களைச் சந்திப்பீர்கள். மற்றவர்களுக்குத் தெரியாத, விளங்காத ஞானம் உங்களுக்கு ஏற்படும். எதற்கும் நேர்வழியில் செல்லுங்கள். சுற்றம் பழிக்கும்; உற்ற நண்பர்கள் சந்தேகப் பார்வையைச் செலுத்துவர். நீங்கள் நிதானமாக நடந்து கொள்ளுங்கள். வழக்கு வந்தால் வரட்டுமே? உங்களை வெல்ல முடியாது. வீட்டுச் செலவுகள் கொஞ்சம் அதிகம்தான். நிதானப்படுத்துங்கள். அது சரியாகிவிடும்.

★ அதிர்ஷ்டத் திகதி: 10, 12 13, 14.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன், வெள்ளி.

**சிங்கம்:** உலகம் வேகமாக மாறும்பொழுது நீங்கள் பழைய பல்லவிகளைப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம். காலத்திற்கு ஏற்ப சற்று உங்களை மாற்றி நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் பெயரை நாலுபேர் சொல்லச்

# சோதிட சஞ்சீவி

**மிதுனம்:** இந்த உலகத்தில் அளவுக்கு மீறி எது நடக்கப் போகின்றது? எங்கும் பொறாமை. போட்டி மிகுந்து காணப்படுகின்றது. நீங்கள் கொஞ்சம் சமாளித்துக்கொள்ளவும். வீட்டில் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். மறைமுகத்தில் உங்களுக்குக் கெடுதிகள் செய்யும் உங்கள் உறவினர் ஒருவருடன் கவனமாக இருக்கவும். இக்காலத்தில் உங்களுடன் ஒட்டி உறவாடி உங்கள் விசயங்களை யார் அறிகிறார்கள் என்பதை அவதானித்தால் அவரை அறிவீர்கள். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்களும் பெரியவர்களின் உதவிகளும் கிடைக்கும். குடும்பத்தின் செலவுக்காக அதிகம் கடன்பட்டு வருந்தாதீர்கள். இடமாற்றங்களைக் கண்டபடி செய்யாது நிதானமாக இருக்கவும்,

★ அதிர்ஷ்டத்திகதி: 10, 12,

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**கடகம்:** நல்லவனைக் கெட்டவனாக்கவும், கெட்டவனை நல்லவனாக்கவும் சட்டம் துணைநிற்குமாயின் அச்சட்டத்தை எதிர்ப்பதில் நியாயமுண்டு. வாக்குச் சாதுரியத்தால் உருட்டிப்பிரட்டி வாழும் சிலர் விதிவசப்பட்டு வேதனைப்படும் பொழுது என்னைத் தேடி ஓடி வருவது போன்ற நிலை உங்களுக்கு சந்தர்ப்பங்கள் ஏற்படும். விதிவசப்பட்ட பலன்களால் கஷ்டங்கள் அவதிகள் கொடுக்கும். அட்டமத்துச்சனி தாக்கத்தால் கெட்டபெயர், பழிச்சொற்கள் தாங்க வேண்டி வரும். தொழில் ஸ்தானத்தில் நீங்கள் செய்யாத வேலைகளுக்கு பொறுப்பு நிற்க வேண்டி வரலாம். கறுப்பு

**மகாதேவா ஜோதிடம்**
நல்லூர்

நிறப்பொருள்களால் இழப்புக்களும் கவலைகளும் ஏற்படும். பலர் பலதைச் சொன்னாலும் நீங்கள் நிதானமாகச் செயற்படுங்கள்,

★ அதிர்ஷ்ட திகதி: 12, 13

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன்.

**கன்னி:** வாழ்ந்தாலும் பேசுவார்கள். விதிவசத்தால் கஷ்டபலனை. அடைந்தாலும் பேசுவார்கள். அதே செயற்பாடுகளில் அவர்களும் மாறும் பொழுதுதான் சற்றுச் சிந்திப்பார்கள். நீங்கள் உங்கள் பாதையிலே ஏறுநடை போட்டபடி இருங்கள். நல்லதைச் செய்வதற்கு எவருடைய அபிப்பிராயங்களையும் கேட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. கண்ணில் நோவரும். பொருளில் அவதானமாக இருக்கவும். பிறரால் ஏமாற்றப்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசனத்தை ஒடித்து எழுதிவிட்டால் அது "புதுக் கவிதை" ஆகிவிடுமா?

## கவிஞர் அப்துல் ரகுமான்

புதுக் கவிதை பற்றியும் அதன் தற்காலப் போக்குக் குறித்தும் மரபுக் கவிதை பற்றியும் கடந்த சில வாரங்களாக சஞ்சீவியில் வெளிவந்து கொண்டிருக்கும் கருத்துப் பரிமாறல்களின் வரிசையில் தமிழகக் கவிஞர் அப்துல் ரகுமானின் சிந்தனைத் தொகுப்பின்முதற் பகுதி கடந்தவாரம் பிரசுரமாகியிருந்தது. அதன் இறுதிப் பகுதி இவ்வாரம் வெளியாகிறது.

(ஆ-ர்)

மரபு யாப்பில் (Convertional metre) எழுதப்படாத புதிய கவிதை வடிவங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. கவி வசனம் (Poetic prose), 2. வசன கவிதை (Prose poem), 3. புதுக்கவிதை (New verse).

### கவிவசனம்

கவிவசனத்தில் வசனத் தன்மை மிகுந்தும் கவிப் பண்பு நிறைந்தும் இருக்கும். மரபு யாப்பின் சில சந்த ஒழுங்கும், எதுகை, மோனை போன்ற தொடைகளும் இடையிடையே வரும்.

குமரியொடு வடவிமயத்
தொருமொழி
வைத் துலகாண்ட
சேரலாதற்குத்
திகழொளி ஞாயிற்றுச்
சோழன்
மகளீன்ற மைந்தன்
கொங்கர்
செங்களம் வேட்டுக்
கங்கைப்
பேர்யாற்றுக் கரைபோகிய
செங்குட்டுவன்
சினஞ் செருக்கி வஞ்சியுள்
வந்திருந்தகாலை......

சிலப்பதிகாரத்தில் காணப்படும் இந்த உரைப்பாட்டு நடையை முற்காலத்தில் எழுதப்பட்ட கவிவசனத்திற்கு உதாரணமாகக் காட்டலாம்.

தலையறுத்த வீரர் கதை
பாடுவதால்
தலையசுற்றிப் பாடு
கின்றேன் நானும்—அவர்
தொடை தட்டித்
துரோகிகளைவீழ்த்தியதால்
தொடை தட்டும்
என்பாட்டும்! என் கவிதை,
யாப்பின்றிப் போனாலும்
போகட்டும்—நம்நாடு
மொழி, மானம்,
உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல்
கூடாதெனும்
கொள்கையொன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும்
செய்யுள் கற்கக்
காய்ப்பின்றி நிற்கின்ற
மரமாக ஆகாமல் நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை
வரிகளாக்கிக் கொள்கை
மாறுகின்ற கோடரிகள்
உணர்வதற்கு ஒன்று
சொல்வேன்.

—கலைஞர் மு. கருணாநிதியின் இந்தக் கவிதை இக்காலத்துக்குகவிவசனத்துக்குச் சான்றாகக் கொள்ளலாம்,

### வசனகவிதை

வசனகவிதை சொற்றொடர் அமைப்பில் வசன வடிவத்தைக் கொண்டிருக்கும். மரபு யாப்பின் சந்த ஒழுங்குகள் இதில் காணமுடியாது. அழுத்தத்தையோ, குரல் ஏற்ற இறக்கத்தையோ காட்டும் வகையில் வாக்கியங்கள் அடிகளாகப் பிரிக்கப்பட்டிருக்காது. ஆனால் சொல்லாலும் பொருளாலும் முறையாலும் கவித்தன்மை பெற்றிருக்கும். அதாவது வசன வடிவில் இருந்தாலும் கட்டுரையாக இராது.

குழந்தைகள் கண்ணீர்
சிந்தும்போது
வானத்து நட்சத்திரங்கள்
கன்னத்தில் உதிர்கின்றன.
அவைகள் சிரிக்கும்போது
தேவதைகள்
பூத்தூவுகிறார்கள்!

காமராசனின் இந்தக் கவிதை வசனகவிதைக்குச் சான்றாகும். புதுக்கவிதை என்ற பெயரில் இன்று எழுதப்படுவனவற்றுள் பெரும்பாலானவை வசனக் கவிதைகளே.

### புதுக்கவிதை

புதுக்கவிதை வசனத்தன்மைக்கு முற்றிலும் மாறுபட்டது.

அது ஒரு புறத்தில் வசனத்தின் உணர்வைக் கிளராத சொற்றொடர் அமைப்பில் இருந்தும் ஒலி நயமற்ற வறண்ட தன்மையிலிருந்தும் விடுபட்டு நிற்கிறது.

மற்றொருபுறம் செய்யுளின் செயற்கைத் தளைகளில் இருந்தும், வெறும் கணிதத்தன்மையான செயற்கைச் சந்த ஒழுங்கிலிருந்தும் (Metronome) விடுபட்டு நிற்கிறது. இதனால்தான் இதைச் சுதந்திரக் கவிதை (Free-Verse) என்றும் அழைக்கிறார்கள். ஆனால் இதன் பொருள் அது எந்தக் கட்டுப்பாட்டிலும் அடங்காது என்பதல்ல.

இயற்கைக்கு மாறான பொருள் வெளிப்பாட்டிற்குத் துணை புரியாது தடை செய்கின்ற செயற்கைத் தளைகளையே புதுக்கவிதை மறுக்கிறது.

புதுக்கவிதை கூறப்படும் கருத்துக்கும் உணர்வுக்கும் ஏற்ற இயல்பான வடிவத்தை விரும்புகிறது. எனவே அது வசனத்தின் வறண்ட தன்மையையும், யாப்பின் செயற்கைச் சந்தத்தையும் உதறிவிட்டு உணர்வு வெளிப்பாட்டிற்கும், குரல் ஏற்ற இறக்கத்துக்கும் துணைபுரியும் இயற்கையான பேச்சு நிலையை மேற்கொள்கிறது. மனிதனுடைய பேச்சில் அமைந்திருக்கும் இயல்பான சப்தமே (Speech rhythm) புதுக்கவிதையின் சந்த ஒழுங்காக அமைகிறது.

இயல்பான பேச்சில் உணர்வு நிலைக்கேற்ப வாக்கியங்கள் நீண்டும், குறுகியும், தர்க்க ஒழுங்கற்றும், முழுமைபெறாதும் அமைவது போன்றே புதுக்கவிதையிலும் அமைகின்றன.

யாரிது ...?
இதுதான் என் பிறப்பா ...?
இது பிரதி.
இரட்டை.
எனது புதிய மறுமை;
பிறப்பல்ல.

இந்தக் கவிதையில் பேச்சு எப்படி எங்கே விட்டொலிக்குமோ அந்த முறையில் அடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கருத்துக்கும் உணர்வு நிலைக்கு ஏற்ப வாக்கியங்கள் முழுமை பெறாதவைகளாக சிறியனவாக அமைந்திருக்கின்றன.

புதுக்கவிதை இந்தவகையில் உணர்வோட்டமுடைய தனிமொழியாக (Soliloquy) உட்பேச்சாக (Inner Speech) அமைகிறது. புதுக்கவிதைப் பேச்சுப்போலவே ஒவ்வொரு அடியிலும் கருத்து, உணர்வு வெளிப்பாட்டிற்கேற்ற சந்தத்தைப் பெறுகிறது. இந்தச் சந்த அமைப்பு உணர்வோடு தொடர்புடைய சந்தம் ஆதலின் இது தொடர்பு நிலைச் சந்தம் (Associationat rhythm) எனப்படுகிறது. இதை இயற்கைச் சந்தம் (Natural rhythm) என்று அழைக்கலாம்.

புதுக்கவிதையின் அடி அமைப்பு குரல் ஏற்ற இறக்கத்தையும், அழுத்தத்தையும் (Stress) காட்டும் வகையில் அமைக்கப்படுகிறது:

நீ நிற்கும்
சிலுவையின்
நிழலில் கூட
ஆணிகள்.

இந்தக்கவிதையின் ஒவ்வொரு அடியின் தொடக்கமும் அழுத்தம் பெறுவதால் அங்கு நிற்கும் சொற்கள் மிகுதியான அதிர்வுகளை உண்டாக்குகின்றன. இந்தக் குரல் ஏற்ற இறக்கம், அழுத்தம் ஆகியவற்றை உணர்த்த எதுகை மோனைகளும் பயன்படும்.

புதுக்கவிதை மரபு யாப்பை முற்றிலும் கைவிட்டு விடவில்லை. மரபு யாப்பில் புதுக்கவிதை எழுதுவோரும் உண்டு. வேண்டிய இடங்களில் யாப்பின் சந்த ஒழுங்கு எதுகை, மோனை ஆகியவற்றைப் பயன்படுத்தி, வேண்டாத இடங்களில் விட்டு விடுவதும் உண்டு. சந்தத்தை மட்டும் எடுத்துக்கொண்டு செந்தொடையாக எழுதுவதும் உண்டு.

ஐயா உம் விரல்கள்
மூன்று கிடந்தன
பெற்றுக் கொள்ளும்
அம்மணி உனதும் கூட

ஞானக் கூத்தனின் இந்தக் கவிதை விளம் மா தேமா என்ற வாய்பாடுடைய அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தின் சந்த ஒழுங்கை மட்டும் கையாண்டுகொண்டு எதுகை மோனைகளைத் தவிர்த்துச் செந்தொடையாக அமைந்திருப்பதைக் காணலாம்

கவிஞர்களின் மனப்போக்கிற்கும் நோக்கத்திற்கும் ஏற்பப் புதுக்கவிதை புதுப் புது வடிவச் சோதனைகளையும் மேற்கொள்கிறது. சொற்களையும் சொற்றொடர்களையும் சிதைத்துக் கையாள்வதும் இத்தகைய சோதனைகளுள் ஒன்று.

போன யுகத்தில்
படித்த தோழி
எவளாவதொருத்—
தீ
வரமாட்டாளா...

என்ற கி. மணியின் கவிதையில் ''ஒருத்தி'' என்ற சொல்லின் கடைசி எழுத்தான 'தி' பிரிந்து தனித்து நிற்பதோடு ''தீ'' என நீண்டும் ஒலிக்கிறது. இந்தக் கவிதையின் பொருளான ஓர் இளைஞனின் பாலுணர்வு வேதனையை உக்கிரமாக உணர்த்துவதற்கு இந்தச் சொற்சிதைவும், மாற்றமும் கையாளப்பட்டுள்ளன. ''தீ'' என்பது நெருப்பு என்ற பொருளையும் தந்துகவிதைப் பொருளுக்கு மேலும் வேகத்தைத் தருகிறது.

இந்த கவிதையில் மற்றோரிடத்தில் உள்ள —

'எதிர் வீட்டுக் குலவிளக்கு
அத்தீ ராத்தீ ராப்புதிர்'

என்ற வரிகளில் ''அத்திராத் திராப்புதிர்'' என்ற வாக்கியம் சிதைக்கப்பட்டு நிற்கும் நிலையில் மற்றொரு பொருளையும் தருவதைக் காணலாம், அவசியமானால் சிலேடையும் கூடப் புதுக்கவிதைக்கு விலக்கல்ல என்பதையும் இதனால் அறிந்து கொள்ளலாம்.

இயல்பான பேச்சுச் சந்தமே பெரும்பாலும் புதுக்கவிதையின் அடி அமைப்புக்குக் காரணம் என்றாலும், சில நோக்கங்களுக்காக இந்த இயல்பான சந்தம் சிதைக்கப்பட்டு அழுத்தம் அமைய வேண்டிய இடத்தில் அமையாமல் வேண்டாத இடத்தில் அமையுமாறு எழுதப்படுவதும் உண்டு. அழுத்த மாற்றச் சந்தத்திரிபு (Syncopation) என்றழைக்கப்படும். இந்த யுத்தியை ஆங்கிலக்கவிஞர் இ.இ. கும்மிங்ஸ் மிகுதியாகக் கையாள்வார்.

என்னை நீ தப்பாகப்
புரிந்து கொண்டு விட்ட
தாக வருந்துகின்றாய்.
என்னதான் நெருங்கிய
நண்பன் என்றாலும்
கைக்கு வெளிப்புறம்தான்.
என்னைத் தப்பாகப்புரிந்து
கொள்ளும்தேவை எனக்
கில்லை.

வேண்டாத இடங்களில் அழுத்தம் அமையுமாறு சொற்களைச் சிதைத்து எழுதப்பட்டுள்ள இந்த அழுத்தமாற்றச் சந்தத் திரிபையாப்பிலக்கணம் வகையுளி என்று கூறும். ஆனால் வகையுளி யாப்பிலக்கணத்தை நிறைவு செய்வதற்காக அமைக்கப்படுகிறதே அன்றி அதற்கு வேறு பொருள் நோக்கம் இல்லை. இந்த அழுத்தமாற்றச் சந்தத் திரிபுக்கு வேறு நோக்கங்கள் உண்டு. அதிர்ச்சியூட்டிப் படிப்பவர்களின் கவனத்தைக் கவர்வது ஒரு நோக்கம். நவீன உலகில் உறவு நிலைகளில் ஏற்படும் சிக்கலைக் கவிதையின் வடிவவாயிலாகக் குறிப்பாக உணர்த்துவதும் ஒரு நோக்கம்.

கவிதையின் பொருளை அதன் அச்சு வடிவத்தின் மூலமாகவும் உணர்த்த முயலும் 'தூலக்கவிதை' (Concrete Poetry) வடிவங்களையும் சிலர் கையாண்டுள்ளனர்.

கி
யூ
வி
லே
ஒரே கூட்டம்

என்ற எழில் முதல்வனின் முயற்சியை இதற்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். பழைய சித்திரக்கவிக்கும் தூலக்கவிதைக்கும் வேறுபாடுண்டு. சித்திரக்கவியின் சித்திரத்துக்கும் கவிதைப் பொருளுக்கும் தொடர்பிருக்காது. தூலககவிதையில் தொடர்பிருக்கும். இன்னும் பல்வேறு வகையான வடிவங்களைப் புதுக்கவிதையில் இனங்காண முடியும். இங்கே சிலவற்றை மட்டும் எடுத்துக் காட்டலாம்.

சுதந்திரம்
இரவில் வாங்கினோம்
விடியவே இல்லை

என்பது போன்ற நுட்பவுரை (Epigram)வடிவமும்,

எங்கள் பசியை
விரட்டுவது
எப்படித் தெரியுமா...?
பட்டினி கிடந்து
நாங்கள் நோயை ஒழிப்பது
எப்படித் தெரியுமா...?
செத்துத் தொலைந்து

என்பது போன்ற சொல் ஒழுங்குக் கட்டுமான (Symmetrical Structure) வடிவமும்,

'விவேக சிந்தாமணியின்
ஆசிரியர் யார்?
''மாணிக்க வாசகர்''
''ஏறுபெஞ்சு மேலே''

என்பது போன்ற நாடக உரையாடல் வடிவமும்,

பூக்களில் நானுமொரு
பூவாய்த்தான்
பிறப்பெடுத்தேன்.
பூவாகப் பிறந்தாலும்
பொன்விரல்கள்
தீண்டலையே நான்
பூமாலையாக விழ

என்பது போன்ற நாட்டுப் பாடல் வடிவமும்

வாடக் காண்பது
என்னவர் மானம்
வருத்தக் காண்பது
ஒரு சாண் வயிறு

என்பது போன்ற எள்ளல் கவி (Parody) வடிவமும் புதுக்கவிதையில் கையாளப் பட்டுள்ளன.

கவிஞர்களின் இலக்கியக் கொள்கைகளுக்கேற்ப, உள்ளடக்கத்திற்கேற்ப புதுக் கவிதையின் வடிவங்கள மாறுபடுகின்றன. புதுப்புது வடிவங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இதனால் புதுக் கவிதையின் வடிவ வகைகள் தேக்கமடையாமல் எல்லைபற்றுப் பெருகிக்கொண்டிருக்கின்றன. புதுக் கவிதைக்கு வடிவம் இல்லை என்று கூறுவோர்க்கு வடிவம் பற்றிய புதிய இலக்கணத்தைப் புதுக்கவிதை பெற்றுத் தருகிறது.

(முற்றும்)

★

### மாப்பிள்ளை

ஓட்டைக் குடிசை!
ஒரு வேளைக் கஞ்சி,
பொத்தற் காற்சட்டை,
கிட்டித் தடி,
அழிக் கெழுதும் கொப்பி,
அயலாரின் வசை மாரி...
எல்லாம் போய் —

உத்தியோகப் பெண்ணு...
உயர் ரக வீடு...
இலட்சங்கள் ஐந்து...
அகுற்கு மேல் ஆபரணம்...
இனாமாக இன்னும்...
சில லட்சம்
ஏனோ..?
ஓ... நான் உழைக்கும்
மாப்பிள்ளை!

பகலூர்
கோ. பத்மநாதன்

### மணம்

சமாதான மேடையிலே
மணம் முடிக்க
ஆசை கொண்டேன்
காதல் நாயகியோ
கைப்பிடிக்க மறுத்து
விட்டாள்!
மன மோதல் தொடங்கியதால்
மணம் தள்ளிப் போகிறதே...
சீர் வரிசை நாயகியோ
தீர்வுத்திட்டம் கேட்கின்றாள்!

— புதுவை திருநாவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சை நிற வயல்

பச்சை நிற வயல்களாம்
பசுமையான வயல்களாம்
இச்சையாக நானுமே
இயற்கை அழகை ரசிப்பேனே

இரையும் நமக்குக் கிடைக்கவே
இறைப்பாய் வாரி, நெல்லையே!
பசியால் வாடும் மானிடரின்
குறையைப் போக்கி மகிழ்வாயே!

- அ. பவித்திரன்
(நாவற்குழி மகா வித்தியாலயம்.)

## வானில் நீந்தும் பட்டம்

சின்னச் சின்னப் பட்டம்
சிறிய அழகுப் பட்டம்
வண்ண வண்ணப் பட்டம்
வானில் நீந்தும் பட்டம்

ஜெற் போலப் பாயும்
சிட்டுப் போலத் தாவும்
காற்றில் மிதந்து நிற்கும்
கண்ணைக் கவரும் பட்டம்!

வாலை ஆட்டும் அழகு
வார்த்தை இல்லை விளக்க
நூலுக் கேற்ற உயரம்
நிமிர்ந்து பறக்கும் பட்டம்!

- ம. லாவண்யா
ஆண்டு 4, ஊரெழு கணேசா வித்தியாலயம்.

## முள்ளுக் கம்பி

முள்ளுக்கம்பி முள்ளுக்கம்பி
வெள்ளி நிற முள்ளுக்கம்பி
வேலி அடைக்க உதவும் கம்பி
வேட்டையாடப் போட்ட கம்பி

வீதியாலே நடந்து சென்றால்
வீம்பு செய்யும் முள்ளுக் கம்பி
அசட்டையாக நாங்கள்
சென்றால்
சட்டை கிழிக்கும் முள்ளுக்கம்பி

சேலையையும் கொழுவும் கம்பி
லுங்கியையும் இழுக்கும் கம்பி
நீண்ட தூர முள்ளுக்கம்பி
வீதியோரம் போட்ட கம்பி

நாட்டுக்குள்ளே போட்ட கம்பி
நடக்க வைக்கும் முள்ளுக் கம்பி
நாதியற்ற எங்களுக்கு
தேவை தானா முள்ளுக்கம்பி

- துவாரகா யாதவகுலசிங்கம்
ஆண்டு 6 ஏ, வேம்படி மகளிர் கல்லூரி.

## முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்



ஒரு நாள் ஒரு காகம் தண்ணீர் கிடைக்காமல் எங்கும் பறந்து அலைந்து திரிந்தது. தாகத்தினால் மிகவும் களைப்படைந்த காகம் ஏமாற்றத்துடன் மரக்கிளையில் வந்து அமர்ந்தது.

காகம் எங்காவது ஒரு சொட்டுத் தண்ணீர் கிடைக்காதா? என்ற ஏக்கத்துடன் சுற்று முற்றும் பார்த்தது. தூரத்தில் ஒரு ஜாடி இருப்பது அதன் கண்ணில்பட்டது. அந்த ஜாடியில் தண்ணீர் இருக்கும் என்ற ஆவலுடன் அருகேசென்று அமர்ந்தது.

ஜாடிக்குள் எட்டிப் பார்த்த போது அதில் சிறிது தண்ணீர் இருப்பது தெரிந்தது. ஆனால் காகத்தினால் அத் தண்ணீரைப் பருக முடியவில்லை. ஏனெனில் தண்ணீர் காகத்தின் சொண்டுகளுக்கு எட்டவில்லை. ஜாடியில் அரைவாசி உயரத்துக்குத் தண்ணீர் இருந்தது.

''கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே'' என்று கவலையுடன் இருந்த காகத்துக்குப் பளிச்சென்று மூளையில் ஒரு தந்திரம் பிறந்தது. சிறு சிறு கற்களைப் பொறுக்கி ஜாடியினுள்ளே போட்டது உடனே தண்ணீர் சிறிது சிறிதாக மேலே உயர்ந்து வந்தது.

முடிந்த மட்டும் தலையை உள்ளே செலுத்திய காகம் தன் தாகம் தீரத் தண்ணீரைக் குடித்தது. எதையும் முடியாது என்று விட்டுவிடக் கூடாது. முயற்சி செய்து பார்க்க வேண்டும் முயற்சி திருவினையாக்கும். ஆகவே சிறு பிள்ளைகளாகிய நாம் சோம்பல் தவிர்த்து எதையும் ஆவலோடு முயற்சி செய்து பார்க்கப் பழகுதல் வேண்டும்.

- ஸ்ரீ. சத்தியபாமா

## இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்) படும் பலன்கள் இருப்பதனால் பொருள்களில் அவதானமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் பொறுப்புக்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் எதிர்பாலாரின் கண்டிப்புக்களுக்கு ஆளாக நேரிடும். தூரதேசத்து பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அயலவர்களுடன் கொடுக்கல் வாங்கலில் புகைச்சல் ஏற்பட இடம் உண்டு. நீங்கள் என்ன நன்மைகளை இனஜனங்களுக்குச் செய்தாலும் குறை சொல்லியபடியே இருப்பார்கள். அதற்காக உதவிகள் செய்யாது விடாதீர்கள்.

★ அதிர்ஷ்ட திகதி: 9,12,14
★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

**துலாம்:** ஒரே சக்கரத்தில் சுழன்று சுழன்று வரும் சைக்கிள் சில்லுமாதிரி வாழ்க்கையும் சுற்றிச் சுற்றி வருகிறதே எனச் சலிப்படையாதீர்கள். குறைவில்லாமல் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தாலே கொடுத்து வைத்தவர்தான். கஷ்டநஷ்டங்களை சமநிறைகொண்டு சரிபாருங்கள். சொந்தபந்தங்களுடன் நிதானமாக இருங்கள். தொழில் ஸ்தானத்தில் உங்கள் குறைகளைச் சொல்லுவார்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். அடிக்கடி பதற்றம் வரும். தந்தை வழியில் பிரச்சினைகள் உருவாகும். புதிய இடமாற்றம் சிலருக்கு ஏற்படலாம் முழங்கால், வயிறு சம்பந்தமான இடங்களில் நோவரலாம். பொருள்களில் கவனமாக இருக்கவும். எதிர்ப்பாலார் நன்மை செய்வார்கள் இருப்பினும் குறையும் இருக்கத்தான் செய்யும். வெளிநாட்டுச் செய்திகளால் நன்மைகள் வரும்.

★ அதிர்ஷ்ட திகதி: 12, 14
★ அதிர்ஷ்ட நாள்: புதன் வியாழன், வெள்ளி.

**விருச்சிகம்:** உங்களை எல்லோரும் சண்டைக்காரர். சடுபுடு ஆள் என்றுதான் நினைக்கின்றார்கள். ஆனால் உங்களது, திடமான, உதவி செய்யும் மனோபாவத்தை நினைக்கின்றார்கள் இல்லை. தொழில்ஸ்தானத்தில் கலக்கம் வரும். நம்பியவர்கள் ஏமாற்ற முனைவர். எதிலும் நிதானமாக இருக்கவும். வாக்குக்கலக்கம் ஏற்படும். குடும்பத்தில் புத்திரருக்காகவோ அல்லது சகோதரங்களுக்காகவோ அதிக பொருள் செலவுகள் ஏற்படும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். எதிர்ப்பாலாரால் உதவிகள் கிடைக்கும். சகோதரவழியினரின் உதவிகளால் அதிக நன்மைகள் ஏற்பட இடம் உண்டு. அடிக்கடி அலைச்சல் ஏற்படும். வாய்வு ரோகங்கள் கொடுக்கும். கைகால் விறைப்பு அல்லது காயங்கள் வர இடம் உண்டு. கேட்டையில் பிறந்தால் சோதனையும், வேதனையும் வரத்தான் செய்யும். கவனமாக இருக்கவும்.

★அதிர்ஷ்ட திகதி, 10,12,14
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி

**தனுசு:** வாழ்க்கைச்சக்கரம், நன்மை தீமை என மாறி மாறித்தான் நடக்கும். நாம் நினைத்தபடி எல்லாம் நடந்து விடாது. ஓடி ஓடித் தேடினாலும் நாடிவருவது கொஞ்சம் தான் எனச் சிந்தியாதீர்கள். அளந்த அளவுப்படிதானே பலன்கள் நடக்கும். உங்களால் இரகசியங்களைக் காப்பாற்ற முடியாது. அதனால் பல இழப்புக்களைச் சந்தித்தபடி இருப்பீர்கள். பிழைகளைச் செய்தாலும் அகப்பட்டு விடுவீர்கள் ஒன்று மட்டும் உண்மை எதையும் ஒளிக்காமல், மறைக்காமல் பிறருக்கு நீங்கள் உரைப்பதனாலே உங்கள் மனப்பாரம் மட்டும் குறையும். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை என மாறிமாறிப் பலன்கள் நடக்கும். திடீர் கோபத்தால் குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் வரத்தான் செய்யும். நீங்கள் பூராடத்தில் பிறந்திருந்தால் கொஞ்சம் மனப்பாரம் இருக்கும். காணி பூமித் தகராறு சென்றவிடத்தில் உங்களை குற்றவாளியாக்க முனைவர். உதவிகேட்டு எவரிடமும் செல்லாதீர்கள். பின்பு கவலைப்படுவீர்கள். வழக்கு கணக்கு எனப் போராடாமல் கொஞ்சம் பொறுமையாக இருக்கவும். பக்கத்தில் இருக்கும் சோதிடரிடம் ஆலோசனை பெறுங்கள்.

★ அதிர்ஷ்ட திகதி: 9, 10, 12; 14
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி.

**மகரம்:** உங்கள் வாழ்க்கையில் எதிர்ப்பாலாருடன் போட்டி போட்ட காலமே அதிகம். பணம், பதவி, எனத் தேடி ஓடி பல ஞானம் பெற்றிருப்பீர்கள். உங்கள் எதிர்நீச்சல் நீங்கள் ஓயும் மட்டும் தொடரும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்கள் உதவிகள் செய்தாலும், சக ஊழியர்களால் நீங்கள் குறை கேட்கநேரிடும் என்றாலும் எடுத்த காரியங்களில் நற்பலன்கள் முன்னேற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். வாகன [illegible] லாம். ஆலயச் செலவுகள் அதிகரிக்கும். தர்மத்திற்காகச் செலவுகள் செய்வதில் கூடிய சிந்தனை வேண்டும். திருவோணக் காரர்கள் ஒரு கோணத்தை ஆளுவதில் — அதாவது உலகில் நன்மைகள் பெறுவதில் சிந்தனை வேண்டும்.

★ அதிர்ஷ்ட திகதி: 10, 14
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

**கும்பம்:** எல்லோருடனும் வாக்குக் கலகம் செய்கிறீர்களாமே. ஏன் பிடிவாதம்? கொஞ்சம் பொறுமையாகக் காரியங்களைச் சாதிக்க முயலுங்கள். ஒருபக்கம் சனீஸ்வரன் ஏழரையாகவும், மறுபக்கம் 12 இல் வியாழன் விரயத்தைச் செய்பவனாகவும் இருக்கும் பொழுது நிதானமாக நாம் நடக்க வேண்டாமா? விதிவசப்பட்டு பொருளை இழக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். வெளிநாடு, —அந்நியர் என பொருள் செலவழித்துக் கலங்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். தேவையற்ற பிரயாணங்களை விட்டு விடுங்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து இருக்கும். குடும்பத்தில் எதிர்பாலாருடன் வாக்குவாதப்படாமல் அவர்களின் கருத்துக்களைச் செவிசாய்த்து மதிப்புக் கொடுத்து செயற்படுங்கள். என்ன இருந்தாலும் பக்கத்தில் இருப்பவர்களை விட தூரத்தில் உள்ளவர்கள் அவசரத்திற்கு உதவிக்கு வரமாட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? சனீஸ்வரனுக்கு அர்ச்சனைகள் செய்து வாவும்

★ அதிர்ஷ்ட திகதி: 9,10,14
★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு: திங்கள், வெள்ளி.

**மீனம்:** உங்களுக்குஎதையும் தாங்கும் இதயம் வேண்டும். எதற்கும் தைரியத்துடன் இருங்கள். இன்பதுன்பங்களுக்கு மத்தியிலேயே நாம் வாழுகின்றோம். இந்தக்காலத்தில் யாரையும் நம்ப முடியாது. தொழில் ஸ்தானத்தில் அதிக செலவு, பொருள் முடக்கங்கள் ஏற்பட்டபடி இருக்கும். புத்திரராலோ அல்லது சகோதரங்களாலோ கலக்கங்கள் ஏற்படும். விதிவசப்பட்ட பலன்கள் நடக்க இருப்பதனால் குலதெய்வ வழிபாடு முக்கியமாகும். அடிக்கடி மறதிகள் ஏற்படும். கறுப்பு, பழுப்பு நிறப் பொருள்களை பாவனையிலிருந்து 2 வருஷத்திற்கு நீக்குவது நல்லது. ஆலயங்களுக்கு அடிக்கடி சென்று வாருங்கள். அல்லது ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி போய் வரவேண்டி வரலாம். சனீஸ் [illegible] வும்.

★ அதிர்ஷ்ட திகதி: 10, 15
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி




## சாபத்தால் செடியான இளவரசி

முன்னொரு காலத்தில் இளவரசியும் பணிப்பெண் ஒருத்தியும் மிகவும் நட்பாக இருந்தார்கள். ஒருவர் மீது ஒருவர் உயிரை வைத்திருந்தனர். எங்கு சென்றாலும் இணைந்தே செல்வார்கள். ஒருநாள் இருவரும் ஆயிரக்கணக்கான ரோஜாச் செடிகள் நிறைந்துள்ள ஒரு பூங்காவிற்குள் நுழைந்தார்கள். ஒருவர் மீது ஒருவர் பறித்த ரோஜாப் பூக்களை எறிந்து மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டு இருந்தனர்.

ஆனால் இளவரசி எறிந்த பூ ஒன்று தவறுதலாக அந்த வழியாகச் சென்ற முனிவரின் மீது பட்டு விட்டது. இதனால் கோபம் கொண்ட அம்முனிவர், ''என் மீது ரோஜாப்பூவை எறிந்ததால் நீயும் அந்தப் பூங்காவிலே ஒரு ரோஜாச் செடியாக மாறக்கடவது'' என்று சாபம் இட்டார்.

உடனே இளவரசி முனிவரின் கால்களிலே விழுந்து வணங்கி ''நான் அறியாமல் செய்த சிறுபிழைக்கு இவ்வளவு பெரிய தண்டனையா?'' என்று கதறி அழுதாள்.

இதைக்கேட்டு மனம் இளகிய முனிவர், ''நீ பகலில் மட்டுந்தான் ரோஜாச்செடியாக இருப்பாய், இரவில் உன் சுய உருவத்தை அடைவாய்'' என்று கூறினார்.

''முனிவரே! உங்கள் சாபத்தில் இருந்து நான் எப்பொழுது விடுதலை அடைவேன்'' என்று கேட்டாள் இளவரசி.

அதற்கு முனிவர் ''என்றாவது ஒருநாள் இரவு மழை பெய்ய வேண்டும். மறுநாள் இங்குள்ள ரோஜாச் செடிகளுள் உன்னை யாராவது எப்படியாவது கண்டு பிடித்து வேரோடு பிடுங்கி எறிந்தால் நீ சுய உருவம் பெறுவாய்'' என்று கூறித் தன்வழியே சென்று விட்டார். அன்று முதல் இளவரசி பகலில் ரோஜாச்செடியாகவும் இரவில் சொந்த உருவத்தோடும் இருந்து வந்தாள்.

வெகு நாள்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு நல்ல மழை பெய்து ஓய்ந்தது. காலையில் வழக்கம்போல் இளவரசி ரோஜாச் செடியாக மாறினாள்.

இளவரசியின் பணிப்பெண் தன் அறிவுக் கூர்மையினால் ரோஜாச் செடிவடிவத்தில் இருந்த இளவரசியை மிக எளிதாகக் கண்டுபிடித்தாள். அந்தச் செடியை வேரோடு பிடுங்கினாள். உடனே இளவரசி சுய உருவம் அடைந்தாள். எப்படி அந்தப் பணிப்பெண் பல ரோஜா செடிகளுக்கு நடுவில் செடியாக இருந்த இளவரசியைக்கண்டு பிடித்தாள்?

விடை:- மழை பெய்த இரவு முழுமையும் இளவரசி அரண்மனையில் இருந்தாள். காலையில் மழைவிட்ட பிறகே அவள் ரோஜாச் செடியாக மாறினாள். ஆகவே மழையில் நனையாத, மழைத்துளி படியாமல் இருக்கும் ரோஜாச் செடி எதுவோ அதுவே இளவரசி.

—செல்வி கிருஸ்ணசாமி துர்க்காம்பிகை.
யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாற்றலை வளர்ப்பது எப்படி?

பரீட்சைக்கு முன்பு எல்லாவற்றையும் நன்றாக படித்துவிட்டது போலவும், எந்தக் கேள்வியைக் கேட்டாலும் பதில் எழுதிவிட முடியும் என்கிற நம்பிக்கை இருப்பது போலவும் பலருக்கு இருக்கும். ஆனால் தேர்வுஎழுதும்போது கேட்கப்பட்டுள்ள கேள்விக்கு என்ன பதில் என்று சடடென்று நினைவுக்கு வராது.

இதற்கு என்ன காரணம் என்று அலசி ஆராய்ந்த மனோதத்துவ அறிஞர்கள் கூறுகின்ற காரணங்கள் ஏழு. அவை:-

1. ஆர்வம் இன்மை
2. முயற்சி இன்மை
3. சோம்பல்
4. பயம்
5. மனக்குழப்பம்
6. அதிர்ச்சி
7. தாழ்வு மனப்பான்மை

இவற்றுள் ஏதாவது ஒன்றாலோ, ஒன்றுக்கு மேற்பட்டவற்றாலோ படித்தவையெல்லாம் தேவைப்பட்ட சமயங்களில் ஞாபகத்துக்கு வந்து கைகொடுப்பதில்லை. இந்த ஞாபக மறதி என்கிற சண்டித்தனத்தின் காரணமாக, மாணவர்கள், பல நாள்கள் கஷ்டப்பட்டு, இரவும், பகலும் கண் விழித்துப் படிக்கின்ற விஷயங்கள் மறந்து போய் சமயத்தில் கழுத்தறுத்து விடுகின்றன.

பரீட்சைக்கு என்ன படிக்க வேண்டும், எப்படிப் படிக்க வேண்டும் என்று ஒரு திட்டவட்டமான செயல் முறையை வகுத்துக் கொள்ளாத மாணவர்கள் மனக்குழப்பத்துக்கு ஆளாகி, தேர்வுகளில் தோல்வியைத் தழுவுவது சகஜம்.

"நாமெல்லாம் எங்கே தேறப் போகிறோம்?" என்கிற தாழ்வு மனப்பான்மை, வெற்றியின் முதல் எதிரி என்பதை மாணவர்கள் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது.

படிக்கும் விடயத்தைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, அதே சமயம், ஒரு பகுதியையும், அடுத்த பகுதியையும் தொடர்புபடுத்திப் படித்தால், படித்தது எளிதில் மறக்காது.

கற்றலில் கேட்டலே நன்று என்பதற்கு ஏற்ப, ஒரு விஷயத்தைத் தானாகவே படித்துப் புரிந்து கொண்டு, நினைவில் நிறுத்துவதைவிட, வகுப்பில் ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் போதே, கருத்துடன் ஊன்றிக் கவனித்தால் சட்டென்று மனதில் பதிந்து விடும்.

வீட்டுக்கு வந்தபின் பாடசாலையில் படித்ததைமறுபடி ஒரு முறை படித்தாலே போதும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆசிரியர் சொல்லிக் கொடுக்கின்ற விஷயம் நமக்குப் புரியவில்லையென்றால் உடனடியாக ஆசிரியரிடம் அதை மறுபடி விளக்கிக் கூறும்படி கேட்பது மிகவுஞ் சிறந்தது. இல்லையெனில், தனக்குப் புரியாத விஷயத்தைப் புரிய வைக்கிற அளவுக்குப் புத்திசாலியான சக மாணவரிடம் கேட்டுத் தெளிவு பெறலாம்.

எங்களுக்குப் புரிந்த விஷயமாக இருந்தால் கூட, அது பற்றி மற்ற மாணவர்களுடன் கலந்துரையாடுகின்ற போது எமக்கு மேலும் தெளிவு பிறக்கும்.

கணக்குப் பாடங்கள் தான் பொதுவாகவே மாணவர்களுக்குக் கசப்பு. வகுப்பில் சொல்லித் தரப்படும் கணக்குகளை வீட்டில் மறுபடியும்ஒரு முறை செய்து பார்த்தால் நன்கு மனதில் பதியும். வெறுமனே பாடங்களைப் படிப்பது போல, கணக்குகளைப் படித்துக்கொண்டு போனால் கணக்குகளைத் தன்னிச்சையாய்ச் செய்யும் போது தவறு நேரிடுவது சகஜம். ★

# அந்தப் பத்து...

(V ஆம் பக்கத் தொடர்)

விலகிப் போனாள். மாணவிகள் யார் சொல்வது சரியென்று தெரியாமல் முணுமுணுவென்று பிரிந்தார்கள். சற்று நேரத்தில் அவர்கள் இரு கட்சிகளாய்ப் பிரிந்து இரண்டு பக்கத்திற்காக வாதாடியிருக்கவும் கூடும்;

தீபாவும் நானும் தனியாய் நின்றோம்.

"அக்கா, இதுக்குப் போய் ஏன் கவலைப்படுறீங்கள்?"

அவள் கேட்டாள்.

நேற்று வரை என் சினேகிதியாயிருந்த ராகினி இப்படியாகி விட்டாளே!

ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலே போதும். தலைவருக்கோ, செயலாளருக்கோ பெயர் கேட்ட போது நானே அவள் பெயரை முன்மொழிந்து, வழிமொழிந்துமிருப்பேன். இதற்குப் போய் இப்படித் தன் கசப்பை வெளிப்படுத்தி, ஒரு அன்பான, நேர்மையான, என் நட்பை அவள் இழந்து போனாளே? நானொன்றும் இந்த நிலை கிடைக்கவேண்டுமென்று அலையவில்லையே! அலைபவர்கள் எடுத்துக் கொண்டு போகட்டும்...

நான் சொன்ன போது தீபா என்னை வினோதமாய்ப் பார்த்தாள்.

"அக்கா, உங்களுக்கு உலகமே விளங்கேல்லை..." என்று சொல்லிப் 'பெரிய மனிசி' போல் சிரித்தாள்.

"என்டாலும்... என்ன இருந்தாலும்..."

"என்னக்கா அழுறீங்களோ...?" நடந்து கொண்டிருந்த போது என் விசும்பலையுணர்ந்து முகம் நிமிர்த்தித் துடைத்தாள்.

"முள்ளை, முள்ளாலை தானக்கா எடுக்க வேணும்; அதுதானக்கா அப்படி ஒரு போடு போட்டேன்..."

எனக்கு ராகினியின் போக்குத் தந்த அதிர்ச்சியோடு யோசித்தேன்.

நேற்றுவரை நம்பியிருந்த ஒருத்தி தன் சுயரூபம் காட்டிப் பிரித்து போய்விட்டாள். ஒருத்தி செலவாய்ப் போக இன்னொருத்தி வரவாக வந்திருக்கிறாள். இவளும் நாளைக்கு என்னில் ஏதோ ஒன்று ஒத்துப் போகாமல்... என்னோடு மல்லுக்கு நின்று ...என்னை அழவைத்து.. ...

இவளா இப்போது என் கண்ணீர் துடைக்கின்ற இவளா?

இல்லை இப்படி நினைக்காமலிருப்பதே இப்போது எனக்குச் சுகமானது.

"அக்கா..."

கிசுகிசுப்பாய்க் கேட்டாள் காதிற்குள்.

"நான் துடைச்ச விடுகிறதைவிட, வேறையாராவது துடைச்சு விட்டாத்தான் அழுகை நிற்குமோ...?"

குறும்பாய் மொழிந்து கன்னத்தைக் கிள்ளிவிட்டு என்கை ஓங்கலுக்கு பயந்து வீச்சாய் ஓடிவிட்டாள்.

அதற்குப்பிறகு அவளைச் சந்திக்கின்ற அந்த சந்தேஷக் கணத்திற்காகக் காத்துக் கிடந்தேன். ஆனால் அவள் பிறகு வரமாட்டாள் என்பது உறுதியான போது நான் ஏங்கித்தான் போனேன். அவளுடன் பஸ்ஸிற்குக் காத்திருக்கிற கூட்டம் கலகலப்பில்லாமலே பஸ்ஸேறிப் போய்... தினமும் அவள் பந்தடிக்கிற வேப்பமர நிழல் வெறுமையாகி அவள்... எங்கோ போய்விட்டதாய் எல்லோராலும் பகிரங்கப் படுத்தப்பட்டு, ... இரண்டு சொட்டு அனுதாபமொழிகள் உதிரப்பட்டு... அவள் மெல்ல மெல்ல மறக்கப்படலானாள்.

ஆனால் என் நெஞ்சில்...?

எங்கோ வேரோடுபிடுங்கப் பட்டு எறியப்பட்ட மரங்களாய்...ஒங்கெங்கோ இடம் பெயர்ந்து, இறுதியில் சொந்த இடம் சேர்ந்து ஆறுதலாய் மூச்சுவிட்ட கணங்களில் இந்தக் கடிதம்... சித்ராவால் குறுக்கி எழுதப்பட்ட இந்த விஷயம்...

தீபா செத்துப் போனாள்.

மாலைப் பொழுதின் மங்கல் வெளிச்சத்தில் கண்ணீர் திரையிட்ட கண்களோடு அந்த வரிகளைத் திரும்பத் திரும்பப் படிக்கிறேன். இவை பொய்யாகவே ஆகி, பொய்யான வசனங்களாகவே இருக்கக்கூடாதோ...?

யார் துடைத்தால் இந்தக் கண்ணீர் நிற்குமென்று கேட்டாயே! நீ துடைத்தால் தான் நிற்குமென்று உனக்குத் தெரியாதா தீபா ..?

அந்த வேளையில் நீ யாரை நினைத்திருப்பாய்...?

அம்மா, அப்பா எல்லோருமேயிருந்த போதும், யாருமேயில்லாமல் நீ எந்தக் காட்டில் இந்த நினைவுகளைச் சுமந்து ஏங்கியிருப்பாய்...?

பேய்ப்படம் பார்க்கும் போதே வீட்டைப் பூட்டி வைத்துப் பார்த்ததாகச் சொன்னாயே...? அங்கு உனக்கு விளைந்த பயத்தினைக் கொல்லும் துணிச்சல் எப்படி வந்தது...? அன்று ராகினியிடம் நியாயம்கேட்ட அதே ஆவேச உணர்வு தானா...?

உன் குடும்பம் அறிந்திருக்குமா, நீ நிரந்தரமாகவே பிரிந்து விட்டாயென்று...? அறிந்திருக்கக் கூடும். அறிந்திருக்காமலும் விடலாம். அதற்கு முன் நீ எங்கென்று தெரியாமலே உன் அம்மா உனக்காக எள்ளெண்ணெய் எரித்தும், விரதங்கள் பிடித்தும் உனக்காக இறைவனிடம் மன்றாடியிருக்கலாம்.

உன் அண்ணனோ, தம்பியோ (இருந்தால்) நீ திரும்பி வந்தவுடன் காவடி எடுப்பதாக நேர்த்தி வைத்திருக்கலாம்...

உன் அப்பா சொல்லாமலே உள்ளத்தில் ஒழித்து வைத்த அன்போடு, உனக்காகத் தினமும் உருகி உருகித் தவித்துப் போயிருக்கலாம்.

அந்தவரிசையால் யாருக்கும் சொல்லாமல், உனக்காக நான் கோயிலிலே அடி அழித்ததை நீ அறிவாயோ தோழி...?

உன் பிரிவின் நுனி கடித்த ஒவ்வொரு வேளையிலும், துயரம் கசக்க நான் உனக்காகக் காத்திருந்ததை நீ அறிவாயா...?

இடம் பெயர்ந்த வேளைகளில் வெறு வயிற்றோடு கிடக்க நேர்ந்த சந்தர்ப்பங்களில் கடையாய்முழு நிறைவோடு சாப்பிட்டுவிட்டு வந்த "பாறணைச் சோறு" பலரது நினைவுகளையும் அலைக்கழித்ததே! அதேபோல் தான் நானும் என் நட்புகளுக்கிடையே வெறுமையை உணர்ந்தபோது உன்னோடு கழித்த அந்தப்பத்து நிமிடங்களும் என் நினைவை அலைக்கழித்தன.

தீபா... இது எவ்வளவு பயங்கரமான உண்மையாகிப் போனது...? நீ ஏன் போனாய்...? எதற்குப் போனாய்...? என்ற எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைக்காது போனாலும், நீ ஒரு அன்பான பெற்றோரின் மகளாய், இனிய சகோதரர்களின் உடன்பிறப்பாய், இவளின் ஒரு குட்டிச் சினேகிதியாய் எவ்வளவு துயரங்களோடு நினைவு கூரப்படுகின்றாய்...?

ஏய்... என் பிரியமுள்ள சினேகிதியே! உன் ஊர் எது...? வீடு எது...? அன்னை யார்...? தந்தை யார் ...? உடன்பிறப்புக்கள் ... எல்லாமே கேள்விக் குறியாகிப் போக யாரிடம் நான் துக்கம் விசாரிக்க...? யாரென்று நான் என்னை அறிமுகப் படுத்திக் கொள்ள...?

ஓர் அப்பாவி அக்கா இவள் என்று என்னை அறிமுகப் படுத்த நீ எங்கே...?

எந்த மரங்களில் நீ உரமானாய்...?

எந்த மரங்களில் நீ மலர்களாய் பூத்துள்ளாய்...?

வானத்திலிருந்து உதிரும் ஒரு துளியில் நீ உயிருடனிருந்த கடைசி நிமிடங்களில் எதையோ எண்ணி நீயழுத கண்ணீரின் ஓர் அணுச் சிதறுமா...?

தீபா... தீபா... நீ செத்துப்போனாயா...?

என் மலர் போன்ற இதயத்தில் பாறாங்கல்லாய்க் கனக்கும் துயரத்தை அழுக்கி விட்டு தீபா நீ செத்துப் போனாயா...? ★

# தான் முன்வைத்துள்ள...

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு எதிராக வாக்களிக்கும்படி தமது மக்களை அவர் கோருவாரா என்பது கேள்விக்குறியே என்கின்றனர் அவதானிகள். எனினும் அரசின் நிலைப்பாட்டால் அதிருப்தியுறும் அவர், தீர்வுத்திட்டத்தை ஆதரிக்கும்படி தமது மக்களை பகிரங்கமாகக் கோராமல் போகலாம் என்றும் ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

இ. தொ. காவைபொறுத்தவரை கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறையைப் பிரித்து ஊவா மாகாணத்துடன் இணைப்பது அக்கட்சிக்கும் அதன் தலைவர், அமைச்சர் தொண்டமானுக்கும் வேம்பாய்க் கசப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாறை சிங்களப் பிரதேசத்தை ஊவா மாகாணத்துடன் இணைப்பதால் அந்த மாகாணத்தில் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் கணிசமாகக் குறைக்கப்படும் என்று இ. தொ. கா. அஞ்சுகின்றது.

அத்துடன் வடக்கு—கிழக்கு துண்டுபடாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டியது அவசியம் என்றும்—

இந்தியாவில் காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருப்பது போன்று ஈழத் தமிழ் மக்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் அதிகாரப் பரவலாக்கல் முறை ஒன்று இங்கும் நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என்றும்—

அமைச்சர் தொண்டமான் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றார்.

இந்நிலையில் வடக்கு—கிழக்கு இணைப்பை கேள்விக்குரியதாக்கும்—அம்பாறை சிங்களப் பிரதேசத்தை கிழக்கிலிருந்து பிரித்து ஊவாவுடன் இணைக்கும்—ஒரு தீர்வுத்திட்டத்தை ஆதரிக்கும்படி தமது மக்களைத் தொண்டமான் கோரமாட்டார் என்பதே பலரின் எதிர்பார்ப்பு.

தமிழ் பேசும் மக்களின் ஏனைய கட்சிகளும் இ. தொ. காவும் இத்தகைய நிலையை எடுத்தால் அதற்கு முரணாகாத போக்கையே மலையக மக்கள் முன்னணியும் பின்பற்றும் என்று நம்பலாம்.

ஆக எஞ்சி நிற்கும்—சர்ச்சைக்குரிய—தமிழ்க் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி தான்.

அரசுத் தரப்புக்கு ஆதரவான போக்குடையவர்களின் கட்டுப்பாட்டில் அக்கட்சியின் தலைமைத்துவம் சிக்கியிருப்பதாகப் பொதுவாகப் பேசப்படுகின்றது.

அக்கட்சியில் உள்ள தமது கைப்பொம்மைகளை வைத்து —அல்லது தமது அழுத்தம் மூலம்—தாம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை ஆதரிக்கும்படி தமிழ் மக்களை கோருமாறு அக்கட்சியைச் செய்யலாம் என்று அரசுத் தரப்பு நம்பக்கூடும்.

ஏற்கனவே இதே வழி மூலம் கிழக்கைத் துண்டாடி மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களை மட்டும் வடக்குடன் இணைப்பது என்ற ஏற்பாட்டுக்கு அக்கட்சியை வரவைப்பதில் அரசுத் தரப்பு வெற்றி கண்டுள்ளது.

ஆனால் அரசுத் தரப்பின் கைப்பொம்மைகளாக கூட்டணியின் தலைமைப் பீடத்தில் இருப்பவர்களுக்கு எதிராக கட்சிக்குள் அண்மைக் காலத்தில் பெரும் கோபாவேசம் எழுந்துள்ளது.

கூட்டணியின் கீழ் மட்டத்தைப் பொறுத்தவரை கிழக்கில் உள்ள அதன் அமைப்புகளே இன்றும் செத்துப் போகாமல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கட்சித் தலைமைப் பீடத்தினர் அரசுத் தரப்புக்குத் தலையாட்டும் பொம்மைகளாக இருப்பதை கூட்டணியின் கிழக்கு மாகாணப் பிரிவுகள் இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்கப் போவதில்லை என்பது ஓரளவு பகிரங்கமாகி உள்ளது.

இந்நிலையில் கிழக்கை மூன்று துண்டுகளாகப் பிரிக்கும் ஏற்பாட்டுடனும்—

வடக்கு—கிழக்கு இணைப்பைத் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் கட்டுப்பாட்டுடனும்—

முன்வைக்கப்படும் ஒரு தீர்வுத்திட்டத்தை ஆதரிக்கக் கூட்டணியின் தலைமைப் பீடம் முடிவு செய்யுமானால் அது கூட்டணியை 'குழம்பல் அணி' ஆக மாற்றி விடும் என்பது நிச்சயம்; ஏற்கனவே அதிருப்தியின் உச்சத்தில் இருக்கும் கிழக்கு மாகாண அடிமட்டத் தொண்டர்கள் தலைமைப் பீடத்தை ஒரு குழப்புக் குழப்பிய பின்னரே ஓய்வார்கள்.

ஒட்டு மொத்தத்தில் பார்க்கும் போது—

அரசு தான் தற்போது முன்வைத்துள்ள வடிவத்தில் தீர்வுத் திட்டத்தை இறுதி செய்து—

அது குறித்து மக்கள் கணிப்பைப் பெற ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்குமானால்—

தமிழ்க் கட்சிகளும் அதை ஆதரிக்கப்போவதில்லை; ஐ. தே. க. மற்றும் சிங்களத் தீவிரவாதக் கட்சிகள், அமைப்புக்கள் போன்றவையும் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை.

இக்கட்சிகளை எல்லாம் வெறும் தூசாக்கி விட்டு சர்வஜன வாக்கெடுப்பில் தனித்து நின்று வெல்லக் கூடியஆதரவும் மக்கள் சக்தியும் அரசுத்தரப்புக்கு உள்ளதா என்று பார்த்தால் அதுவும் கேள்விக்குறியாகவே உள்ளது.

ஆகவே தற்போதைய நிலையில் தனது தீர்வுத் திட்டம் குறித்து தமிழ்க் கட்சிகளுடன் ஓர் ஏற்பாட்டுக்கு வராமல் — அவற்றை ஒதுக்கிவிட்டு — சுயேச்சையாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு அரசு போகுமானால் அது தோல்வியையே சந்திக்க வேண்டியிருக்கும்.

அரசு சர்வஜன வாக்கெடுப்புக்கு போகுமா? தமிழ்க் கட்சிகளின்கோரிக்கைகளுக்கு இணங்குமா? அரசின் தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வர சாத்தியங்கள் உண்டா? — காலம் மட்டுமே இக்கேள்விகளுக்கு பதில்தரக் கூடும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பொது நூலகம்

# கிளின்ரன் - ஜியாங்செமின் உச்சிப் பேச்சால் அமெரிக்க-சீன உறவு அபிவிருத்தி அடையுமா?

## தைவான் பிரச்சினை தீரும் வரை முழுமையான உறவு சாத்தியமில்லை



கிளின்ரன்



ஜியாங் செமின்

தற்போதைய உலக ஒழுங்கில் அமெரிக்காவுக்கு அடுத்ததாக பெரிய வல்லரசாக உருவெடுத்து வரும் நாடு சீனா.

சீன ஜனாதிபதி ஜியாங் செமின் (Jiang Zemin) ஒக்ரோபர் இறுதியில் அமெரிக்காவுக்கு 8 நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டது மூலம் சீன — அமெரிக்க உறவில் புதிய தசாப்தம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய உலக ஒழுங்கில் சமாதானத்தையும் ஸ்திரநிலையையும் பாதுகாப்பதற்கு சீனாவின் பங்கு முக்கியமானது என்று கிளின்ரன் நிர்வாகம் கருதுகிறது.

அதேசமயம், முன்னைய தலைவர்கள் கடைப்பிடித்து வந்த கொள்கைகள் தொடர்ந்தால் சர்வதேச அரங்கில் சீனா தனிமைப் படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் பின்தள்ளப்பட்டு விடும் என்று சீன ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இத்தகைய நிலையில் ஜியாங் செமினின் அமெரிக்க விஜயமும் அமெரிக்க அதிபர் கிளின்ரனுடன் அவர் நடத்திய உச்சிப் பேச்சுக்களும் ஓரளவு சுமுகமாகவே நடைபெற்றுள்ளன. உறவுகளைப் பாதிக்கக்கூடிய விடயங்கள் ஆராயப்படவில்லை.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் உலகில் எஞ்சி உள்ள நான்கு கம்யூனிஸ்ட் நாடுகளில் சீனாவும் ஒன்று.

சீனாவின் சனத்தொகை 120 கோடி ஆகும். உலக சனத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு இது. அமெரிக்க சனத்தொகை 26 கோடி 20 லட்சம்.

நிலப்பரப்பைப் பொறுத்த வரை அமெரிக்காவும் சீனாவும் ஏறத்தாழ ஒரே அளவைக் கொண்டவை. 90 லட்சம் சதுர கிலோ மீற்றர் இந்த நாடுகளின் நிலப் பரப்பு.

### செங்கம்பள வரவேற்பு

ஒக்ரோபர் 28 ஆம் திகதி அமெரிக்கா வந்த ஜனாதிபதி ஜியாங் செமினுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. 21 மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டன.

சீன ஜனாதிபதி தமது விஜயத்தின் ஆரம்பத்தில் பேள் துறைமுகத்துக்குச் சென்றார். 2 ஆம் உலக மகா யுத்தத்தில் ஜப்பானின் விமானத் தாக்குதலுக்குள்ளாகிச் சேதமடைந்து நினைவுச் சின்னமாக அங்கு இன்னும் விடப்பட்டிருக்கும் அரிசோனா (Ari Zona) கப்பலுக்குச் சென்று கப்பல் மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட ஆயிரத்து 177 அமெரிக்க வீரர்களுக்கும் அஞ்சலி செலுத்தினார்.

திபெத்தியர்கள் மற்றும் மனித உரிமை பாதுகாப்பு இயக்கங்கள் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்தபோதிலும் ஜியாங் செமினின் பார்வைக்கு எட்டாத விதத்தில் பாதைகள் மாற்றப்பட்டு அமெரிக்க அதிகாரிகள் மிகவும் கச்சிதமாக நிலைமையைச் சமாளித்தனர்.

### ஆரம்பத்திலிருந்தே சீர்குலைந்த உறவு

1949ஆம் ஆண்டு மா—சே—துங் தலைமையில் கம்யூனிஸ்ட் சீனா உருவாக்கப்பட்ட நாளிலிருந்து 1972 இல் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸனின் சீன விஜயம் வரை சீன—அமெரிக்க உறவு சீரடைய எத்தகைய வாய்ப்பும் இருக்கவில்லை.

முன்பு போர்மோஸா என்று அழைக்கப்பட்டு வந்த தைவானுக்கு அமெரிக்கா அளித்துவந்த ஆதரவு, 1950—53 களில் இடம்பெற்ற கொரிய யுத்தம் காரணமாக கம்யூனிஸ்ட் சீனா உதயமான ஆரம்பத்தில் இருந்தே சீனாவும் அமெரிக்காவும் மோதல் நிலையையே கடைப்பிடித்து வந்தன. கொரிய பிரச்சினையின்போது வட கொரியாவுக்கு ஆதரவாக யுத்தத்தில் இறங்கிய சீனா அமெரிக்கப் படைகளுடன் நேரடியாகச் சண்டையிட்டது.

1972 இல் நிக்ஸனின் சீன விஜயம் சீனாவின் "மூங்கில் திரை"யை உடைக்க உதவியது.

எனினும் 1976ஆம் ஆண்டு மா—சே—துங் மரணமாகும் வரை சீன—அமெரிக்க உறவுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. 1979 ஆம் ஆண்டிலேயே ஓரளவு முழு அளவிலான ராஜதந்திர உறவுகளை இரு நாடுகளும் ஏற்படுத்திக் கொண்டன.

ரிச்சர்ட் நிக்ஸன் சீனா செல்வதற்கு வித்திட்டவர் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஹென்றி கிசிஞ்சர்.

அவர் பல தடவைகள் சீனாவுக்கு இரகசிய விஜயம் மேற்கொண்டு நிக்ஸனின் துணிச்சலான இந்த நடவடிக்கைக்கு வழி கோலினார்.

நிக்ஸனின் சீன விஜயத்தின் போது நிக்ஸனும் மா சே துங்கும் கைச்சாத்திட்ட ஷங்காய் பிரகடனம், இரு நாடுகளும் முதல் தடவையாக குறைந்த அளவில் இராஜீயத் தொடர்புகளை ஏற்படுத்த உதவியது.

குடியரசுக்கட்சி ஜனாதிபதியான நிக்ஸன் சீன விஜயம் மூலம் பெரும் அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

எனினும், வியட்நாம் யுத்தம், வாட்டர்கேட் ஊழல் காரணமாக தனது ஆட்சியின் இறுதியில் அவர் செல்வாக்கு இழக்க வேண்டியதாயிற்று.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலுள்ள பிரச்சினைகளில் முக்கியமானது தைவான் பிரச்சினை. மற்றையவை மனித உரிமைகள், அளவுக்கு மிஞ்சிய ஆயுத உற்பத்தி, வர்த்தகம் ஆகியவை.

1989 தியனன்மென் படுகொலைகளும் அமெரிக்க — சீன உறவுகள் வளர முட்டுக்கட்டையாக இருந்துள்ளன.

### திபெத் விவகாரம்

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சீராவதற்குத் தடையாக இருக்கும் பிரச்சினையில் திபெத் பிரச்சினையும் ஒன்றாகும். 1959 ஆம் ஆண்டு திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா அவப் பதவி கவிழ்த்து விட்டு தனது ஆதரவாளரான பஞ்சன் லாமா என்பவரை திபெத்திய தலைவராக சீனா நியமித்ததிலிருந்து இந்தப் பிரச்சினை ஆரம்பமானது.

அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின் போது ஆபிரகாம் லிங்கன் கறுப்பர்களின் அடிமைத் தளையை அறுத்து எவ்வாறு விடுவித்தாரோ அதே நிலையில்தான் திபெத்திய மக்களை சீனமீட்டதாக ஜியாங் செமின் தற்பொழுது கூறுகிறார்.

1959 ஆம் ஆண்டு சீன இராணுவம் திபெத்துக்குள் நுழைந்த போது தலாய் லாமா ஆயிரக்கணக்கான தனது ஆதரவாளர்களுடன் இந்தியாவுக்குத் தப்பி வந்து இந்தியாவில் அரசியல் தஞ்சம் கோரினார்.

1962 ஆம் ஆண்டு இந்தியாவும் சீனாவும் லடாக்கில் எல்லைத் தகராறை வைத்து யுத்தத்தில் இறங்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்ததுக்கு திபெத் பிரச்சினையும் ஓரளவுக்குக் காரணமாக இருந்தது.

[illegible] உரிமையை சீனா மதிக்க வேண்டும் என்று அமெரிக்கா கோரிவருகிறது.

### தைவான்

1949 இல் மா—சே—துங் தலைமையில் சீனாவில் கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

சீனாவின் ஒரு பகுதியாக இருந்த தைவானை (அப்பொழுது போர்மோஸா) அப்பொழுது கம்யூனிஸ்ட்டுகளுடன் அதிகாரப் போட்டியில் ஈடுபட்டிருந்த சியாங் கேஷேய்க் கைப்பற்றினார். சியாங்கே ஷேய்க்கின் படைகள் தைவானைக் கைப்பற்றி அமெரிக்காவின் ஆதரவுடன் அங்கு ஆட்சி அமைத்தன. அமெரிக்கத் தலையீடு காரணமாக மா—சே—துங்கின் படைகள் சடல் கடந்து தைவானுக்கு வரமுடியாது போனது. அன்றில் இருந்து தைவானையே அமெரிக்கா உண்மையான சீனாவாக அங்கீகரித்துவந்தது. ஐ.நா.பாதுகாப்புச்சபையில் வீட்டோ அதிகாரம் உள்ள ஐந்து நாடுகளில் தைவானும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

மா—சே—துங் தலைமையிலான கம்யூனிஸ்ட சீனாவை அமெரிக்கா அங்கீகரிக்க மறுத்து வந்தது.

ஆனால் 1972 நிக்ஸனின் சீன விஜயத்தின் பின்னர் உருவான படிப்படியான மாற்றங்களால் இன்று சீனா அமெரிக்காவினால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் வீட்டோ அதிகாரம் உள்ள நிரந்தர உறுப்பு நாடுகளில் சீனாவும் ஒன்றாக மாறிவிட்டது.

தைவான் சீனாவில் இருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதி; அது மீண்டும் சீனாவுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதே சீன ஆட்சியாளர்களின் கருத்து.

ஆரம்பத்தில் தைவானே உண்மையான சீனா என்று தெரிவித்து வந்த அமெரிக்கா கம்யூனிஸ்ட் சீனாவுடனான உறவுகள் அபிவிருத்தி அடைய ஆரம்பித்தபோது இரு சீனாக்கள் (கம்யூனிஸ்ட் சீனா — தைவான்) என்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தது.

ஆனால் தற்பொழுது கிளின்ரன் நிர்வாகம் ஒரு சீனா மட்டுமே இருக்க முடியும் என்றும் சீன மக்களே தைவான் குறித்துத் தீர்மானிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கிறது.

தற்போதைய உலக ஒழுங்குக்குள் சீனாவையும் சேர்த்துக் கொள்ளவேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு இருப்பதால் தைவான் சம்பந்தமாக அமெரிக்கா ஆரம்ப காலம் முதல் கடைப்பிடித்து வந்த நிலைப்பாடுகள் படிப்படியாகக் கைவிடப்பட்டு விடுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஹொங்கொங் இணைப்பு போன்று தைவான் இணைப்பு சுலபமானது அல்ல.

தைவான் இணைப்பு வெகு தூரத்திலேயே இருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஏனெனில் தைவான் பிரச்சினை தொடர்ந்து ஒரு சூடு பிடிக்கும் பிரச்சினையாகவே இருந்து வருகிறது.

1995 இல் தைவான் ஜனாதிபதி லீ தெங்ஹுய் (Lee Teng - Hui) அமெரிக்காவுக்கு விஜயம் செய்ததை சீனா ஆட்சேபித்தது. பதிலடியாக அமெரிக்காவுக்கு வெறுப்பூட்டும் விதத்தில் இராணுவ ஒத்திகை ஒன்றை சீனா நடத்தியது.

அதே ஆண்டு சீனாவின் குருஸ் ஏவுகணைப் பரிசோதனைகளை நோட்டமிடுவதற்காக அமெரிக்கா தனது இரு விமானம் தாங்கிக் கப்பல்களை தைவானின் கடல் பகுதிக்கு அனுப்பியது. சீனா தனது எதிர்ப்பைக் காட்டும் நோக்கத்துடன் வாஷிங்டனில் உள்ள தனது தூதுவரைத் திருப்பி அழைத்துக் கொண்டது.

உறவுகளைப் பாதிக்கலாம் என அஞ்சி ஜியாங் செமின்—கிளின்ரன் உச்சிப்பேச்சுக்களின்போது தைவான் பிரச்சினை பெரிய அளவில் தொடப்படவில்லை.

### மனித உரிமை மீறல்கள்

சீனாவில் நிலவிவரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள், வர்த்தகம் ஆகியவையே உச்சிப் பேச்சில் முக்கிய இடம் வகித்தன.

ஜனாதிபதி ஜியாங் செமின் தமது அமெரிக்க விஜயத்துக்கு முன்னர், தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்காக சீனாவில் சிறை வைக்கப்பட்டுள்ள முன்னணி அதிருப்தியாளர்களில் சிலரை விடுதலை செய்யலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அப்படி எதுவும் நடைபெறவில்லை.

சீனாவில் தலைமறைவாக இயங்கும் கத்தோலிக்க தேவாலய பிஷப் சூசிமின் (வயது 65) கைதாகி சிறை வைக்கப்பட்டுள்ளார்.

சீனாவில் கம்யூனிஸ ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் ஜனநாயகத்துக்காக குரல் கொடுத்த குற்றச்சாட்டின்பேரில் மற்றும் பலர் சிறையில் இருந்து வருகின்றனர்.

சீனாவுக்கு பொருளாதார உதவிகளை அமெரிக்கா வழங்குவதற்கு சமீப காலமாகத் தடையாக இருப்பது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள்தான்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து சீனாவினால் விடுபட முடியுமா என்பது தெரியவில்லை.

சீனாவைத் "தாஜா" பண்ண அமெரிக்கா எத்தனை சலுகைகளை வழங்கினாலும் தைவான் மீண்டும் சீனாவுடன் இணைக்கப்படும் வரை சீன — அமெரிக்க உறவுகள் முழு அளவில் சாத்தியப்படமாட்டா. ★

ஈராக் மூலம் பாடம் படித்த அமெரிக்கா, சீனாவின் அணு தொழில் நுட்ப இரகசியங்கள் ஈரானைச் சென்றடைந்துவிடக்கூடாது என்பதில் மிகவும் அவதானமாக இருந்து வருகிறது.

ஏனெனில் மத்திய கிழக்கு நாடுகளில் சீனாவின் நெருங்கிய நட்பு நாடாக ஈரான் இருந்து வருகிறது.

ஏற்கனவே கப்பல்களைத் தாக்கும் குருஸ் ஏவுகணைகளை சீனா ஈரானுக்கு விற்றுள்ளது.

வாஷிங்டனில் கடந்த வாரம் சீன — அமெரிக்கத் தலைவர்களுக்கிடையில் நடைபெற்ற உச்சிப் பேச்சுக்களில் இந்த விவகாரமும் முக்கிய இடம்பெற்றிருந்தது.

உலக உலா

என்.பி.சீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org